பக்கங்கள்: 16

விலை:20 ரூபா

# காலைக்கதிர்

Kalaikkathir

விடியல் 02 | வள்ளுவர் ஆண்டு 2049 | ஆடி 04 வெள்ளிக்கிழமை 20.07.2018 | கதிர் 256

## ஆயுதக் குழு நேற்றும் யாழில் அட்டகாசம்

யாழ்ப்பாணம், வண்ணார் பண்ணை, தாமரைக்குள வீதிப் பகுதியில் உள்ள வீடொன்றில் நேற்று இரவு 8.30 மணியள வில் வாள்கள், பொல்லுகள், தடி களுடன் நுழைந்த அராஜகக் கும்பல் ஒன்று வீட்டில் இருந்த ரி.வி., கம்பியூட்டர் முதலிய பெறு மதியான பொருள்களை அடித்து நொறுக்கி பக்கம் 14

## டெனிஸ் விவகாரம்

# முதல்வரிடமிருந்து பதிலே இல்லை!

## ஆளுநர் விசனம்





கொழும்பு, ஜூலை 20

டெனிஸ்வரன் விவகாரத்தை ஒட்டிமேன்முறையீட்டு நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பை நடைமுறைப் படுத்துவது தொடர்பில் உரிய பரிந்துரை களை வழங்குமாறு முதலமைச் சர் விக்னேஸ்வரனுக்கு நேரடியாகவும், தொலைநகல் மூலமும், அதிவேகத் தபால் மூலமும் எழுத்தில் அறிவுறுத்தல் வழங்கியிருந்தேன். ஆனால் இதுவரை பதிலேதும் கிடைக்க வேயில்லை.

- இவ்வாறு விசனத்துடன் நிலைமையைச் சுட்டிக்காட்டியிருக்கின்றார் வடக்கு மாகாண ஆளுநர் றெஜினோல்ட் குரே. பக்கம் 14

## மஹிந்தவுக்கு எதிரான விவகாரம்:

## ஒத்திவைப்பு வேளை பிரேரணை நாடாளுமன்றத்தில் ஒத்திவைப்பு



கொழும்பு, ஜூலை 20

கடந்த ஜனாதிபதித் தேர்தலின் போது மஹிந்த ராஜபக்ஷவுக்கு பெரும் தொகைப் பணம் சீனத் தரப்பினால் பிரசாரத்துக்காக வழங்கப்பட்டதுஎனத்தெரிவித்து நியூயோர்க் டைம்ஸ் பத்திரிகை யில் வெளியான செய்திக் கட் டுரை தொடர்பில் நேற்று நாடா ளுமன்றத்தில் ஒத்திவைப்பு வேளையில் பக்கம் 14

## பாலியல் துன்புறுத்தல் குற்றச்சாட்டில்


## புதனிரவு கைதான ஆசிரியருக்கு பிணை வழங்கியது நீதிமன்றம்

யாழ்ப்பாணம், ஜூலை 20

பதின்ம வயது மாணவிகள் இருவரை பாலியல் துன் புறுத்தலுக்குள்ளாக்கிய குற்றச்சாட்டில் நேற்று முன்தி னம் இரவு கைது செய்யப்பட்ட ஆசிரியர் யாழ்ப்பாணம் நீதிமன்றால் நேற்றுப் பிணையில் விடுவிக்கப்பட்டார்.

பாடசாலையின் அதிபராகக் கடமையாற்றியவர் மோசடிகளில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் பணி நீக்கம் செய் யப்பட்டார். அவரது பணிநீக்கத்துடன் இந்த ஆசிரியரும் சம்பந்தப்பட்டுள்ளார் என்ற காரணத் பக்கம் 14

## பொன்னாலையில் இருந்து நேற்று விலகியது கடற்படை



பொன்னாலை வரதரா ஜப் பெருமாள் ஆலயத் திற்கு சமீபமாக, ஆலய அன்னதான மடத்தில் தங்கியிருந்த கடற்படை யினர் நேற்று மாலை 6.30மணியளவில் அந்த இடத்தை பக்கம் 14

## கூட்டு எதிரணித் தரப்பு வேட்பாளராக ராஜபக்ஷ அல்லாதவரும் வரக்கூடும்!

## கோடி காட்டுகின்றார் பஸில் ராஜபக்ஷ



கொழும்பு, ஜூலை 20

வரும் ஜனாதிபதித் தேர்தலில் கூட்டு எதிரணியின் தரப்பில் ராஜபக்ஷ குடும்பத்துக்கு வெளியே உள்ளவர்களை வேட்பாளராக நிறுத்துவது குறித்தும் பரிசீலிக்கப்படுவதாக தெரிவித்துள்ளார் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் சகோதரரும் முன் னாள் அமைச்சருமான பஸில் ராஜபக்ஷ.

கொழும்பு ஆங்கில நாளிதழ் ஒன்றுக்கு அளித்துள்ள பக்கம் 14

## இனிது ரகசியம் அல்ல!

ஆரவாரமாக ஆரம்பிக்கப்படும் சில விடயங்கள், திடீரென - திடுதிப்பென - அம்சடக்காக அடங்கிப்போய் விடும். என்ன, ஏது என்று நோண்டி, துருவிப் பார்த் தால் அந்தத் திடீர் அடக்கத்துக்குப் பின்னர் பெரும் சூத்திரம் புதைந்து கிடப்பதைக் கண்டு பிடிக்கலாம்.

நேற்று அப்படி ஒரு சம்பவம் நடந்தது.

பக்கம் 03

## ஐ.தே.க. விசாரணைக் குழுவுக்கு விஜயகலா எழுத்து மூலம் விளக்கம்



கொழும்பு, ஜூலை 20

தமிழீழ விடுதலைப் புலிகளின் கை ஓங்கவேண்டும் என்று தான் தெரிவித்த கருத்துத் தொடர்பில் விளக்க மளித்து நாடாளுமன்ற உறுப்பினர் விஜயகலா மகேஸ் வரன், ஐக்கிய தேசியக் கட்சியின் விசாரணைக் குழுவுக்கு எழுத்துமூல சமர்ப்பணத்தை முன் வைத்துள்ளார்.

கடந்த சில மாதங்களில் பக்கம் 14

## சுதந்திரபுரத்தில் நேற்றும் வெடிபொருள்கள் மீட்பு



முல்லைத்தீவு, ஜூலை 20

முல்லைத்தீவு சுதந்திரபுர பகுதியில் அபாயகரமான வெடிபொருள்கள் சில நேற்று இரண்டாவது நாளாகவும் மீட் கப்பட்டுள்ளன எனப் புதுக்குடியிருப்பு பொலிஸார் தெரிவித்தனர்.

தனியார் ஒருவர் தனது காணிக்குள் இருந்த கிணறு ஒன்று சீரற்று இருந்த தால் அதனை அகழ்ந்து சீராக்க முயற் சித்துள்ளார். அதன் பக்கம் 14

## ரூ.8 ஆயிரம் கோடி நன்கொடை இலங்கைக்கு அமெ. வழங்குகிறது



கொழும்பு, ஜூலை 20

இலங்கையின் அபிவிருத் திச் செயற்பாடுகளுக்காக 8 ஆயிரம் கோடி ரூபாவை கொடையாக வழங்க அமெ ரிக்கா திட்டமிட்டுள்ளதாக, இலங்கையின் தேசிய கொள்கைகள் மற்றும் பொரு ளாதார விவகாரங்களுக்கான பக்கம் 14

## விஜயகலா விவகாரம்:

## சட்டமா அதிபரின் பரிந்துரை ஓரிரு தினங்களில் சபாநாயகருக்கு



கொழும்பு, ஜூலை 20

விடுதலைப் புலிகள் தொடர்பில் விஜயகலா மகேஸ்வரன் தெரிவித்த கருத்து குறித்த அறிக்கை இன்னும் ஓரிரு தினங்களில் சபா நாயகரிடம்கையளிக்கப்படுமெனபிரதியமைச்சர் எரான் விக்ரமரத்ன தெரிவித்துள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் பக்கம் 14

# கிளிநொச்சியில் டெங்கை கட்டுப்படுத்தும் செயற்பாடுகளில் தாமதம்; அசிரத்தை!

## அவ்வாறில்லை என்கிறார் பிரதி சுகாதாரசேவைகள் பணிப்பாளர்

கிளிநொச்சி, ஜூலை 20

கிளிநொச்சி மாவட்டத்தில் டெங்கு காய்ச்சல்பரவாமல் மேற்கொள்ளப்படும் கட்டுப்பாட்டு நடவடிக்கைகளில் தாமதம் ஏற்பட்டுள்ளது என பொது மக்கள் தெரிவிக்கின்றனர்.

இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது

டெங்கு நோய் பராவது தடுப்பதில் புகையூட்டல் மற்றும் சுற்றுச் சூழலை நுளம்புகள் வளரும் பொருள்கள் இல்லாது சுத்தமாகப் பேணுதல் ஆகிய இரண்டும் பெரும்பங்கு வகிக்கின்றன.

ஒருவர் டெங்குக் காய்ச்சலால் பீடிக்கப்பட்டிருக்கிறார் எனச் சந்தேகம் எழுந்ததும் அது குறித்துச் சிகிச்சை வழங்கும் வைத்தியரால் நோயாளியின் வசிப்பிடம் அமைந்துள்ள பகுதிக்குரிய சுகாதார வைத்திய அதிகாரிக்கு அறிவித்தல் வழங்கப்படும்.

சுகாதார வைத்திய அதிகாரி உடனடியாகப் பிராந்திய மலேரியாத் தடுப்பு இயக்கம் மற்றும் நோயாளியின் வசிப்பிடத்திற்குரிய பொதுச் சுகாதார பரிசோதகர் ஆகியோருக்கு டெங்கு நோயாளி குறித்த தகவலைத் தெரிவிப்பார்.

இதனைத் தொடர்ந்து மலேரியாத் தடைப்பகுதியின் விசேட புகையூட்டும் பிரிவினர் நோயாளியின் வீட்டுச் சூழலைக் குறிவைத்துப் புகையூட்டலை மேற்கொண்டு அங்கு இருக்கக்கூடிய நுளம்புகளைக் கொல்லும் நடவடிக்கையை மேற்கொள்வர்.

இவ்வாறுநுளம்புகளைஅழிப்பது எவ்வளவு விரைவாக முடியுமோ அவ்வளவு விரைவாகச் செய்யப்பட வேண்டும். காரணம், டெங்கு நோயாளி ஒருவரது வீட்டில் ஒரு நுளம்பு அவரைக் கடித்திருந்தால் அந்த நுளம்பு டெங்கு வைரஸ் தொற்றுக்கு ஆளாகி விடும். அவ்வாறு டெங்கு வைரஸ் தொற்றிய நுளம்பு அந்த வீட்டில் அல்லது அயலில் உள்ள சுகதேகி ஒருவரைக் கடித்தால், அந்தச் சுகதேகிக்கு டெங்கு வைரஸ் பரவி அவர் டெங்கு நோயாளியாக மாறுவார்.

ஆகவே டெங்கு வைரஸ் தொற்றிய நுளம்பு இன்னொருவருக்குக் கடித்து டெங்கு நோயைப்பரப்புவதற்குமுன்னரே அதனைக் கொல்லவேண்டும். இதுவே உடனடியாகச் செய்ய வேண்டிய நடவடிக்கையாகும்.

கிளிநொச்சி மாவட்டத்தில் அநேகமான நோயாளிகள் வெளிமாவட்டங்களில் இருந்தே வருகிறார்கள். அவர்கள் தமக்குக் காய்ச்சல்வந்ததும்தமதுவீட்டுக்கு வந்து, அங்கிருந்தே வைத்தியசாலைக்கு வருகிறார்கள். இவர்கள் டெங்குக் காய்ச்சலுடன் வீடுகளில் இருக்கும்போது அங்கு இவர்களை நுளம்பு கடித்தால் அந்த நுளம்பு இன்னொருவரைக் கடிக்குமுன்னர் அழிக்கப்படவேண்டும்.

அத்துடன் அந்த வீட்டிலும் அயலிலும் உடனடியாக விழிப்புணர்வுச் செயற் பாடுகள் மேற்கொள்ளப்பட்டு நுளம்பு உருவாகும் இடங்கள் அழிக்கப்பட்டு நுளம்புகளின் அடர்த்தி குறைக்கப்படவேண் டும்.

இதன்மூலம் மாவட்டத்தில் டெங்கு உள்ளூரில் பரவாமல் கட்டுப்படுத்தப்பட முடியும்.

இதன் அடிப்படையில்தான்; எவருக்காவது டெங்கு நோய் இருப்பதாக சந்தேகிக்கப்பட்டவுடன் உடனடியாக (24 மணி நேரத்தினுள்)நுளம்புகளைஅழிக்கும் நோக்குடன் அந்த நோயாளியின் வதிவிடம் தொடர்பான விவரம் குறுந்தகவல் (SMS) மூலம் சுகாதார வைத்திய அதிகாரி, பிராந்திய மலேரிய தடுப்பு அதிகாரி ஆகியோருக்கு வைத்திய சாலைகளில் இருந்து வழங்கப்படும் நடைமுறை கிளிநொச்சியில் இருந்து வந்தது.

ஆனால் இப்பொறிமுறை தற்போது நிறுத்தப்பட்டுவிட்டதாகவும் இதனால் கிளிநொச்சியில் டெங்கு பரவக்கூடிய அபாய நிலைநேரிட்டுள்ளதாகவும்பொது மக்கள் மற்றும் சுகாதாரப் பணியாளர்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.

இதற்கான அண்மைய உதாரணமாகத் திருநகர் பிரதேசத்தைச் சேர்ந்த ஒரு மாணவி கொழும்பில் டெங்கு நோய்த் தொற்றுக்கு இலக்காகிய நிலையில் தமது வீட்டுக்கு வந்து கிளிநொச்சிப் பொது வைத்தியசாலையில் கடந்த 06 தினங்களாக டெங்குக் காய்ச்சலுக்கான சிகிச்சையைப் பெற்றுவருகிறார் எனவும், இன்றுவரை புகையூட்டல் நடவடிக்கையோ அல்லது விழிப்புணர்வுச் செயற்பாடுகளோ அவரது வதிவிடப் பிரதேசத்தில் சுகாதாரப் பிரிவினரால் மேற்கொள்ளப்படவில்லை எனவும் கூறப்படுகிறது.

இது தொடர்பில் கிளிநொச்சி பிராந்திய பிரதி சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் குமாரவேல் தெரிவிக்கையில் –

அவ்வாறு தாமதம் ஏற்பட்டுள்ளதாக கூற முடியாது. ஆனால் டெங்கு காய்ச்சலை பரப்புகின்ற நுளம்புகள், மற்றும் அதன் குடம்பிகள் காணப்படுகின்றன என பூச்சியியல் ஆய்வு பிரிவினர் உறுதிப்படுத்துகின்றபோது அந்த இடங்களில் மாத்திரம் புகையூட்டல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

திருநகர் வடக்கில் டெங்கு காய்ச்சல் ஏற்பட்டுள்ள நோயாளரின் வீட்டுச் சுற்றுச் சூழலில் டெங்கு காய்ச்சலை பரப்பரக் கூடிய நுளம்போ அல்லது குடம்பிகளோ காணப்படுகின்றன என உறுதிப்படுத்தப்படவில்லை எனவேதான்பூகையூட்டல்செயற்பாடுகள் மேற்கொள்ளப்படவில்லை எனத் தெரிவித்தார்.

(க)

# இழுபறி நிலையில் உள்ள மத்தள விமான நிலையம்

கொழும்பு, ஜூலை 20

மத்தள விமான நிலையம் தொடர்பான ஒப்பந்தத்தை இந்தியாவுடன் கைச்சாத்திட வேண்டுமாயின் விமான சேவை தொடர்பான சட்டத்தில் திருத்தம் செய்ய வேண்டும். இல்லையேல் ஒப்பந்தத்தை கைச்சாத்திட முடியாது என போக்குவரத்து மற்றும் சிவில் விமான சேவை அமைச்சர் நிமல் சிறிபால டிசில்வா தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று மத்தள விமான நிலையம் தொடர்பாக மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.


இது தொடர்பில் அமைச்சர் சிறிபால டிசில்வா மேலும் குறிப்பிடுகையில் –

மத்தள விமான நிலையத்தை இந்தியாவுக்கு குத்தகைக்கு வழங்கும் போது நாம் தேசிய பாதுகாப்பு மற்றும் ஊழியர் உரிமைகளிலும் கவனம் செலுத்தியுள்ளோம். இந்த கொடுக்கல் வாங்கல் தொடர்பாக எம்மிடம் பல நிபந்ததனைகள் உள்ளன. அதனை நாம் மாற்ற மாட்டோம். இதன்படி இலாபத்தில் 70 வீதத்தை இந்தியா கட்டாயம் வழங்கியே ஆக வேண்டும்.

அத்துடன் இந்தியாவுக்கு எக்காரணம்கொண்டும்யுத்தவிமானங்கள் தரிப்பதற்கு நாம் இடமளிக்க போவதில்லை. பாதுகாப்பில் எமது விமான படையினரே இருக்க வேண்டும். வெளியில் எவருக்கும் அதிகாரமில்லை. அனர்த்த நடவடிக்கைகளின் போது எமது குழுவினரே தலையிடுவர். ஊழியர்களின் பாதுகாப்பு குறித்து அவதானம் செலுத்துவோம். இதுவே எமது நிபந்தனைகளாகும்.

அத்துடன், இந்த ஒப்பந்ததை கைச்சாத்திட வேண்டுமாயின் விமான சேவையை சட்டத்தில் திருத்தம் மேற்கொண்டு நாடாளுமன்றத்தில் நிறைவேற்றினால் மாத்திரம் ஒப்பந்தத்தை கைச்சாத்திட முடியும். இல்லையேல் முடியாது.– என்றார்.

# பெரும்போகத்துக்கான உரத்தை விநியோகிக்க ஏற்பாடுகள் பூர்த்தி



எதிர்வரும் பெரும்போகத்திற்கு தேவையான இரசாயன உரம் போதுமான அளவு களஞ்சியப்படுத்தப்பட்டிருக்கிறது என உரப் பிரிவின் செயலக பணிப்பாளர் ஜி.புஷ்பகுமார தெரிவித்துள்ளார்.

இம்முறை எட்டு இலட்சம் ஹெக்டயார் காணியில் பெரும்போக நெற்செய்கை மேற்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளது. சிறுபோகத்திற்கான உர விநியோகம் தற்பொழுது பூர்த்தியடைந்திருக்கிறது என பணிப்பாளர் கூறினார்.

நெல்லுக்கான 50 கிலோ எடைகொண்ட உர மூடை 500 ரூபாவிற்கு விற்பனை செய்யப்படுகிறது. ஏனைய பயிர்களுக்கான உரம் 50 கிலோ மூடை ஆயிரத்து 500 ரூபாவுக்கு விற்பனை செய்யப்படுகிறது.

சிறுபோகத்திற்கு உரத்தை வழங்குவதில் எந்த வித குறைபாடும் இடம்பெறவில்லை என்று செயலகம் தெரிவித்துள்ளது சிறுபோகத்திற்கு தேவையான உரம் அரசாங்கம் சார்ந்த இரண்டு உர நிறுவனங்களினால் விநியோகிக்கப்பட்டது, ஏனைய பயிர்களுக்கான உர வகை தனியார் நிறுவனத்தினால் விநியோகிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# ஹெரோயினுடன் இருவர் கைது!

வவுனியா, ஜூலை 20

வவுனியாவில் இருவேறு பகுதிகளில் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கையின் போது ஹெரோயின் போதைப் பொருளை வைத்திருந்த நபர் ஒருவரும், ஹெரோயின் போதைப் பொருள் வியாபாரி ஒருவரும் கைது செய்யப்பட்டுள்ளனர் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

வன்னிப்பிராந்திய பிரதிப் பொலிஸ்மா அதிபரின் கீழ் செயற்படும் புலனாய்வுப் பிரிவினருக்குக் கிடைத்த தகவலை அடுத்து மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கையின்போது வவுனியா சுற்றுவட்ட வீதியில் தோணிக்கல் பகுதியைச் சேர்ந்த 34 வயதுடைய நபர் ஒருவர் 40 மில்லி கிராம் ஹெரோயின்போதைப் பொருளை தனது உடைமையில் வைத்திருந்த குற் றச்சாட்டில் கைது செய்யப்பட்டுள்ளார்.

இதேவேளை நேற்று முன்தினம் மரக்காரம்பளை மதுபான நிலையத்திற்கு அருகில் ஹெரோயின் விற்பனையில் ஈடுபட்டுக்கொண்டிருந்த தேக்கவத்தைப்பகுதியைச்சேர்ந்த 46 வயதுடைய ஹெரோயின் போதைப் பொருள் வியாபாரி ஒருவர் 70 மில்லிக் கிராம் போதைப் பொருளை வைத்திருந்தார் என தெரிவித்து கைது செய்யப்பட்டுள்ளார்.

இருவரும் மேலதிக விசாரணைகளுக்காக தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். விசாரணைகளின் பின் நீதிவான் நீதிமன்றில் முற்படுத்தப்படவுள்ளனர் என பொலிஸார் மேலும் தெரிவித்துள்ளனர்.

(க – 100)

# சுவாமி விபுலானந்தரின் 71 ஆவது நினைவு தினம் வவுனியாவில் அனுஷ்டிப்பு





வவுனியா நகரப்பகுதியில் சுவாமி விபுலானந்தரின் நினைவுச்சிலையில் அன்னாரின் 71ஆவது நினைவு தினம் நேற்று நினைவு கூரப்பட்டது.

தமிழ் விருட்சம் அமைப்பு மற்றும் நகர சபையினர் இணைந்து ஏற்பாடு செய்த இந் நினைவு தினத்தில் முத்தமிழ் முனிவர் சுவாமி விபுலானந்தரின் வாழ்க்கை நினைவுப் பேருரையை தமிழ்மணி அகளங்கன் நிகழ்த்தினார்.

இந்த நிகழ்வில், வவுனியா நகரசபை உறுப்பினர்களான எஸ்.சந்திரகுலசிங்கம், சு.காண்டீபன், வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலயத்தின் பிரதி அதிபர் எம். முல்லைக்குமரன், சுத்தானந்தா இந்து இளைஞர் சங்கத்தலைவர் தமிழ் மணி அகளங்கன், தமிழ் விருட்சம் அமைப்பின் தலைவர் எஸ். சந்திரகுமார், செயலாளர் மாணிக்கம் ஜெகன், பிரதேச செயலக கலாசார உத்தியோகத்தர் வீ. பிரதீபன், மாவட்ட சமூக சேவைகள் உத்தியோகத்தர். எஸ். எஸ். வாசன், சமூக ஆர்வலர் விக்னா, வைத்தியர் மதுரகன், பாடசாலை மாணவர்கள், பொதுமக்கள் எனப் பல ரும் கலந்துகொண்டனர். (க – 100)

# துருவமயப்பட்ட எதிரெதிர் சிந்தனையில் தமிழர் தேச மக்களும் தெற்கு சிங்களவரும்

## புரிந்துணர்வு ஏற்பட்டாலேயே தீர்வு என்கிறார் விக்கி

"துருவமயப்படத்தப்பட்ட எதிரெதிர் சிந்தனையில் தமிழர் தேச மக்களும் தெற்கின் சிங்கள மக்களும் கருத்துக் கொண்டுள்ளனர். இருவரும் பரஸ்பரம் புரிந்துணர்வை ஏற்படுத்தினால் தான் அரசியல் தீர்வு சாத்தியம்"

– இவ்வாறு கருத்து கூறியிருக்கின்றார் வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வீ.விக்னேஸ்வரன்.

தம்மிடம் கிளப்பப்பட்ட வின ஒன்றுக்கு பதிலளித்த போதே அவர் இவ்வாறு கூறினார்.

அந்தக் கேள்வி – பதில் வருமாறு :–

''தமிழர் தேசம் எங்கும் தமிழர்களின் பிரதிநிதிகள் எதற்கெடுத்தாலும் விடுதலைப் புலிகள் தலைவர் பிரபாகரன், இனவிடுதலைப் போராட்டம் என்பவற்றையும், போரின் அழிவுகளையும், போர்க்குற்றச்சாட்டு, சர்வதேச விசாரணை என்பவற்றையும் பற்றி பேசிக் கொண்டிருக்கின்றனர்.

இவற்றை பற்றி பேசாமல் தமிழ் அரசியல் களத்தில் பதவிகளின் தக்கவைப்பு கேள்விக் குறியாகின்றது. வெளிப்படையாகச் சொல்லப்போனால் விடுதலைப்புலிகள் பற்றிப் பேசாது அரசியல் செய்ய முடியாது என்ற ஒரு நிலைமையும் கூட இங்கே நிலவுகின்றது

அதே வேளை தெற்கில் சிங்கள தலைவர்களும் சரி, தென்னிலங்கை மக்களும் சரி, போர்க்குற்றம், இனவழிப்பு, சர்வதேச விசாரணை என்பவற்றைப் பற்றிப் பேசுவதை விரும்பவில்லை. போர்க்குற்றம், சர்வதேச விசாரணை என்பவற்றைப்பற்றி பேசினால் அங்கே அரசியல் செய்ய முடியாத ஒரு நிலை. அவ்வாறு பேசுகின்றவர்களுக்கு தென்னிலங்கை மக்களும் சரி, ஊடகங்களும் சரி, துரோகிகள் என்ற பட்டத்தை சூட்டி விடுகின்றன.

நிலைமை இவ்வாறிருக்க இனிவரும்காலங்களில் இவ்வாறான எதிர்மாறான சிந்தனைகளோடும் மாறுபட்ட கருத்துக்களோடும் இருக்கின்ற இரண்டு தரப்புக்களுக்கும் இடையே அகப்பட்டுக்கொண்டுள்ள மக்களின் நிலை என்ன?, என்ற கேள்வியே முதல்வரிடம் கேட்கப்பட்டது.

அதற்கு முதல்வரின் பதில் பின்வருமாறு இருந்தது :–

"இதுதான் துருவப்படுத்தல் எனப்படுகிறது. நாட்டில் எதிரெதிர் துருவங்களாக – கருத்துக்களைக் கொண்டிருக்கும் நாங்கள் கருத்தொருமித்து வாழுதல் சாத்தியமற்றதாயினும், மாற்றத்தை ஏற்றுக் கொண்டுதான் ஆக வேண்டும். இரு தரப்பாரும் பரஸ்பரம் புரிந்துணர்வை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும். அதுவே அரசியல் தீர்வொன்றைப் பெற்றுத் தரவல்லது.

மார்க்ஸ் மற்றும் ஏங்கள்ஸ்ஸின் ஆய்வுகள் பொருள் முதல்வாதம், இயங்கியலோடு ஒத்துப் போவதாக இது அமைகின்றது. ஒருவருடைய பார்வை, மற்றொருவருடைய பார்வையுடன் கலந்து ஒத்திசைகின்றது.

# நல்லூர் துர்க்கா மணி மண்டபத்தில் நாளை மாலை யோகதின விழா




யாழ் யோகா உலகம் நடத்தும் சர்வதேச யோக தின விழா நாளை சனிக் கிழமை மாலை 3 மணிக்கு நல்லூர் துர்க்கா மணி மண்டபத்தில் அதன் தலைவர் சி.உமாசுதன் தலைமையில் நடைபெறுகின்றது.

முதன்மை விருந்தினராக யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் துணை வேந்தர் பேராசிரியர் இரட்ணம் விக்னேஸ்வர னும் சிறப்பு விருந்தினராக செஞ்சொற்செல்வர் கலா நிதி ஆறு. திருமுருகன், யாழ் பல்கலைக் கழகக் கலைப் பீடாதிபதி கலா நிதி க.சுதாகர், யாழ் பல்கலைக் கழக சித்த மருத்துவ அலகுத் தலைவர் வைத்தியர் திருமதி விவி யன் சத்தியசீலன், யாழ் மாநகரசபை ஆணையாளர் கவிஞர் த.ஜெயசீலன் ஆகியோரும் பங்குபற்றுவர்.

யாழ் யோக உலக நிர்வாக உத்தியோகத்தர் வ.ஆதவன் நன்றியுரை வழங்குவார்.

# அமெ. – இலங்கை கடற்படைகள் திருமலையில் கூட்டுப் பயிற்சியில்!

அமெரிக்க கடற்படையின் சிறப்பு போர்ப் படைப்பிரிவைச் சேர்ந்த படையினர், இலங்கை கடற்படையினருடன்இணைந்து திருகோணமலையில் கூட்டு பயிற்சி ஒன்றை மேற்கொண்டு வருகின்றனர்.

கூட்டு ஒருங்கிணைந்த பரிமாற்றப் பயிற்சி ஒத்திகை என்ற பெயரில், இந்தக் கூட்டுப் பயிற்சி இடம்பெற்று வருகிறது.

அமெரிக்க கடற்படையின் சிறப்பு போர்ப் படையினருடன், இலங்கை கடற்படையின் 4 ஆவது அதிவேக தாக்குதல் படகு அணி மற்றும், சிறப்பு படகு படையணி ஆகியவற்றைச் சேர்ந்த படையினர் இந்தக் கூட்டுப் பயிற்சியில் ஈடுபட்டுள்ளனர்.

திருகோணமலையில் உள்ள சிறப்புப் படகு படையணி பயிற்சி பாடசாலையில் இந்த கூட்டுப் பயிற்சி ஆரம்ப நிகழ்வு கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்றது.



இரண்டு நாடுகளுக்கும் இடையிலான பயிற்சி மற்றும் தேவைப்பாடுகள் குறித்த பரஸ்பர புரிந்துணர்வு மற்றும் உடன்பாடுகளுக்கு கூட்டுப் பயிற்சித் திட்டம் மேற்கொள்ளப்படுகிறது.

நிபுணத்துவ திறன் விருத்தி மற்றும் இரு நாட்டு கடற்படையினருக்கும் இடையிலான ஆற்றலைப் பரிமாறிக் கொள்ளும் நோக்கிலான இந்த கூட்டுப் பயிற்சி நான்கு வாரங்களுக்கு நீடிக்கவுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

# சிறுவன் மீது பாலியல் துஷ்பிரயோகம் முன்னாள் எம்.பியான பிக்கு கைது

கொழும்பு, ஜூலை 20

9 வயது சிறுவனொருவனை துஷ்பிரயோகத்திற்கு உட்படுத்திய சம்பவம் தொடர்பாக கைது செய்யப்பட்டுள்ள கம்பஹா பகுதியைச் சேர்ந்த விகாரையொன்றின் விகாராதிபதியான அபருக்கு பஞ்சானந்த தேரர் (63 வயது) எதிர்வரும் 26ஆம் திகதி வரை விளக்க மறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

இவர் நேற்று பொலிஸாரினால் அத்தனகல நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டு விளக்க மறியலில் வைக்கப்பட்டார்.

இதேவேளை சம்பவத்தில் பாதிக்கப்பட்டார் எனத் தெரிவிக்கப்படும் சிறுவன் கம்பஹா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றான்.

இந்தத் தேரர் 2004ஆம் ஆண்டு நடைபெற்ற பொதுத் தேர்தலில் ஜாதிக ஹெல



உறுமய கட்சியைப் பிரதிநிதித்துவப்படுத்திநாடாளுமன்ற உறுப்பினராகத் தெரிவு செய்யப்பட்டிருந்தார்.

## இனி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கடந்த ஜனாதிபதித் தேர்தல் சமயத்தில் 78 லட்சம் அமெரிக்க டொலர் பெறுமதியான நிதி உதவி சீன நிறுவனம் ஒன்றினால் அப்போதைய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு வழங்கப்பட்டது என்ற அதிரடிச் செய்தியைத் தனது விசேட கட்டுரை ஒன்றில்பிரசுரித்தது'நியூயோர்க் டைம்ஸ்'.

இந்த விவகாரத்தை வைத்து மஹிந்த ராஜபக்ஷவையும், கூட்டு எதிரணியையும் 'பெண்ட்' எடுக்கத் திட்டமிட்டது ஐக்கிய தேசியக் கட்சி.

இவ்விவகாரத்தை நாடாளுமன்றத்தில் விசேட பிரேரணை மூலம் அம்பலப்படுத்திப் பிய்த்து உதற ஐ.தே.கவினர் – குறிப்பாக நாடாளுமன்றப் பின்வரிசை உறுப்பினர்கள் – துள்ளிக் குதித்துத் திட்டம் தீட்டினர்.

அதன்படிஅந்தப்பிரேரணை நேற்று நாடாளுமன்றுக்கு வந்தது.

அதற்குமுகம்கொடுக்காமல் தவிர்க்கவோ என்னவோ இரண்டொரு தினங்களுக்கு முன்னரே தனிப்பட்ட விஜயம் என்ற பெயரில் சிங்கப்பூர் பறந்தார் மஹிந்தர்.

ஆனால், பெரும் ஆரவாரம், எடுப்போடு தூள் கிளப்பும் என நேற்று எதிர்பார்க்கப்பட்ட இந்த விவகாரம் நாடாளுமன்றத்தில் 'சப்'பென்று அடங்கிப் போய் விட்டது! பெரிய ஆரவாரம் இருக்கவில்லை. போதாக் குறைக்கு இந்த விவகாரம் சபையில் பேசப்பட்ட போது சபையில்கோரமில்லை – போதிய உறுப்பினர்கள் இல்லை – என்று காரணம் காட்டி விடயமே இன்றைய தினத்துக்கு ஒத்தி வைக்கப்பட்டு விட்டது.

இப்படிப் பரபரப்பாகப் பேசப்பட்ட – எதிர்பார்க்கப்பட்ட – விவகாரம் திடுதிடுப்பென அமுங்கிப் போனமைக்கு அல்லது அடக்கி வாசிக்கப்பட்டமைக்கு என்ன காரணம் என்று தெரியாமல் நாடாளுமன்ற வட்டாரங்கள் நேற்று விழி பிதுங்கி நின்றன.

சில கொழும்பு அரசியல் வட்டாரங்கள் இது குறித்து தூண்டித் துருவி விசாரித்தபோதுதான் உள்வீட்டு குசு குசுச் செய்திகள் அம்பலமாகின.

நேற்றுக் காலை சீனத் தூதரகத்தின் உயர் மட்ட அதிகாரி ஒருவர், ஐ.தே.க.தரப்பு உயர் தலைவர் ஒருவரைச் சந்தித்திருக்கின்றார். அவர் கொடுத்த குளிசையை அடுத்துத்தான், சீறிக் கொண்டிருந்த ஐ.தே.க. வட்டாரங்கள் சப் என அடங்கிப் போயின என்ற தகவல் இப்போது கசிகின்றது.

அப்படி என்ன குளிசை – மாத்திரை – கொடுக்கப்பட்டது என்று துளாவினேன்.

*''மஹிந்தவின் மதிப்பை நாறடிக்கிறோம் என்ற பெயரில் சும்மா சீனத் தரப்பைச் சீண்டி இராஜதந்திர ரீதியில் அதற்குத் தேவையற்ற நெருக்கடிகளைக் கொடுக்காதீர்கள். தேர்தல் சமயத்தில் உதவி ஒரு தரப்புக்கு மட்டும்தான் வழங்கப்பட்டதல்ல. அந்தப் பட்டியல் நீண்டது. 'நியூயோர்க் டைம்ஸ்' போல வேறு பத்திரிகைகளில் வேறு பலரின் பெயரை 'லீக்' செய்து விடுவது – அதுவும் ஆதாரத்துடன் நழுவ விடுவது – அப்படி ஒன்றும் கஷ்டமான காரியம் அல்ல. சும்மா சீனத் தரப்பைச் சீண்டி உங்களுக்கு நீங்களே ஆப்பு வைத்துக் கொள்ளாதீர்கள்!"* – என்ற நட்புறவு 'அட்வைஸ்' இராஜதந்திர சொல்லாடல்களில் அந்தத் தலைவரிடம் எடுத்தியம்பப்பட்டதாம்.

அதையடுத்து உஷாரான அந்தத் தலைவரிடமிருந்து பறந்த கடுமையான உத்தரவைத் தொடர்ந்தே நேற்றைய சூடு பறக்க வேண்டிய – விவாதம் குளிர்த்தென்றலாக மாறியதாம்!

நக்குண்டார் நாவிழந்தார் என்பது இதைத்தானோ...?

– மின்னல் –

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021 222 3000, kalaikkathirnews@gmail.com
தொலைநகல் (fax) : 021 221 9440, ads@kalaikkathir.lk
விளம்பரம்/விநியோகம்: 021 222 2600

## ஏன் குழ(ப்/ம்)புகிறார் முதல்வர்?

**டெனீஸ்வரனின் அமைச்சர் பதவி விவகாரத்தால் வடக்கு மாகாண சபையில் ஏற்பட்டிருக்கும் இக்கட்டு நிலைமையைக் கருத்திற் கொண்டு முதலமைச்சர் விக்னேஸ்வர னும், ஆளுநர் குரேயும் புரிந்துணர்வுடன் செயற்பட்டு விரைவாக இந்தப் பிரச்சினைக்குத் தீர்வைக் காண வேண்டும்.**

**வடக்கு மாகாண அவைத் தலைவர் சி.வீ.கே.சிவஞானம் இத்தகைய கோரிக்கை ஒன்றை முன்வைத்திருக்கின்றார்.**

**இந்தப் பிரச்சினையால் மாகாண சபை முடங்கும் நிலைமை வரலாம் என்று அச்சப்படக் கூடிய சூழல் உள்ளது.**

**அத்தகைய மோசமான நிலைமைக்கு சபையைத் தள்ளி விட்டு விட்டு, சம்பந்தப்பட்ட தரப்புகள், தேவையற்ற விதண்டா வாதம் பண்ணிக் கொண்டிருக்கின்றமையைப் பார்க்கும் போது மக்களுக்கு எரிச்சல் எரிச்சலாக வருகின்றது.**

**விடயத்தில் நேரடியாகச் சம்பந்தப்பட்ட டெனீஸ்வரன் ஒரு சட்டமாணி. முதலமைச்சர் சி.வீ.விக்னேஸ்வரன் ஓர் உயர்நீதிமன்ற நீதியரசர். மறுபக்கத்தில் டாக்டர் சத்தியலிங்கத்துக்காக ஆஜராகும் எம்.ஏ.சுமந்தின் ஒரு ஜனாதிபதி சட்டத்தரணி. சயந்தன் போன்ற சட்டத்தரணிகள் வேறு சபையில் உள்ளனர். அவைத் தலைவர் சி.வீ.கே. சிவஞானமும் சட்ட விடயங்களில் கைதேர்ந்த ஒரு சிவில் நிர்வாகி.**

**இப்படிப் பலரும் சேர்ந்து கொண்டு – சட்டம் பற்றிய விவகாரத்தைக் கையில் வைத்துக் கொண்டு – மக்களின் தலையில் மிளகாய் அரைக்கின்ற மாதிரி விடயங்களைக் கையாளப் பார்க்கின்றனர் போலும்.**

**சட்டத்தையும், அதற்கான வியாக்கியானங்களையும் நீதிமன்றம் கூறிவிட்டுப் போகட்டும். அதற்கு மேல் அரசமைப்பு வியாக்கியானத்தில் முரண்பாடு வந்தால், அது பற்றிய விளக்கத்தை உயர் நீதிமன்றம் கொடுத்து விட்டுப் போகட்டும்.**

**ஆனால், சட்டத்தரணிகளாகவோ அல்லது சட்டமாணிகளாகவோ இல்லாவிட்டாலும் சாதாரண மக்களுக்கு ஓரளவு சட்டம் தெரியும் – அவர்களுக்கும் சட்டம் ஓரளவு புரியும் – என்பதை அரசியல்வாதிகள் உணர்ந்து கொள்ளவேண்டும்.**

**சட்டத்தின் பெயரால் அரசியல்வாதிகள் தம்மிஷ்டப்படி மக்கள் தலையில் மிளகாய் அரைக்க முடியாது என்பதை சம்பந்தப்பட்ட தரப்புகள் உணரவேண்டும்.**

**மாகாண சபை அமைச்சர்கள் நியமனம் தொடர்பில் சட்டம் என்ன சொல்கின்றது என்பது மக்களுக்குத் தெரியாது என நினைத்துக் கொண்டு, ஆளாளுக்கு தங்கள் விருப்பப்படி அரசியல்வாதிகள் விளக்கம் கூறுகின்றனர்.**

**மாகாண சபைக்கு அமைச்சர்களை நியமிக்கின்றமை தொடர்பில் சட்டத்தின் ஏற்பாடு யாது என்பது மிக இலகுவானது; தெளிவானது; வெளிப்படையானது.**

**அதைக் கையில் வைத்துக் கொண்டு இந்த அரசியல் தலைமைகள் அதைப் பிசையும் போக்கைப் பார்த்தால் மக்களுக்கு கோபம் வராமல் என்ன செய்யும்?**

**மாகாண சபையின் உறுப்பினர்களில் இருந்து தமது அமைச்சர் வாரியத்துக்குரியவர்களை முதலமைச்சர் பரிந்துரைக்க வேண்டும். அவர்களை ஆளுநர் அமைச்சராக நியமிக்க வேண்டும். இந்த அமைச்சர் வாரியத்தின் எண்ணிக்கை ஐந்தை விஞ்சாததாக இருக்க வேண்டும்.**

**இவ்வளவுதான் சட்ட ஏற்பாடு. இதனை மேன்முறையீட்டு நீதிமன்றம் தனது இடைக்கால உத்தரவில் மீறவில்லை. அதை அப்படியே வலியுறுத்திச் சுட்டிக்காட்டியிருக்கின்றது.**

**அமைச்சர்களை நியமிப்பதற்கான ஆலோசனையை – பரிந்துரையை – சிபாரிசை – செய்யும் பொறுப்பும் உரித்தும் அதிகாரம் மட்டுமே முதல்வருக்கு உரியது.**

**முதல்வரின் ஆலோசனைப்படி மட்டும் அமைச்சர்களை நியமிக்கும் அதிகாரம் ஆளுநருக்கு உரியது.**

**இவ்வளவுதான் விடயம்! இதில் என்ன குழப்பம் இருக்கின்றது? பிறகு ஏன் இதைப் போட்டுக் குழப்புகின்றீர்கள்?**

**பரிந்துரைக்கும் – சிபாரிசு செய்யும் – ஆளுநருக்கு ஆலோசனை கூறும் – அதிகாரமும் பொறுப்பும் உரிமையும்தான் முதல்வருக்கு உண்டு. அதை நீதிமன்றம் எந்தக் கட்டத்திலும் மறிக்கவுமில்லை, மறுக்கவுமில்லையே?**

**இது புரியாமல் – அல்லது அது புரியாத மாதிரிக் காட்டிக் கொண்டு –**

**அமைச்சர்களை நியமிக்கும், அகற்றும் அதிகாரமும், பொறுப்பும் உரித்தும் முதல்வர் என்ற முறையில் தமக்கே – தமக்கு மட்டுமே – உரியது என்ற நினைவில் இதுவரை இருந்து விட்டு –**

**அது, இப்போது தமக்குரியதல்ல, தமது அதிகாரம் பரிந்துரைப்பது மட்டும்தான் என்பதை நீதிமன்றம் சுட்டிக்காட்டியதும் குழம்பிப் போய்விட்டார் போலும் முதல்வர்.**

**பரிந்துரைக்கும் அல்லது சிபாரிசு செய்யும் அதிகாரத்தைப் பிரயோகித்து ஆளுநருடன் இணைந்து அரசமைப்பு ஏற்பாடுகளுக்கு அமைய அமைச்சர் வாரியத்தின் எண்ணிக்கையை நேர்சீர் செய்யத்தான் இப்போது அவரிடம் கோரப்படுகிறது.**

**அவரோ, நான் அமைச்சர்களை நியமிக்கவும் முடியாது, அகற்றவும் முடியாது, அந்த அதிகாரம் எனக்கு இல்லை என்று நீதிமன்றம் கூறிவிட்டது என்று கூப்பாடு போட்டவண்ணம் சட்டக் குட்டையைக் குழப்பி மக்களையும் மேலும் குழப்ப முயலுகின்றார் போலவேபடுகிறது.**

**இந்த விடயத்தை மாகாண சபை, முதல்வருக்குச் சுட்டிக் காட்டினால், மாகாண உறுப்பினர்கள் தம்மை மாட்டிவிடப்பார்க்கின்றனர் என்ற குற்றச்சாட்டு முதல்வரிடம் இருந்து பாய்கிறது.**

**அவரது சட்ட அறிவு நிலைக்கு இது பொருத்தமற்றது என்றே தோன்றுகின்றது. அதைச் சுட்டிக்காட்டுவது எமது கடமை என நினைக்கிறோம்.**

# மாகாணசபையைக் குழப்பும் சூத்திரதாரிகளுக்கு மக்களே நாளை சரியான தீர்ப்பெழுதுவார்கள்

## விசனத்துடன் ஐங்கரநேசன் உரை



யாழ்ப்பாணம், ஜூலை 20

வடக்கு மாகாணசபையின் உறுப்பினர்களாக நாங்கள் தெரிவாகியபோது மாகாணசபைக்குரிய அதிகாரங்களை வைத்துப் பெரிதாக எதையும் சாதிக்க இயலாமற்போனாலும் சிலவற்றையாவது செய்துமுடிப்போம் என்ற நம்பிக்கையுடன்தான் வந்தோம். ஆனால், மாகாணசபை உறுப்பினர்களுக்கிடையே இருக்கக்கூடிய சாதாரண முரண்பாடு களைப் பூதாகரமாக்கி உள்ளே நுழைந்த தீயசக்திகள் மாகாணசபையின் ஒற்றுமையைச் சீர்குலைத்தமையால் எதனையுமே முழுமையாகச் செய்யமுடியாத சூழ்நிலை உருவாகியுள்ளது. இன்று முதலமைச்சரே நீதிமன்றப்படி ஏறும் நிலை தோன்றியுள்ளது. இந்தக் குளறுபடிகளின் பின்னால் உள்ள சூத்திரதாரிகள் யார் என்பது மக்களுக்குத் தெரியும். இவர்களுக்கான தீர்ப்பை மக்களே நாளை எழுதுவார்கள் என்று முன்னாள் விவசாய அமைச்சரும் மாகாணசபை உறுப்பினருமான பொ.ஐங்கரநேசன் தெரிவித்துள்ளார்.

பொ.ஐங்கரநேசனுக்கு ஒதுக்கப்பட்ட பிரமாண அடிப்படையிலான நன்கொடை நிதியில் இருந்து வாழ்வாதார உதவிகளை வழங்கிகும் நிகழ்ச்சி நேற்றுமுன்தினம் புதன்கிழமை திருநெல்வேலி இந்து வாலிபர் சங்க மண்டபத்தில் நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே பொ.ஐங்கரநேசன் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அங்கு அவர் தொடர்ந்து உரையாற்றும்போது –

மாகாணசபையில் இன்று இடம்பெற்று வருகின்ற குழப்பங்கள் எல்லாவற்றுக்கும் பின்னால் முதலமைச்சரைப் பலவீனமாக்க வேண்டும் என்ற நோக்கமே உள்ளது. மாகாண சபையில் உள்ள அத்தனை உறுப்பினர்களுக்கும் முதலமைச்சருடன் தோளோடு தோள் நின்று மக்களுக்கான வேலைத் திட்டங்களை முன்னெடுக்க வேண்டிய பொறுப்பு உள்ளது. ஆனால், ஆளும் கட்சியில் உள்ளவர்களே வேண்டாப் பெண்டாட்டி கைபட்டால் குற்றம் கால் பட்டால் குற்றம் என்பது போல முதலமைச்சரின் சகல செயற்பாடுகளையும் உள்நோக்கத்தோடு விமர்சித்து வருகிறார்கள். இதனால், மக்களுக்கான செயற்பாடுகளை மாகாண சபையால் வினைத்திறனுடன் முன்னெடுக்க முடியாமல் உள்ளது.

மாகாணசபையின் ஆயுள் முடிவடைவதற்குஇன்னும்மூன்று மாதங்களே உள்ளன. அதற்குள் அமைச்சரவையைப் புதிதாக மாற்றியமைக்கவேண்டும்என்று சிலர் ஒற்றைக்காலில் நிற்கிறார்கள். ஏற்கனவே மாகாண சபையின் இயக்கம் மந்த கதியில் இருக்கும்போது இந்தச் செயற்பாடு மாகாண சபையை மேலும் மேலும் பலவீனப்படுத்துகிறது. தங்களது பெயரையும் புகழையும் காப்பாற்றுவதற்காக அரசியல்வாதி ஒருவர் நீதிமன்றப்படி ஏறும்போது இந் நடவடிக்கைகளால் பொது மக்களின் நலன் எந்தளவுக்குப் பாதிக்கப்படும் என்பதை அவர் சிந்தித்தே செயற்படவேண்டும். ஏனெனில், மக்கள் பணிகளையே முதன்மை நோக்கமாகக் கொண்டு பதவிக்கு வருபவர்கள் தான் பாதிக்கப்படுகின்ற சந்தர்ப்பங்களில் கூட மக்களின் நலனுக்கே முன்னுரிமை கொடுப்பவராக இருக்கவேண்டும். அவரே உண்மையான மக்கள் நலப்பணியாளர் என்றும் தெரிவித்துள்ளார்.

# பற்றைக்காடுகளாகக் காணப்படும் ஓமந்தை அரச ஊழியர் வீட்டுத்திட்டம்



வவுனியா, ஓமந்தை அரச வீட்டுத்திட்டத்தில் 600 குடும்பங்களுக்கு காணிகள் வழங்கப்பட்ட போதும் 65 குடும்பங்கள் மாத்திரமே அங்கு வசித்து வருகின்றமையால் ஏனைய காணிகள் பற்றைக் காடுகளாகக் காட்சியளிக்கின்றன.

அரச உத்தியோகத்தர் ஒருவர் நாட்டின் எப்பகுதியிலும் கடமையாற்றக் கூடியவராக இருக்க வேண்டும். இதனால் பலர் தமது சொந்த இடங்களையும், வீடுகளையும், காணிகளையும் விட்டு வந்து வேறு பிரதேசங்களில் பணியாற்றுகின்றனர்.

வாடகை வீடுகளிலும், அரச விடுதிகளிலும் பல்வேறு சிரமங்களுக்கு மத்தியில் வசித்து வருகின்றனர். இவ்வாறு சொந்த வீடு, வாசல் இன்றி நெருக்கடிகளை எதிர்கொள்ளும் அரச ஊழியர்களுக்கும், காணிகளற்ற அரச உத்தியோகத்தர்களுக்கும் 2011 ஆம் ஆண்டளவில் ஓமந்தைப் பகுதியில் உள்ள அரச காணியில் இருந்த காடுகளை வெட்டி அரச ஊழியர்களுக்குக் காணிகள் பகிர்ந்தளிக்கப்பட்டன.

ஒவ்வொரு குடும்பத்திற்கும் 4 பரப்பு காணி வீதம் பல்வேறு அரச திணைக்களங்களில் வேலை பார்க்கும் உத்தியோகத்தர்களுக்கு இந்தக் காணிகள் பகிர்ந்தளிக்கப்பட்டன. வீடமைப்பதற்காக அரச மானியமாக 5 லட்சம் ரூபா சில குடும்பங்களுக்கு வழங்கப்பட்டும், 7 ஆண்டுகள் கடந்த நிலையிலும் இன்று அதன் சில பகுதிகள் காடாய்க் காட்சியளிக்கின்றன.

600 அரச ஊழியர்களுக்கு ஓமந்தை அரச வீட்டுத்திட்டத்தில் காணிகள் வழங்கப்பட்ட போதிலும் 65 காணிகளில் மாத்திரம் அரச ஊழியர்கள் வீடுகளை அமைத்து குடியமர்ந்து வருகின்றனர். மிகுதியில் 155 காணிகள் முழுமையாகக் காடுகளாகக் காணப்படுகின்றன 200 காணிகளில் கிணறு மாத்திரம் கட்டப்பட்ட நிலையிலும், 130 காணிகள் வீடு மாத்திரம் கட்டப்பட்ட நிலையில் மொத்தமாக 485 காணிகள் பற்றைக்காடுகளாகக் காணப்படுகின்றன.

இந்த விடயம் தொடர்பாக ஓமந்தை அரச விட்டுத்திட்டத்தில் வசிக்கும் அரச ஊழியர்கள் கருத்து தெரிவிக்கையில் –

இவ் அரச வீட்டுத்திட்டத்தில் பல குறைபாடுகள் காணப்படுகின்றன. இங்கு காணிகள் வழங்கப்பட்டுள்ள அரச உத்தியோகத்தர்களுக்கு வவுனியாவில் வேறு இடங்களில் காணிகள் இருக்கின்றமையால் இங்கு அவர்கள் வருவதில்லை. 600 அரச ஊழியர்களுக்கு காணிகள் வழங்கப்பட்டிருந்த நிலையிலும் தற்போது 65 அரச ஊழியர்களே வசித்து வருகின்றோம். மிகுதி காணிகள் பற்றைக் காடுகளாக காணப்படுகின்றமையால் நாங்கள் பெரும் அச்சத்தில் மத்தியில் வாழ்ந்து வருகின்றோம். பாம்புகள், காட்டு உயிரினங்களின் வருகை நாளுக்கு நாள் அதிகரித்தே காணப்படுகின்றது. மற்றும் அனைவரும் அரச ஊழியர்கள் என்பதினால் நாங்கள் வேலைக்கு சமுகமளிக்கும் சமயத்தில் திருடர்களின் தொல்லைகள் காணப்படுகின்றன.

எனவே காடுகளாக காணப்படும் காணிகளை அரசாங்கம் மீள அவர்களிடமிருந்து கையகப்படுத்தி காணிகள், வீடுகள் அற்று வவுனியாவில் பணியாற்றும் அரச உத்தியோகத்தர்களுக்கு வழங்க வேண்டுமென ஊழியர்கள் விசனம் தெரிவித்தனர்.

(உ–100)

## நாளை

**21.07.2018**
**சனிக்கிழமை**

நட்சத்திரம் : சுவாதி பி.ப.02.17 வரை
திதி : நவமி மாலை 6.34 வரை
சுபநேரம் : 3.01– 04.31 வரை
இராகுகாலம் : 09.01 –10.31 வரை

# இந்திய சட்டமன்ற உறுப்பினர் நாடாளுமன்றத்துக்கு விஜயம்



கொழும்பு, ஜூலை 20
இலங்கைக்கு வருகைதந்துள்ள இந்திய யூனியன் முஸ்லிம் லீக் கட்சியின் கடையநல்லூர் சட்டமன்ற உறுப்பினர் கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர் நாடாளுமன்றுக்கு விஜயம் செய்துள்ளார்.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் அமைச்சர் ரவூப் ஹக்கீமுடன் நாடாளுமன்றத்துக்கு விஜயம் செய்த அவர், சபை அமர்வுகளைப் பார்வையிட்டதோடு, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் நாடாளுமன்ற உறுப்பினர்கள், மாகாண சபை மற்றும் உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்களுடனும் கலந்துரையாடினார்.

அவருடன் இந்திய யூனியன் முஸ்லிம் லீக்கின் மாநில துணைச் செயலாளர், இப்ராஹிம் மக்கி, ஊடக வியலாளர் திருச்சி எம்.கே. ஷாகுல் ஹமீத் ஆகியோரும் வருகை தந்திருந்தனர்.

# அமெரிக்க ஏற்றுமதி தீர்வைக்கான தீர்ப்பில் இலங்கை வர்த்தக திணைக்களம் வெற்றி

கொழும்பு, ஜூலை 20
மிகைப்பொருள் தீர்வை எதிர்வு மற்றும் எதிர்வு ஈட்டு தீர்வை தொடர்பில் அமெரிக்க வர்த்தக நீதிமன்றத்தில் வரலாற்றுமிக்க ஏற்றுமதி தீர்வைக்கான தீர்ப்பினில் இலங்கை வர்த்தக திணைக்களம் வெற்றி ஈட்டியுள்ளது.

இலங்கைக்கு சாதகமான இந்த தீர்ப்பை பெற்றுக்கொள்வதற்காக தமது கடமைகளை நேர்த்தியாக செய்த இலங்கை வர்த்தக திணைக்களத்தின் அதிகாரிகளுக்கு எனது பாராட்டுக்கள் என கைத்தொழில் மற்றும் வர்த்தக அமைச்சர் ரிஷாத் பதியுதீன் தெரிவித்தார்.

திண்ம வீதி டயர் (OTR) ஏற்றுமதிக்கான மிகைப்பொருள் தீர்வை எதிர்வு மற்றும் எதிர்வு ஈட்டு தீர்வைக்கான சர்வதேச வர்த்தக நீதிமன்றத்தின் தீர்ப்பின் முடிவு எமது உற்பத்திக்கான ஏற்றுமதிகள், குறிப்பாக இரப்பர் உற்பத்திகளை மேம்படுத்துவதற்கான எங்கள் அமைச்சின் முயற்சிகளுக்கு இது பெரும் உதவியாக இருக்கும்.

இது அமெரிக்காவுடன் எமது வர்த்தகத்தை வலுப்படுத்த உதவுகிறது. விரைவில் அமெரிக்காவிற்கான 300 கோடி அமெரிக்க டொலர் ஏற்றுமதியை ஈட்டிக்கொள்வதற்கும் உதவுகிறது.

இலங்கையின் உற்பத்திகளை பெற்றுக்கொள்வதற்கு அமெரிக்க மக்களுக்கு நாம் நன்றி தெரிவிக்கின்றோம் எனவும் அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

மிகைப்பொருள் தீர்வை எதிர்வு மற்றும் எதிர்வு ஈட்டு தீர்ப்பிற்கான சர்வதேச வர்த்தக நீதிமன்றத்தின் தீர்ப்பின் முடிவு தொடர்பில் இலங்கை வர்த்தக திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் சொனலி விஜேரத்ன மற்றும் அவரது அதிகாரிகள் அமைச்சரை அவரது அலுவலகத்தில் சந்தித்த போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

## யானைத் தந்தத்துடன் மூவர் கைது


யானைத் தந்தத்தை வைத்திருந்த மூன்று பேர் கண்டி, பொற்கொல்ல பிரதேசத்தில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளனர்.

கண்டி வலய பொலிஸ் சட்ட அமுலாக்கப் பிரிவு அதிகாரிகளால் நடத்தப்பட்ட சுற்றிவளைப்பில் 5030 மில்லி கிராம் நிறையுடைய யானைத் தந்தம் ஒன்று கைப்பற்றப்பட்டது என பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அலுவலகம் கூறியுள்ளது.

கைதான மூவரும் பொற்கொல்ல, உக்குவெல மற்றும் அம்பிட்டிய பிரதேசங்களைச் சேர்ந்தவர்கள் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

சந்தேகநபர்கள் கண்டி நீதிவான் நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட உள்ளதுடன், கண்டி பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## ரயில் சேவை பாதிப்பு



பேராதனைப் பகுதியில் ரயில் ஒன்று தடம் புரண்டதனால் மலையகத்துக்கான சகல ரயில் போக்குவரத்தும் பாதிப்படைந்துள்ளன என்று ரயில்வே கட்டுப்பாட்டு நிலையம் அறிவித்துள்ளது.

## துப்பாக்கி, ரவைகளுடன் இளைஞர் கைது!

கொழும்பு, ஜூலை 20
துப்பாக்கியொன்று மற்றும் அதற்கு பயன்படுத்தக்கூடிய துப்பாக்கி ரவைகளுடன் நேற்று யக்கலமுல்ல பிரதேசத்தில் வைத்து இளைஞர் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார் என பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது.

யக்கலமுல்ல பொலிஸ் பிரிவுக்குட்பட்ட வதொகல பிரதேசத்தில் வைத்து துப்பாக்கி மற்றும் அதன் ரவைகளுடன் இந்த இளைஞர் நேற்று அதிகாலை 2.50 மணியளவில் கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவத்தில் வதொகல பிரதேசத்தைச் சேர்ந்த 21 வயதுடைய இளைஞர் ஒருவரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளார். இவரை கைதுசெய்த வேளையில் அவரிடமிருந்து துப்பாக்கியொன்று மற்றும் அதற்கு பயன்படுத்தக்கூடிய துப்பாக்கி ரவைகள் இரண்டும் கைப்பற்றப்பட்டுள்ளன.

இந்த நிலையில் இந்தச் சந்தேக நபரை காலி நீதிவான் நீதிமன்றில் ஆஜர்படுத்த பொலிஸார் நடவடிக்கை மேற்கொண்டிருந்தனர்.

இந்தச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை யக்கலமுல்ல பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

(க)

## கல்லூரியில் சர்வதேச யோகா தின விழா

யாழ்ப்பாணம், ஜூலை 20
யாழ். யோகா உலகம் நடத்தும் சர்வதேச யோகா தின விழா நாளை சனிக்கிழமை நல்லூர் துர்க்கா மணிமண்டபத்தில் பிற்பகல் 3 மணிக்கு யாழ். யோகா உலகம் இயக்குநர் சி.உமாசுதன் தலைமையில் இடம்பெறும்.

இதில் பிரதம விருந்தினராக யாழ்ப்பாணப் பல்கலைக்கழக துணைவேந்தரும் பேராசிரியருமான இ.விக்னேஸ்வரன் கலந்து கொள்வார்.

சிறப்பு விருந்தினராக செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு.திருமுருகன், யாழ். பல்கலைக்கழக கலைப் பீடாதிபதி க.சுதாகர், யாழ். பல்கலைக்கழக சித்த மருத்துவ பீடத் தலைவரும் வைத்திய கலாநிதியுமான திருமதி விவியன் சத்தியசீலன், யாழ். மாநகர சபை ஆணையாளர் இ.த. ஜெயசீலன் ஆகியோர் கலந்துகொள்வர்.

# மூளாய் நெடுங்குளம் புனரமைப்பு பணிகள் ஆரம்பம்

மூளாய் நெடுங்குளம் புனரமைப்பு பணிகளை மேற்கொள்வதற்கான சம்பிரதாயபூர்வமான நிகழ்வில் விவசாய பிரதி அமைச்சர் அங்கஜன் இராமநாதன் கலந்து கொண்டு கட்டுமான பணிகளை ஆரம்பித்து வைத்தார்.

தொல்புரம் கமநல சேவை நிலையத்திற்குட்பட்ட 160 விவசாய குடும்பங்கள் பயனடையக்கூடியதாக இந்த நெடுங்குளம் காணப்படுகின்றது.

நெடுங்குளம் புனரமைப்பு பணிகளுக்காக 36 லட்சம் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

இந்த நிகழ்வில் கமநல உதவி ஆணையாளர், சங்கானை பிரதேச செயலாளர், மூளாய் பொன்னாலை விவசாய சம்மேளன தலைவர், தொல்புரம் கமநல சேவை உத்தியோகத்தர்கள், கிராம விவசாய பெருமக்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

விவசாய நடவடிக்கைகளை மேற்கொள்பவர்கள் இளைஞர்களை விட தமது வகிபாகம் அதிகம் எனவும், இக்



கால இளைஞர்களும் விவசாயத்தை மேற்கொள்ள இளைஞர் விவசாய அமைப்புக்களை நிறுவ வேண்டுமெனவும் சுட்டிக்காட்டியதோடு இளைய அமைச்சரினால் அவற்றை சாதிக்க முடியும் எனவும் தமது ஒத்துழைப்புக்களும் இருக்கும் எனவும் நம்பிக்கை வெளியிட்டனர்.

இதேவேளை, இளைஞர் யுவதிகளை போன்று விவசாய பணிகள் ஊடாக விவசாய மக்களின் மனதளவில் இடம் பிடித்துள்ளமை மகிழ்ச்சி எனவும் விவசாய பிரதி அமைச்சர் அங்கஜன் இராமநாதன் தெரிவித்தார்.

# மின்தடை

யாழ்ப்பாணம், ஜூலை 20
உயர் அழுத்த தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை வெள்ளிக்கிழமை காலை 8 மணியிலிருந்து மாலை 5.30 மணி வரை–

**யாழ் பிரதேசத்தில் -**
தாவடி, பிள்ளையார் கோவிலடி, வன்னியசிங்கம் வீதி, தாவடி பாடசாலை லேன், பத்தானை, யுவசக்தி வீதி, அண்ணாமலை வீதி, சுதுமலை, மலைவேம்படி, சின்மயபாரதி பாடசாலை வீதி, மாப்பியன் வீதி, கூளாவடி, கரம்பைக் குறிச்சி ஆகிய இடங்களிலும் –

**கிளிநொச்சி பிரதேசத்தில் –**
சின்னாத்திமடு, புளியங்குளம் ஆகிய இடங்களிலும் –

**வவுனியா பிரதேசத்தில் –**
மகாமயிலங்குளம், குடாகச்சக் கொடிய, துட்டுவாகை, குடாகச்சகொடிய கல் உடைக்கும் ஆலை, சமனங்குளத்திலிருந்து சிதம்பரபுரம்வரை, கொக்கெலிய இராணுவமுகாம் பிரதேசம் ஆகிய பிரதேசங்களிலும் மின்விநியோகம் தடைப்பட்டிருக்கும் என்று மின் பொறியியலாளர் அறிவித்துள்ளார்.

# நல்லூரில் இலவச மருத்துவ முகாம்

யாழ்ப்பாணம், ஜூலை 20 நல்லூர் சங்கிலியன் மன்றத்தின் 73 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு மாபெரும் இலவச மருத்துவ முகாம் 13 ஆவது சமூக நலத் திட்ட உதவி நாளை சனிக்கிழமை காலை 8.30 மணி தொடக்கம் பிற்பகல் 2 மணி வரை சங்கிலியன் மன்ற மண்டபத்தில் நடைபெறும்.

இம் மருத்துவ முகாமுக்கு உளவள ஆலோசகர் டாக்டர் சிவகுமார், தோல் புரை வைத்திய நிபுணர் திருமதி.எஸ். சிவகுமார் மற்றும் வைத்திய நிபுணர்கள் பலரின் மேற்பார்வையில் சிகிச்சைகள் இடம்பெறும். சகல பரிசோதனைகளுக்கும் நாளை சனிக்கிழமை காலை 8 மணிக்கு பதிவுகள் மேற்கொள்ளப்படும். மேற்படி இலவச மருத்துவ முகாமில் பங்குபற்றி பயனடையுமாறு சங்கிலியன் மன்றத்தினர் கேட்டுக் கொண்டுள்ளனர். (இ)

# தினசரி ராசி பலன் (20.07.2018)

2018 ஆம் ஆண்டு விளம்பி வருடம் ஆடித்திங்கள் 4ஆம் நாள் வெள்ளிக்கிழமை அஷ்டமித்திதி பகல் 1.19 மணி வரை பின்னர் நவமி. நட்சத்திரம்: சித்திரை காலை 8.09 வரை பின்னர் சுவாதி. மரணயோம் காலை 8.09 மணி வரை பின்னர் சுபயோகம்.

**ராகுகாலம்** - பகல் 10.42 மணி முதல் 12.16 மணி வரை.

**சுபநேரம்** - காலை 6.00 மணி முதல் 7.32 மணி வரை.

**திவசம் செய்ய வேண்டிய திதி** - ஆடி மாத வளர்பிறை நவமி.

**பிறந்த நட்சத்திர வழிபாடு** - சுவாதி.

**'ஜோதிடமணி' பிரம்மஸ்ரீ சி.ஜெகதீஸ்வரசர்மா ஜே.பி.**

**மேஷம்** சமபலன்கள் காணப்படுகின்றன. பொருளாதாரம் சுமாராக இருக்கும். வியாபாரத்தில் தேக்க நிலை இருக்கும். நிறைய அலைய வேண்டி வரும். புதிய முதலீடுகளைத் தவிர்க்கவும். சுயதொழிலில் நன்மை கிட்டும்.

**ரிஷபம்** ஆக்கபூர்வமான நாள். பொருளாதாரம் வளமாக இருக்கும். குடும்ப ஒற்றுமை பலப்படும். பல நாள் பிரிந்த உறவுகள் மீண்டும் இணையும். எண்ணிய எண்ணங்கள் நிறைவேறும்.

**மிதுனம்** யோகமான நாள். பண பலம் அதிகரிக்கும். சுயதொழில் செய்பவர்களுக்கு நல்ல வருமானம் கிடைக்கும் பெண்களுக்கு தங்க நகைகள் வாங்கும் யோகம் கிட்டும். முதலீடு இல்லாத தொழிலில் ஆதாயம் கிட்டும்.

**கடகம்** சஞ்சலமான நாள். பணவரவு குறையும். செய்யும் பணியில் வேலைப் பளு அதிகரிக்கும். குடும்பத்தில் கருத்து வேறுபாடுகள் உண்டாகும். தொழிலில் பல சோதனைகள் உண்டாகும்.

**சிம்மம்** மத்திம பலன்கள் காணப்படுகின்றன. பணவரவு சுமாராக இருக்கும். தொழிலில் மிகவும் கவனமுடன் செயற்பட வேண்டும். போட்டிகள் அதிகரிக்கும். வியாபாரத்தில் சுமாரான லாபம் கிடைக்கும்.

**கன்னி** உயர்வான நாள். பொருளாதாரம் வளர்ச்சியடையும். புதிய முயற்சிகள் கைகூடும். மாணவர்கள் உயர் கல்வி வாய்ப்புக்களும், தேர்வில் சிறப்பான மதிப்பெண்களையும் பெறுவார்கள்.

**துலாம்** அதிர்ஷ்டமான நாள். பணபலம் அதிகரிக்கும். கனவுகள் நிறைவேறும். விரும்பிய வேலை வாய்ப்புக்கள் கிடைக்கும். அரசு வழியால் சிலருக்கு வீடு, காணி என்பன கிடைக்கும்.

**விருச்சிகம்** சலனம் மிகுந்த நாள். பணம் தட்டுப்பாடாக இருக்கும். காரியத் தடை, மனக் குழப்பம் உண்டாகும். பெண்களின் பிடிவாத குணம் மன அமைதியைப் பாதிக்கும். உறவினர்களுடன் வீண் பகை உண்டாகும்.

**தனுசு** இன்பமான நாள் பொருளாதாரம் மன நிறைவைத் தரும். குடும்பத்தில் குதூகலம் அதிகரிக்கும். பல நாள் பிரிந்திருந்த நண்பர்களின் சந்திப்பு மகிழ்ச்சியைத் தரும். மாணவர்களுக்கு உயர் கல்வி வாய்ப்புக்கள் அமையும்.

**மகரம்** சமபலன்கள் காணப்படுகின்றன. பொருளாதாரம் சமமாக இருக்கும். செலவுகள் அதிகமாகும். இவர்கள் துன்பத்தையும், இன்பத்தையும் சமமாக எண்ணுவார்கள். புதிய முயற்சிகளைத் தவிர்க்கவும்.

**கும்பம்** அனுகூலமான நாள். பணப்புழக்கம் சரளமாக இருக்கும். வியாபாரிகளுக்கு ஆடம்பரப் பொருள்கள் மூலம் ஆதாயம் கிட்டும். வெளிநாட்டவரின் ஆதரவு பயன் தரும். சிலருக்கு வெளிநாட்டுப் பயணம் அனுகூலமாகும்.

**மீனம்** அலைச்சல் மிகுந்த நாள். சிலர் வேலை தேடி அலைவார்கள். சிலர் உத்தியோகம் சம்பந்தமாக வெளியூர்களுக்கு அலைய வேண்டி வரும். சிலர் தொழில் இடமாற்றத்தால் குடியிருக்க வாடகை வீடு தேடித் திரிவார்கள்.

சந்திராஷ்டம நாள்; **பூரட்டாதி 4 ஆம் பாதம், உத்தரட்டாதி, ரேவதி ஆகிய நட்சத்திரங்களில் பிறந்தோர் சுபகருமங்கள் தொடங்குவதைத் தவிர்க்கவும்.**

# அங்கவீனம் அடைந்துள்ள ஓய்வுபெற்ற இராணுவத்தினருக்கு செயற்கை கால்கள்!



அங்கவீனமுற்ற ஓய்வு பெற்ற இராணுவ வீரர்கள் குழுவினருக்கு ஒரு தொகை செயற்கை கால்கள் மற்றும் மருத்துவ உதவிகள் என்பன வழங்கும் நிகழ்வு இடம் பெற்றது.

ரணவிரு சேவா அதிகார சபையில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற இந்த நிகழ்வின் மூலம் அவர்களின் வாழ்க்கையை இலகுபடுத்தும் வகையில் ரணவிரு சேவா அதிகார சபையின் சுகாதாரப் பிரிவு இந்த நிகழ்வினை ஏற்பாடு செய்திருந்தது.

இதன்போது, அங்கவீனமுற்ற இராணுவ, விமானப் படை, மற்றும் காவல்துறை ஆகிய எட்டு யுத்த வீரர்களுக்கு செயற்கை கால்கள் மற்றும் சிறுநீர் கழிக்கும் பைகள் என்பன வழங்கப்பட்டன. திருமதி கமானி கருணாரத்னவின் முயற்சியால் பெறப்பட்ட நிதியின் ஊடாக நான்கு செயற்கை கால்கள் ரணவிரு சேவா அதிகாரசபைக்கு அன்பளிப்பு செய்யப்பட்டன.

இதேவேளை, ரணவிரு சேவா அதிகாரசபையின் ஒதுக்கீட்டில் பெறப்பட்ட சிறுநீர் கழிக்கும் பைகள் ஏனைய நால்வருக்கு வழங்கப்பட்டன.

இந்த நிகழ்வில் ரணவிரு சேவா அதிகாரசபையின் பிரதித் தலைவர் திருமதி உபுலங்கனி மாலாகமுவ, ரணவிரு சேவா அதிகாரசபையின் தலைவர் மேஜர் ஜெனரல் (ஓய்வு) NAPC நாபாகொட மற்றும் ஏனைய அதிகாரிகளும் கலந்து கொண்டனர். (கு)

## சைவசமய அபிவிருத்திக் கழகம் நடத்தும்

# சுந்தரமூர்த்தி நாயனார் குருபூசையும் திருமுறை மனனப் போட்டி பரிசளிப்பும்

வண்ணை – சாந்தையர் மடம் ஸ்ரீ கற்பக விநாயகர் கோவில் சைவசமய அபிவிருத்திக் கழகம் நடத்தும் சுந்தரமூர்த்தி நாயனார் குருபூசையும், திருமுறை மனனப் போட்டி பரிசளிப்பு விழாவும் நாளை சனிக்கிழமை மாலை 5 மணிக்கு ஆலய மண்டபத்தில் நடைபெறவுள்ளன.

சுந்தரமூர்த்தி நாயனார் குருபூசை, உற்சவ நிகழ்வுகளை தொடர்ந்து நடைபெறும் பரிசளிப்பு விழாவுக்கு கோண்டாவில் இராமகிருஷ்ண மகா வித்தியாலய ஓய்வு நிலை அதிபர் சண்.வாமதேவன் முதன்மை விருந்தினராக கலந்து கொண்டு திருமுறை மனனப் போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசில்களையும் சான்றிதழ்களையும் வழங்குவார்.

சுந்தரமூர்த்தி நாயனார் குருபூசையை முன்னிட்டு கடந்த 8 ஆம் திகதி ஞாயிற்றக்கிழமை நடைபெற்ற திருமுறை மனனப் போட்டியில் முதல் 3 இடங்களைப் பெற்றோர் வருமாறு–

**தரம் - 1**

1. கு.அக்ஷயா (கொக்குவில் இந்து ஆ.பா)
2. ப.அக்ஷயா (காரைநகர் யாழ்ற்ரன்)
3. ச.மகீஷன் (யாழ். இந்து ஆ.பா)

**தரம் - 2**

1.க.தௌமியா (உரும்பிராய் கற்பக விநாயகர் அறநெறிப் பாடசாலை)
2.ஜெ.தனவர்ஷின் (தெல்லிப்பழை மகாஜனா)
3.கி.டிலக்சன் (தெல்லிப்பழை மகாஜனா)
3.ந.நிருஷிகா (நீர்வேலி அத்தியார் இந்து)

**தரம் -3**

1.சி.வர்சவி (கோப்பாய் நாவலர் தமிழ் வித்தியாலயம்)
2.சி.மனஸ்வினி (கொக்குவில் இந்து ஆ.பா)
3.சு.ஸஸாங்கி (யாழ். இந்து ஆ.பா.)

**தரம் -4**

1.சு.திரிபர்ணா (யாழ்.மகளிர் ஆ.பா)
2.வி.சிறிகலா (யாழ்.இந்து ஆ.பா)
3.அ.நேர்த்திகன் (கொக்குவில் ஸ்ரீ இராமகிருஷ்ண வித்தியாசாலை) (இ)

# பிரதேச சபை செயலாளருக்கு கடூழிய சிறை!

லஞ்சம் பெற்ற குற்றச்சாட்டில் அக்குரணை பிரதேசசபை செயலாளருக்கு 5 வருட கடூழிய சிறைத்தண்டனை விதித்து கொழும்பு உயர் நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

கடந்த 2013 ஆம் ஆண்டு 50 ஆயிரம் ரூபாவை லஞ்சமாக பெற்ற குற்றச்சாட்டில் அக்குரணை பிரதேச சபையின் செயலாளரை குற்றவாளியாக கண்ட கொழும்பு உயர் நீதிமன்றம் கடூழிய சிறை தண்டனையை வழங்கியுள்ளது

# சட்டநாதனின் நூல் வெளியீடு

க.சட்டநாதன் எழுதிய 'தஞ்சம்' சிறுகதைத் தொகுப்பு நூல் வெளியீடு நாளை சனிக்கிழமை பிற் பகல் 3.30 மணிக்கு யாழ்ப்பாணம் ஆரியகுளம் முன்பாக உள்ள புதிய உயர் கல்லூரி மண்டபத்தில் பேராசிரியர் இரா.சிவசந்திரன் தலைமையில் நடைபெறும்.

வரவேற்புரையை சி.ரமேஷ் நிகழ்த்த, வெளியீட்டுரையை தி.செல்வமனோகரனும் மதிப்பீட்டுரையை த.அஜந்தகுமார், ந.குகபரன் ஆகியோரும் வழங்குவர். (உ)

# தொழில்நுட்பக் கற்கை நெறிக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன

தேசிய பயிலுநர் கைத்தொழில் பயிற்சி அதிகார சபையின் கீழ் தகவல் தொடர்பாடல் தொழில் நுட்பத்தில் (ICTT -NVQ Level 4) சான்றிதழ் பெறுவதற்கான இலவசப் பயிற்சிநெறிக்கு யாழ்ப்பாணம், மானிப்பாய் பயிற்சி நிலையங்களுக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

கல்வித் தகைமை க.பொ.த (சா/த) இல் கணிதம் – C ஆங்கிலம் – C உள்ளடங்கலாக 6 பாடங்களில் சித்தி அல்லது கணிதம் – S ஆங்கிலம்– S உள்ளடங்கலாக 6 பாடங்களில் சித்தியும் க.பொ.த(உ/த) இல் இரண்டு பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும். அத்துடன் விண்ணப்ப முடிவுத் திகதியன்று 25 வயதிற்கு உட்பட்டவராகவும் இருத்தல் வேண்டும்.

தகுதியுடையவர்கள் முழுப் பெயர், முகவரி, பிறந்த திகதி, தேசிய அடையாள அட்டை இலக்கம் கல்வித் தகைமை, தொலைபேசி இலக்கம், பயில விரும்பும் பயிற்சி நிலையம் என்பவற்றைக் குறிப்பிட்டு சுயமாகத் தயாரிக்கப்பட்ட விண்ணப்பப் படிவத்தை மாவட்ட அலுவலகர் NAITA இல. 44, சோமசுந்தரம் வீதி, சுண்டுக்குளி, யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு 10.08.2018 இற்கு முன்னர் அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்கின்றோம். அத்துடன் காகித உறையின் இடது பக்க மேல் மூலையில் தகவல் தொடர்பாடல் கற்கைநெறி (ICTT) இதற்கான விண்ணப்பம் என தவறாது குறிப்பிடப்பட வேண்டும் என யாழ். மாவட்ட அலுவலர் கி.கிருஷ்ணபாலன் அறிவித்துள்ளார்.

இப் பயிற்சி நெறிக்கு தெரிவு செய்யப்படும் மாணவர்களுக்கு 200 மணித்தியால ஆங்கில பாடநெறி இலவசமாக நடத்தப்பட்டு அதற்கும் சான்றிதழ் வழங்கப்படும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

காலைக்கதிர் Kalaikkathir



# மஸ்கெலியா வைத்தியசாலைக்கு முன் மக்கள் ஆர்ப்பாட்டம்








கண்டி,ஜூலை 20

மஸ்கெலியா வைத்தியசாலையில் வைத்தியர்கள் இன்மையால் நேற்று வைத்தியசாலைக்கு சிகிச்சைக்காக வந்த 300 இற்கும் மேற்பட்ட நோயாளர்கள் பல சிரமங்களை எதிர்நோக்கியுள்ளனர்.

இதன் காரணமாக வைத்தியர்களை உடனடியாக நியமிக்குமாறு கோரியும் வைத்தியசாலையில் நிலவும் குறைபாடு களை உடனடியாக நிவர்த்தி செய்யுமாறு கோரியும் அந்தப் பகுதியை சேர்ந்த சுமார் 300 இற்கும் மேற்பட்ட மக்களும், மஸ்கெலியா பிரதேச சபையின் ஐக்கிய தேசியக் கட்சியின் உறுப்பினர்கள் சில ரும் வைத்தியசாலைக்கு முன்பு சுமார் ஒரு மணி நேரம் ஆர்ப்பாட்டத்தில் ஈடு பட்டனர்.

மஸ்கெலியா பிரதேச சபையின் எதிர்க்கட்சி உறுப்பினர்களின் ஏற்பாட்டில் இடம்பெற்ற இந்த ஆர்ப்பாட்டத்தில் பதாகைகளை ஏந்தி, கோஷங்களை எழுப் பியவாறு வைத்தியசாலைக்கு சிகிச்சை பெற வந்த நோயாளர்களும், பிரதேச மக்களும் ஈடுபட்டனர்.

கடந்த காலங்களில் வைத்திய சாலையில் வைத்தியர்கள் இல்லாமல் நோயாளர்கள் பல சிரமங்களை எதிர் நோக்கியுள்ளதுடன், சிகிச்சைக்கென வந்தவர்களும், வைத்தியசாலையில் தங்கி சிகிச்சை பெற்றவர்களும் கடந்த 17 ஆம் திகதியன்று மாலை வெளியேற் றப்பட்டனர்.

இதனால், சிகிச்சை பெற்ற நோயா ளர்கள் உட்பட வெளி நோயாளர்களும் சிரமங்களுக்கு மத்தியில் வீடு திரும்ப வேண்டிய இக்கட்டான நிலை ஏற்பட்ட தோடு, மிக மோசமான நிலையில் இருந்த நோயாளர்கள் கிளங்கன் வைத்திய சாலைக்கு மாற்றப்பட்டுள்ளனர் என வைத்தியசாலையின் வைத்திய வட்டா ரங்கள் தெரிவித்தன.

எனவே நாட்டின் ஜனாதிபதியும், சுகா தார அமைச்சரும், மத்திய மாகாண சுகா தார அமைச்சின் அதிகாரிகளும் இதற்கு உடனடியாக தீர்வைப் பெற்றுத் தர வேண்டும் என ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட் டவர்கள் கோரிக்கை விடுத்தனர்.

(கு)

# பாதாள உலக குழுவினரின் பாதுகாப்பு எனக்கு எதற்கு?



## சீறுகின்றார் பொன்சேகா

கொழும்பு, ஜூலை 20

பாதாளஉலக குழுக்களைச் சேர்ந்தவர்களுக்கு தஞ் சமளித்துள்ளார் என தன் மீது சுமத்தப்பட்டுள்ள குற் றச்சாட்டுகளை முன்னாள் இராணுவத் தளபதியும் அமைச்சருமான சரத் பொன்சேகா நிராகரித்துள்ளார்.

தனது பெயருக்கு களங்கத்தையும் தனக்கு நெருக் கடியையும் ஏற்படுத்துவதற்காக திட்டமிட்டு முன்னெடுக் கப்படும் பிரசாரம் இதுவென அவர் தெரிவித்துள்ளார்.

பொலிஸாரால் தேடப்படும் குற்றவாளிகள் ஐவருக்கு அமைச்சர் ஒருவர் மெய்ப்பாதுகாவலர் வேலையை வழங்கியுள்ளார் என சில ஊடகங்கள் தெரிவித்துள்ளன எனக் குறிப்பிட்டுள்ள சரத் பொன்சேகா ஓர் ஊடகம் தன்னுடைய பெயரையும் படத்தையும் பயன்படுத்தி செய்தி வெளியிட்டுள்ளது, மற்றைய ஊடகம் எனது பெயரைக் குறிப்பிடாமல் செய்தி வெளியிட்டுள்ளது எனவும் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கை யில் –

எனக்கு பாதாள உலகத்தவர்களின் பாதுகாப்பு தேவையில்லை அவர்களுக்கும் எனது பாதுகாப்பு தேவையில்லை.

எனக்கு பொலிஸாரும் விசேட அதிரடிப்படையினரும் பாதுகாப்பு வழங்குகின்றனர். இந்த செய்தியை வெளி யிட்டுள்ள பத்திரிகையாளருக்குத் தனிப்பட்ட நிகழ்ச்சி நிரல் இருக்கவேண்டும். அவர் என்னை முன்னரும் விமர்சித்துள்ளார்.

எனது அமைச்சு அவருக்கு எதிராக சட்டநடவடிக்கை எடுக்கும், அரசியல் சக்தியொன்று அவரின் பின்னால் உள்ளது எனவும் அமைச்சர் சரத்பொன்சேகா தெரி வித்துள்ளார்.

# தொழிலாளருடன் சென்ற தனியார் பஸ் விபத்து



கண்டி, ஜூலை 20

நோர்வூட் பகுதியிலிருந்து மஸ்கெலியா நோக்கி தொழிலாளர்களை ஏற்றிச் சென்ற தனியார் பஸ் ஒன்று நோர்வூட் மஸ்கெலியா பிரதான வீதி யில் வீதியை விட்டு விலகி மண்மேட்டில் மோதுண்டு விபத்துக்குள்ளாகியுள்ளது.

இந்த விபத்து நேற்றுக் காலை 7.30 மணியள வில் இடம்பெற்றுள்ளது என நோர்வூட் பொலிஸார் தெரிவித்தனர்.

வீதி வழுக்கல் தன்மையுடன் காணப்பட்டத னால் வாகனத்தை கட்டுப்படுத்த முடியாத காரணத் தினால் இவ்விபத்து ஏற்பட்டுள்ளது என விசாரணை களை மேற்கொண்டு வரும் பொலிஸார் தெரிவித் துள்ளனர்.

நேற்றுக் காலை நோர்வூட் பகுதியிலிருந்து தோட் டம் ஒன்றுக்கு தொழிலாளர்களை ஏற்றிக் கொண்டு புறப்பட்டுச் சென்ற இந்த பஸ்ஸே இவ்வாறு விபத் துக்குள்ளாகியுள்ளது.

இதில் பயணித்த தொழிலாளர்கள் எவருக்கும் பாதிப்பு ஏற்படவில்லை என தெரிவிக்கப்படுகின்றது.

இந்த விபத்து தொடர்பான மேலதிக விசாரணை களை நோர்வூட் பொலிஸார் மேற்கொண்டு வருகின் றனர்.

# ஆயுர்வேத நிலையம் என்ற பெயரில் இயங்கிய விபசார விடுதி முற்றுகை

## இரு ஆண்கள் உட்பட 11 பேர் கைது!

வெலிகட மற்றும் தெஹிவளை பகுதிகளில் நேற்று மேற்கொள்ளப் பட்ட சுற்றிவளைப்புகளின்போது ஆயுர்வேத நிலையம் என்ற போர் வையில் இயங்கி வந்த இரண்டு விபசார விடுதிகள் சுற்றிவளைக் கப்பட்டு இரண்டு ஆண்கள் உட்பட 11 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

தெஹிவளை பொலிஸ் பிரிவுக் குட்பட்ட கவுடான வீதியில் காணப் படும் பிரபல ஆயுர்வேத நிலைய மொன்றுக்குள் சட்டவிரோதமான முறையில் நடத்திச் செல்லப்பட்ட விபசார விடுதியொன்று சுற்றி வளைக்கப்பட்டுள்ளது.

இச் சுற்றிவளைப்பின் போது அதன் முகாமையாளர் உட்பட விப சாரத்தில் ஈடுபட தயாராகவிருந்த 4 பெண்கள் கைதுசெய்யப்பட்டனர். இவ்வாறு கைது செய்யப்பட்ட நால் வரும் அநுராதபுரம், மாத்தளை மற்றும் களுத்துறை பிரதேசங் களைச் சேர்ந்த 33,29,25 மற்றும் 19 வயதுகளையுடையவர்கள் என விசாரணைகளின் மூலம் தெரிய வந்துள்ளது.

இந்நிலையில், கைதுசெய்யப் பட்ட நால்வரை நேற்று கல்கிஸ்ஸை நீதிவான் நீதிமன்றில் ஆஜர்படுத்த பொலிஸார் நடவடிக்கை மேற் கொண்டிருந்ததுடன் இச்சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணை களை தெஹிவளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

அதேபோல் வெலிகட பொலிஸ் பிரிவுக்குட்பட்ட 2 ஆவது ஒழுங்கை நாவல வீதி இராஜகிரிய பகுதியில் பிரபல ஆயுள்வேத நிலையத்திற் குள் இயங்கி வந்த விபசார விடுதி யும் சுற்றிவளைக்கப்பட்டு அதன் முகாமையாளர்களான பெண் மற் றும் ஆணொருவரும், அங்கு ஆயுர் வேத வைத்தியராச் செயற்பட்ட மேலும் ஒரு ஆணும், விபசாரத் திற்குதயாராகவிருந்த நான்கு பெண் களும் கைது செய்யப்பட்டனர்.

இந்த விபசார விடுதி மிகவும் சூட்சு மமான முறையில் நடத்திச் செல்லப் பட்டுள்ளதோடு, இங்கு நாட்டின் பல தரப்பிலான முக்கியஸ்தர்கள் பலரும் வந்து செல்கின்றனர் என் றும் விசாரணைகளில் கண்டறியப் பட்டுள்ளது.

இந்தச் சம்பவத்தில் வல்லவ, நீர் கொழும்பு மற்றும் பொலன்னறு வையைச்சேர்ந்த 34,33,31,20,29, 27 மற்றும் 25 வயதுகளை யுடையவர்களே கைது செய்யப்பட் டுள்ளனர்.

இந்த நிலையில் இவர்கள் எழு வரையும் நேற்றுமுன்தினம் அளுத் கடை நான்காம் இலக்க நீதிவான் நீதிமன்றில் ஆஜர்படுத்த பொலி ஸார் நடவடிக்கை மேற்கொண்டிருந் தமையுடன் இந்தச் சம்பவம் தொடர் பில் மேலதிக விசாரணைகளை வெலிகட பொலிஸார் மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# சைவ பரிபாலன சபை நடத்தும் சுந்தரமூர்த்தி நாயனார் குருபூசை

சைவ பரிபாலன சபை வழமை போல் நடத்தி வரும் நாயன்மார்கள் குருபூசைகள் வரிசையில் சுந்தரமூர்த்தி நாயனார் குருபூசை நாளை சனிக் கிழமை காலை 8.30 மணியளவில் சபையாரது நாவலர் ஆச்சிரம மண்டபத்தில் (66, கல்லூரி வீதி) நடை பெறவுள்ளது.

சைவபரிபாலன சபையின் தலைவர் முன் னாள் நீதிபதி இ.வசந்தசேனன் தலைமையில் நடைபெறும் குருபூசை நிகழ்வில் பிரதம விருந்தி னராக யாழ். வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் தங்கவேலு பாலராஜும், சிறப்பு விருந்தினராக அத்தியார் இந்துக் கல்லூரி அதிபர் கு.ரவிச்சந்திர னும் கௌரவ விருந்தினராக கைதடி நுணாவில் அ.த.க. பாடசாலை அதிபர் ஆறுமுகம் தங்கவேலு வும் கலந்துகொள்வர்.

நிகழ்வில் திருமதி குககுமாரி விஜயரகுநாதன் சிறப்புச் சொற்பொழிவு ஆற்றுவார். வில்லிசையும் இடம்பெறும்.

(இ





யாழ்.சின்னப் பள்ளிவாசல் மையவாடியில் யாழ். மாநகர சபை உறுப் பினர் கே.எம். நிலாம் தலைமையில் கடந்த ஞாயிறு சிரமதானப் பணிகள் இடம்பெற்ற போது.... (இ-19)

# இராணுவத்தினர் அமைத்த மண் அணைகளால் தொழில் இழந்து தவிக்கும் இயக்கச்சி மீனவர்

## தீர்வு பெற்றுத் தருவேன் என குருகுலராஜா உறுதி





கடந்த போர் காரணமாக 1991 ஆம் ஆண்டு இயக்கச்சி கூட்டுப்படைத் தளத்தை பாதுகாக் கும் நோக்கோடு இராணுவத்தினர் அமைத்த மண் அனைகளாலும், காவலரண்களாலும் ஆனையிறவு கடல் நீரேரிக்கு சுண்டிக்குளம் கடலில் இருந்து நீர் வரத்துக்களும் அதனோடு இணைந்ததான கடல் வளங்களின் வருகை யும் பாதிக்கப்பட்டுள்ளமையால் அதனை நம்பி ஆனையிறவு நீரேரியில் தொழில் நடவ டிக்கையில் ஈடுபடும் இயக்கச்சி பகுதி மீனவர் களின் தொழில் நடவடிக்கைகள் வெகுவாகப் பாதிக்கப்பட்டுள்ளமையுடன் அதனை நம்பி வாழும் பல குடும்பங்கள் வறுமையில் வாடித் தவிக்கின்றனர்.

இந்த நிலைமைகளை ஆராய்வதற்காக வடக்கு மாகாண சபையின் முன்னாள் கல்வி அமைச்சரும் மாகாண சபை உறுப்பினரு மான த.குருகுலராஜா நேரடியாகவே களப் பயணம் மேற்கொண்டு நிலைமைகளை பார்வையிட்டதுடன் இந்தப் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வை பெற்றுத் தருவதாகவும், இராணுவத்தினர் அமைத்துள்ள மண் அணை களையும், காவலரண்களையும் அகற்றி இயக்கச்சி மீனவர்களுடைய ஜீவனோபாய நடவடிக்கைகள் பாதிக்கப்படாத வகையில் உரிய தரப்பினர் ஊடாக நடவடிக்கை எடுப் பதாகவும் உறுதியளித்தார்.

இந்தக் களப் பயணத்தில் வடக்கு மாகாண சபையின் முன்னாள் கல்வி அமைச்சரும், மாகாணசபை உறுப்பினருமான த.குருகுல ராஜா மற்றும் பச்சிலைப்பள்ளி பிரதேச சபை தவிசாளர் சு.சுரேன், உபதவிசாளர் மு.கயன், உறுப்பினர் த.றமேஸ் ஆகியோருடன் இயக் கச்சி மீனவர் சங்கப் பிரதிநிதிகளும் உடனி ருந்தனர். (இ)





மேல் மாகாண மற்றும் மா நகர அபிவிருத்தி சபையின் ஆலோசனையில் வட மாகாண சபை பொது போக்குவரத்து வசதிகளை மேம்படுத்தும் நடைமுறைக்கு அமைய 'தகிர்த புரவர' செயல் திட்டத்தின் கீழ் மன்னாரிலும் புதிய பஸ் நிலை யங்களுக்கான அடிக்கல் நடும் விழா நடைபெறவுள்ளன.

மன்னார் நகரில் மேற்கொள்ளப்பட இருக்கும் இந் நவீன புதிய பஸ் நிலையங்களுக்கான அடிக்கல் நடும் விழா இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு சம் பிரதாய முறைப்படி இடம்பெறும்.

இலங்கை போக்குவரத்து சபை மற்றும் தனியார் போக்குவரத்துக்கான இப் புதிய பஸ் நிலையங்கள் 18 கோடியே 6 லட்சம் ரூபா செலவில் நிர்மாணிப்பதற்கான ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன.

இன்று மன்னார் நகரில் நடைபெற இருக்கும் அடிக்கல் நடும் விழாவில் மேல் மாகாண மற்றும் மாநகர அபிவி ருத்தி அமைச்சர் சம்பிக்க ரணவக்க, நிதி, ஊடகத்துறை அமைச்சர் மங்கள சமரவீர மற்றும் வடமாகாண சபை முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன், வன்னி நாடாளு மன்ற உறுப்பினர்கள், மாகாண சபை உறுப்பினர்கள் பலரும் கலந்து கொள்ள இருக்கின்றனர்.

இவ் விழா சம்பந்தமாக வாத்தக மற்றும் கைத்தொழில் அமைச்சர் ரிஷாட் பதியூதீன் தலைமையில் மன்னார் மாவட்ட செயலகத்தில் ஆலோசனைக் கூட்டம் நேற்றுமுன் தினம் புதன்கிழமை நடைபெற்றது.

இக் கூட்டத்தில் மன்னார் மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் எஸ்.குணபாலன், மன்னார் பிரதேச செயலாளர் எம்.பரம தாசன், மன்னார் நகர சபை முதல்வர் ஞா.அன்ரனி டேவிட்சன், மன்னார் பிரதேச சபை தவிசாளர் சா.க.முஜஜுஹீர் உட்பட பலர் கலந்து கொண்டு இவ் விழாவுக்கான ஏற்பாடு கள் சம்பந்தமாக கலந்துரையாடினர். (இ-112)





யாழ்.ஆறுகால்மடம் அறிவொளி முன்பள்ளி சிறார்களின் விளையாட்டு விழா கடந்த சனிக்கிழமை யாழ்.வண். ஸ்ரீ வைத்தி லிங்கம் வித்தியாலய மைதானத்தில் சி.க.தம்பிராசா தலைமையில் இடம்பெற்ற போது வடமாகாண சபை உறுப்பினர் அய்யூப் அஸ்மின் பிரதம அதிதியாக கலந்துகொண்டு பரிசில்கள் வழங்கினார். (இ-19)

**படங்கள். எம்.எல்.லாபிர்**





# தாய்லாந்து குகைக்குள் இருந்து மீட்கப்பட்ட

## சிறுவர்களை சில காலம் புத்த துறவிகளாக்கும் திட்டம்?

தாய்லாந்தின் தாம் லுவாங் குகைக் குள் வெள்ளத் தின் நடுவே 19 நாள்கள் சிக்கி யிருந்த 12 சிறுவர்களும் தங்கள் சந்தித்த இன் னல்கள் பற்றியும், முக் குளிப்பு வீரர்கள் தங் களை கண்டறிந்த 'அற் புத தருணம்' குறித்தும் முதல் முறையாகப் பேசியுள்ளனர்.

ஆங்கிலம் பேசத்தெரிந்த, அந் தக் கால்பந்து குழுவின் 14 வய தாகும் அதுல் சாம் எனும் சிறுவன், பிரிட்டன் முக்குளிப்பு நிபுணர்கள் தங்களைக் கண்டறிந்தபோது தங் களால் 'ஹலோ' மட்டுமே சொல்ல முடிந்தது என்று கூறியுள்ளார்.

அவர்களை மீட்ட தாய்லாந்து கடற்படைக் குழுவினருடன் 'சியாங் ராயில்' செய்தியாளர்களை சந் தித்த அவர்கள் கால்பந்து சீருடை யில் இருந்தனர்.

புதன்கிழமை அன்று மருத்துவ மனையில் அவர்களுக்கு அளிக் கப்பட்ட சிகிச்சை முடிவுக்கு வந்து, அவர்கள் வீடு திரும்பி வருகின் றனர்.

பாறைகளில் வடிந்த நீரை மட் டும் அருந்தி இரண்டு வாரங்க ளுக்கும் மேலாக அந்தக் குகைக் குள் தங்கியிருந்த அக்குழுவைச் சேர்ந்த ஒரு சிறுவன், "நீர் தூய்மை யாக இருந்தது. உணவு எங்களிடம் இருக்கவில்லை" – என்று கூறினான்.

தங்களின் இந்த இன்னல் மிக்க அனுபவத்தில் இருந்து பல விட யங்களையும் கற்றுக்கொண்டுள் ளோம் என்று அந்த சிறுவர்களில் சிலர் கூறினார்கள்.

இனிவரும் காலங்களில் மிகுந்த



எச்சரிக்கையுடன் இருப்பேன் என் றும் எனது வாழ்வை இயன்ற வரை முழுமையாக இனி வாழ்வேன் என்று ஒரு சிறுவன் கூறினான்.

அமைதியாகவும் வலிமையா கவும் இருக்க இந்த அனுபவம் கற் றுக் கொடுத்துள்ளது என்று இன் னொரு சிறுவன் தெரிவித்தான்.

இதுதான் அந்த சிறுவர்களின் ஒரே அதிகாரபூர்வ செய்தியாளர் சந்திப்பு என்று கூறியுள்ள சியாங் ராய் மாகாண ஆளுநர் பிரசோன் பிராஸ்துகான், இனிமேல் அவர்கள் ஊடகங்களிடம் பேச மாட்டார்கள் என்றும் கூறினார்.

அந்த சிறுவர்களிடம் கேட்கப் பட்ட கேள்விகள் முன்கூட்டியே அதி காரிகளிடம் வழங்கப்பட்டன. அவற்றை ஒரு குழந்தைகளுக் கான உளவியல் நிபுணர் ஒருவர்,



ஆராய்ந்து தேர்வு செய்தார். அந்த சிறுவர்களுக்கு மன அழுத்தம் எதையும் உண்டாக்காது என்று கருதப்பட்ட அந்த கேள்விகள் மட் டுமே அவர்களிடம் கேட்கப்பட்டன.

அந்த சிறுவர்களை சில காலம் மட்டுமே புத்த துறவிகளாக்கும் திட்டமும் உள்ளது. மோசமான அனு பவங்களுக்கு உள்ளான ஆண் களை சில காலம் துறவிகளாக்கும் வழக்கம் தாய்லாந்தில் உள்ளது.

**அவர்கள் ஏன் அந்த குகைக் குள் சென்றார்கள்?**

தாய்லாந்தில் சுமார் 10 கி.மீ. நீள முள்ள ஆழமான தாம் லுவாங் மலைக் குகைக்கு ஜூன் 23 ஆம் திகதி சாகசப் பயணம் மேற்கொண்ட 12 பேர் கொண்ட சிறுவர் கால்பந்து அணியும் அவர்களது துணை பயிற் சியாளரும் குகையில் ஏற் பட்ட திடீர் வெள்ளப்பெருக் கால் உள்ளேயே சிக்கிக் கொண்டனர்.

அந்த சிறுவர்கள் அனைவரும் சைக்கிள் ஓட்டுவதில் அதிக விருப் பம் உள்ளவர்கள். அவர் களை சைக்கிளில் கால் பந்து மைதானம் செல்ல துணை பயிற்சியாளர் எக்க போல் கூறியுள்ளார். அவர்கள் குகையை நோக்கி செல்வதை அப்போது யாரும் அறிந்திருக்கவில்லை.

அன்று சிறுவர்களில் ஒருவரான பீராபத் 'நைட்' சோம்பியெங்ஜாயின் பிறந்த நாள். அன்று அவர்கள் அனைவரும் ஓர் உள்ளூர் உணவு விடுதியில் 700 பாட் அளவுக்கு பணத்தை செலவிட்டுள்ளனர். அது அப்பகுதியில் ஒரு பெரிய தொகை.

குகைக்கு வெளியே அவர்கள் நிறுத்தியிருந்த சைக்கிள்கள் கேட் பாரற்றுக் கிடந்ததைப் பார்த்து யாரோ குகைக்குள் சிக்கிக்கொண்டதை அறிந்துகொண்ட அதிகாரிகள், அரசை உஷார்ப்படுத்தியமையை அடுத்தே அவர்களைத் தேடும் பணி அன்றிரவே தொடங்கியது


# பாரதியை உலகறிய செய்தவர்

## சுவாமி விபுலானந்த அடிகளார்

உலகின் முதல் தமிழ்ப் பேராசிரியர் முத்தமிழ் வித்தகர் சுவாமி விபுலா நந்த அடிகளார் ஆற் றிய அளப்பரிய பணிகளை இன்றும் வையகம் நினைவில் கொண்டிருக் கிறது.

முத்தமிழிலும் சிறந்து விளங்கிய காரணத்தால் முத்தமிழ் வித்தகர் எனப் போற்றப்பட்டவர் சுவாமி விபு லானந்தர். அவரின் 71வது சிரார்த்த தினம் நேற்றாகும்.

அவர் பல்துறை சார்ந்த பேரறி ஞர். ஆசிரியராக, பண்டிதராக, விஞ்



ஞானப் பட்டதாரியாக, பாடசாலை களின் முகாமையாளராக, பல் கலைக்கழகங்களில் தமிழ்த்துறைப் பேராசிரியராக, அறிஞராக, ஆராய்ச்சியாளராக, மொழிபெயர்ப் பாளராக, முத்தமிழ் வித்தகராக விளங்கியவர் விபுலானந்தர்.

சமூகத் துறவியாக வாழ்ந்து செய்த தொண்டுகளும் தமிழுக்காற் றிய சேவைகளும் அவரை என்றும் நினைவு கூரச் செய்வனவாகும்.

தமிழ் இலக்கியம் பாரதிக்கு முன் னால் பாரதிக்குப் பின்னால் என்று இன்றைக்கு வரையறை செய்யப்படு கின்றது. அந்த அளவுக்குத் தமிழ் இலக்கியத்திலே தாக்கத்தை ஏற்படுத் தியவர் மகாகவி பாரதியார். சுப்பிர மணிய பாரதியார் எழுதிய பாட்டுக்கள் யாவும் மிகுந்த உணர்ச்சியுடன் முன் னேற்றமான கருத் துக்கள் பொதிந்துள் ளனவாய் இருந்தா லும் அவை பழைய யாப்பமைதியோ டும், தமிழ் மரபோ டும் பொருந்தாமை யினால் உண்மை யான தமிழ்க் கவி களல்ல என இலக் கண இலக்கியங்க ளைக் கற்றறிந்த பண்டிதர்கள் வெறுத் தனர்.

அப்பாடல்களுக் குரிய மேலான சிறப் பையும் கொடுக்க மறுத்தனர். ஆனால் அடிகளார் அண்ணா மலைநகரை அடைந் தபோது அங்கு 'பாரதி கழகம்' என்ற சங் கத்தைக் கூட்டி அப் பாட்டுக்களை இசை அறிந்த புலவரைக் கொண்டு இசையுடன் பாடுவித்தார்.

அதன் பின்னரே பாரதியாரின் புகழும், பாராட்டுக்களும் தமிழ் நாடெங்கணும் பரவின. தேடாதி ருந்த பாரதியாரை தமிழுலகம் கனம் பண்ண வைத்த பெருமை விபுலா னந்த அடிகளாருக்கே உரியதாகும்.

பாரதியாரைப்பற்றி ஆயிரக்கணக் கான நூல்கள் வந்து விட்டன. இலட் சக்கணக்கான கட்டுரைகள் எழுதப் பட்டு விட்டன. பாரதியைத் தெரியாத தமிழர்கள் பட்டிகளில் தொட்டிகளில் கூட இல்லை என்கின்ற அளவுக்கு அவரது பாடல்கள் படித்தவர்களை யும் பாமரர்களையும் எட்டியிருக்கிற தென்றால் அதற்குக் காரணம் சுவாமி விபுலானந்த அடிகளே.

பாரதியாரின் முற்போக்குக் கருத் துக்களை ஏற்றுக்கொள்ளாத அபி ராமணப் பண்டிதர்கள் பாரதியை அவமதித்தார்கள். அவரின் பாடல் களை வெறுத்தார்கள். அவற்றை இலக்கியமென்று ஏற்க மறுத்தார் கள். மக்களுக்குத் தெரியவராதபடி மறைத்தார்கள். பாடசாலைகளிலும் கல்லூரிகளிலும் புறக்கணித்தார் கள்.

படித்தவர்கள், விபுலானந்தரின் அறிவை மதித்தவர்கள், அவருக்குப் பதவி அளித்தவர்கள் எல்லோ ருமே பாரதியைக் குழிதோண்டிப் புதைத்தார்கள். இத்தனை பேருக் கும் எதிராக பாரதியை மகாகவியாக படித்த மக்களிடையே உலவ விட்ட வர் விபுலானந்த அடிகள் என்றால் அவரது அஞ்சா நெஞ்சத்தை என் னென்பது?

விபுலானந்தர் தோன்றாதிருந் திருந்தால், தமிழ்நாட்டில் கால் ஊன் றாதிருந்திருந்தால் மகாகவி பாரதி யாரை உலகம் காணாதிருந்திருக் கும். பாரதியின் தமிழ் வீணாக மழுங்கி ருக்கும். சங்ககாலத்திற்கு முன்னர் தோன்றிய எண்ணற்ற இலக்கியங் களை ஆற்று நீரிலே எறிந்து அழித் ததைப் போல தீயிலே போட்டு எரித் ததைப் போல சாதிவெறி பிடித்த மேதாவிகள் பாரதியின் பாடல்களை யும் அழித்திருப்பார்கள்.

சுவாமி விபுலானந்தர் அவர்கள் பல்கலைக்கழக மட்டத்திற்குப் பார தியைக் கொண்டு சென்றதால் பார தியை யாராலும் அழிக்க முடிய வில்லை. விபுலா னந்த அடிகளின் தமிழ்ப்பணிக ளிலே இமயமென உயர்ந்து நிற்ப வற்றிலே அவர் பாரதியாரின் பாடல் களுக்கு அங்கீகா ரத்தை ஏற்படுத் திக் கொடுத்தமை யும் ஒன்றாகும்.

சங்க இலக்கி யங்களுக்கு நிக ராக எண்ணப்படு கின்ற 'கங்கையில் விடுத்த ஓலை' என் னும் அடிகளாரின் கவிதை மலரும் மற்றைய இனிமை யான கவிதை க ளும் எண்ணற்ற கட்டுரைகளும் இயற்றமிழுக்கு அவர் ஆற்றிய பணியினை இயம் பிக் கொண்டிருக்கின்றன.

**பாரதியாரின் முற்போக்குக் கருத்துக்களை ஏற்றுக்கொள்ளாத அபி ராமணப் பண்டிதர்கள் பாரதியை அவமதித்தார்கள். அவரின் பாடல்களை வெறுத்தார்கள். அவற்றை இலக்கியமென்று ஏற்க மறுத்தார்கள். மக்களுக்குத் தெரியவராதபடி மறைத்தார்கள். பாடசாலைகளிலும் கல்லூரிகளிலும் புறக்கணித்தார்கள்.**

அடிகள் மறைந்தாலும் அவர் முத்தமிழுக்கு ஆற்றிய பணிகள் என்றும் மறையா.

**வி.ரி. சகாதேவராஜா**
**(காரைதீவு நிருபர்)**




# கல்விக் கதிர் வெளியீடு 06

## தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சைக்கான மாதிரி வினாத்தாள்

### பகுதி - II

27. காலை 8.10 இற்கு வீட்டிலிருந்து சந்தைக்குச் சென்ற அம்மா மாலை 12.40 இற்கு வீட்டிற்கு வந்தார்.
1. அம்மா வீட்டிலிருந்து புறப்பட்ட நேரத்தை 24 மணித்தியாலயக் கடிகாரத்தில் காட்டும் விதத்தை எழுதுக. .

28.மைதானம் ஒன்றில் மூன்று பிள்ளைகள் நின்ற வீதம் கீழ்வருமாறு அமைந்திருந்தது. சமன் நின்ற இடத்திலிருந்து 10m வடக்கேசாந்தனும் 10 மீற்றர் மேற்கே முகுந்தனும் நின்றனர். முகுந்தனுக்குஎத்திசையில் சாந்தன் நின்றான்?
........................................................................................................

29.வகுக்குக
706 ÷ 6 = ............................................................................................

30. 11. ஏறுவரிசையில் எழுதுக.
6701, 1248, 4672, 1636...................................................................

சரியான விடையின் கீழ் கோடிடுக

31. வருடத்தின் எல்லாக் காலங்களிலும் பூக்கக்கூடிய பூவினம்
1. மேமலர் 2. முள்முருங்கை 3. அலரி

32. இரும்புச்சத்து குறைபாட்டால் ஏற்படக் கூடிய நோய்
1. நீரிழிவு 2. குருதிச்சோகை 3. கண்டமாலை

33. நீரில் வாழும் தாவரம்
1. ஐதரில்லா 2. பன்னம் 3. அரிசி

34.புத்தகங்களுக்கு பெருமளவு சேதத்தை ஏற்படுத்துவன
1. இராமபாணம், கரப்பான்
2. இராமபாணம், கறையான்
3. கறையான்,நுளம்பு

35.இலங்கைக்கேயுரிய முலையூட்டி
1. மரநாய் 2. நரி 3. யானை

36. செய்திகளை கொண்டு செல்ல உதவிய பறவை
1. பருந்து 2. கொக்கு 3. புறா 4.மயில்

37. தனியாகப் பயன்படுத்தும் பொருள்களில் ஒன்று
1.புத்தகம் 2. பென்சில் 3. பற்பசை 4. பற்தூரிகை

38. இலங்கையின் உயரமான மலையாக விளங்குவது
1. பேதுறுதாலகாலமலை
2. நக்கிள்ஸ்
3. நமுனுகுல
4. சிவனொளிபாதமலை

39. தேசியக் கொடியில் உள்ள பச்சை நிறம் குறிப்பது
1. முஸ்லிம் 2. தமிழர் 3. பறங்கியர் 4. சிங்களவர்

40. பிளேக் (Plague) எனும் கொள்ளை நோயைப் பரப்பும் பிராணி
1. நுளம்பு 2. எலி 3. குரங்கு 4. நாய்

41.உடலுக்கு சக்தி வழங்கும் உணவாக அமைவது
1. உழுந்து 2. கடலை 3. கீரை 4. கிழங்கு

42. கரப்பந்து விளையாட்டில் ஓர் அணியில் விளையாடுவது
1. 6 பேர் 2. 8 பேர் 3.12 பேர் 4. 9 பேர்




43.வாகனத் தடுப்பின் மின்குமிழ் நிறம்
1. மஞ்சள் 2. செம்மஞ்சள் 3. வெள்ளை 4.சிவப்பு


44. அதிகளவு வித்துக்களைக் கொண்ட பழம்
1. பப்பாசி 2. மா 3. ஆனைக்கொய்யா 4. மங்குஸ்தான்

45. பின்வருவனவற்றில் மிகச் சிறிய வித்து
1. கடுகு 2. பாசிப்பயறு 3. பலா 4. மா

46. 31. இரவில் மலரும் பூ
1. செம்பருத்தி 2. கடுபுல் 3. மல்லிகை 4. நித்தியகல்யாணி

47.பூரண சந்திரன் தோன்றி ஏழு நாள்களின் பின்னர் வானில் காணப்படும் வடிவத்தைக் காட்டுவது

1. 
2. 
3. 




48.சிறுவர் பாதுகாப்பு தொடர்பான முறைப்பாடுகளுக்கு அழைக்க வேண்டிய விசேட தொலைபேசி எண்
1. 118 2. 1919 3. 1929

49. கம்பஹா, களுத்துறை ஆகிய மாவட்டங்கள் எந்த மாகாணத்திற்குரியவை
1. மத்திய மாகாணம்
2. மேல் மாகாணம்
3. சப்பிரகமுவ மாகாணம்

50. நகர்ப் பகுதிகளில் விநியோகிக்கப்படும் குழாய் நீருக்காக கட்டணம் அறவிடுவதன் முக்கிய நோக்கமாக அமையாதது
1. நீர் வீண் விரயத்தை தடுத்தல்
2. ஒவ்வொரு துளி நீரும் பெறுமதியானது என்பதை உணரச் செய்தல்
3. நீரைச் சுத்திகரிப்பதற்கான செலவை ஈடு செய்தல்



## அணில் கற்று தந்த பாடம்

உண்மையான ஞானம் பெற வேண்டும் என்ற முயற்சியில் புத்தர் ஈடுபட்டு வந்தார். பல துறவிகளிடம் சீடராகச் சேர்ந்தார். பல இடங்களில் அலைந்தார். ஆண்டுகள் சென்றனவே அன்றி அவருக்கு ஞானம் கிடைக்கவில்லை. சலிப்பு அடைந்த அவர் ஞானத்தைத் தேடும் முயற்சியை விட்டுவிட்டு, நாடு திரும்பி விடலாமா என்று நினைத்தார்.


அவர் சென்று கொண்டிருந்த வழியில் குளம் ஒன்று இருந்தது. அதன் கரையில் இருந்த அணில் ஒன்று, தன் வாலைக் குளத்தின் தண்ணீரில் தோய்ப்பதும், பிறகு அந்த வாலை இழுத்து அதில் ஒட்டிக் கொண்டிருக்கும் தண்ணீரைத் தரையில் உதிர்ப்பதுமாக செய்து கொண்டிருந்தது.

இதைப் பார்த்து வியப்பு அடைந்த புத்தர், அணிலே! என்ன செய்கிறாய்? உன் வாலைக் குளத்திற்குள் விடுகிறாய். வாலில் ஒட்டி இருக்கும் தண்ணீரை வாலை ஆட்டி தரையில் வீசுகிறாய். நீ செய்வது எனக்கு விளங்கவில்லையே! என்றார்.

அதற்கு அணில், நான் இந்தக் குளத்தை வற்ற வைக்க வேண்டும் என்று முடிவு செய்து விட்டேன். அதனால்தான் இப்படிச் செய்து கொண்டிருக்கிறேன்! என்றது.சிரித்த அவர், அணிலே! நீ அல்ல, உன்னைப் போன்ற அணில்கள் கூட்டமே கோடி தடவை முயன்றாலும், இந்தக் குளத்தை வற்றச் செய்ய முடியுமா? என்று கேட்டார்.முடியுமா, முடியாதா என்பதைப் பற்றி எனக்குக் கவலை இல்லை. என் விடாமுயற்சி என்றேனும் ஒருநாள் எனக்கு வெற்றியைத் தேடித் தரும் என்ற நம்பிக்கை எனக்கு உள்ளது. இந்தக் குளம் வற்றும் வரை நான் இந்த முயற்சியை விட மாட்டேன்! என்றது.

இதைக் கேட்ட புத்தர், ஞானம் பெற இன்னும் முயற்சி செய்வோம். ஞானம் பெறும் வரை ஓய்வது இல்லை' என்ற முடிவுக்கு வந்தார்.

## நிறம் தீட்டுங்கள்



# வடக்கில் தொல்பொருள் திணைக்களத்தின் செயற்பாடுகளால் எழுந்துள்ள சந்தேகம்

## நாடாளுமன்றில் அமைச்சர் விஜேதாசவின் கவனத்துக்கு டக்ளஸ்

கொழும்பு, ஜூலை 20

வடக்கு மாகாணத்தில் உள்ள பல்வேறு இடங்கள் தொல்லியல் கட்டளைச் சட்டத்தின் 16 ஆவது பிரிவின் கீழ், தொல்பொருள் திணைக்களத்தால் புராதனச் சின்னங்களாக அடையாளப் படுத்தப்பட்டு வருகின்றன.



இதனடிப்படையில் முல்லைத் தீவு மாவட்டத்தில் மிக அதிகளவிலான இடங்கள் புராதனச் சின்னங்களாக அடையாளப்படுத்தப்பட்டுள்ளன என்றும் இவற்றுள் முல்லைத்தீவு நகரப் பகுதியில் அமைந்துள்ள பொதுச் சந்தையும் உள்ளடக்கப்பட்டுள்ளது எனவும் தெரியவருகின்றது.

மேற்படி பொதுச் சந்தை அங்குள்ள வர்த்தகர்களால் அரசுக்கு முறையாக வரிகள் செலுத்தப்பட்டு, பல காலமாக செயற்படுத்தப்பட்டு வருகின்ற நிலையில், அதனை புராதனச் சின்னங்களுக்குள் உள்வாங்கப்பட்டிருப்பதனால் மேற்படி வர்த்தகர்கள் பெரும் பாதிப்பை எதிர்நோக்கி வருகின்றனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

அத்துடன், யாழ்ப்பாணம், நல்லூரில் உள்ள வரலாற்றுப் புகழ்மிக்க யமுனா ஏரி மற்றும் சங்கிலியன் தோப்பு என்பன எவ்விதமான பராமரிப்புகளும், பாதுகாப்பு ஏற்பாடுகளும் இன்றிக் காணப்படுகின்றன. யமுனா ஏரியைச்சுற்றி பாதுகாப்பு வேலி அமைக்குமாறு அப்பகுதி மக்களால் பல தடவைகள் சுட்டிக் காட்டியுள்ள நிலையில், தொல்பொருள் திணைக்களம் அது தொடர்பில் உரிய அவதானங்களைச் செலுத்தியதாகத் தெரியவில்லை.

பாதுகாப்பு வேலி இன்மை காரணமாக இதுவரையில் மேற்படி ஏரியில் 5 மனித உயிர்கள் பலியாகியுள்ளமையுடன், மேலும் மூவர் தற்கொலைக்கு முயன்று உயிர் காப்பாற்றப்பட்டுள்ளனர் எனத் தெரியவருகின்றது.

அதே நேரம், சங்கிலியன் தோப்பும் தனியார் ஆக்கிரமிப்புகள் இடம்பெறும் நிலைக்குத்தள்ளப்பட்டு, மேற்படி சங்கிலியன் தோப்பிற்குரிய காணி பறிபோகும் அபாயம் ஏற்பட்டு வருகின்றது.

அந்தவகையில் முல்லைத் தீவு மாவட்டத்தில் தொல்பொருள் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்டு வருகின்ற நடவடிக்கைகள் தொடர்பிலும் தொல்பொருள் திணைக்களத்தின் நடவடிக்கைகள் எந்த ஆய்வுகளின் அடிப்படையில் மேற்கொள்ளப்படுகின்றன? என்றும் முல்லைத்தீவு பொதுச் சந்தையின் நிலைமை தொடர்பில் உண்மை நிலை என்ன? என்பது தொடர்பாகவும் தெளிவு படுத்தவேண்டும் என்பதுடன் யாழ்ப்பாணம், நல்லூர் யமுனா ஏரியைச் சுற்றி பாதுகாப்பு வேலி அமைத்து அதனையும், சங்கிலியன் தோப்பைத் தனியார் ஆக்கிரமிப்புகளிலிருந்து விடுவித்து அதனையும் பாதுகாத்து, பராமரிப்பதற்கு உடனடி நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியுமா? என்றும் அமைச்சர் விஜேதாச ராஜபக்ஷ தெளிவுபடுத்த வேண்டும் என டக்ளஸ் எம்.பி. கேள்வி எழுப்பியுள்ளார்.

நாடாளுமன்றில் நேற்றையதினம் நடைபெற்ற கேள்வி நேரத்தின்போதே உயர் கல்வி மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் விஜேதாச ராஜபக்ஷவிடம் ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகமும் நாடாளுமன்ற உறுப்பினருமான டக்ளஸ் தேவானந்தா இவ்வாறு கேள்வி எழுப்பியுள்ளார்.

# வடக்கில் 5 ஆயிரத்துக்கும் மேல் அபாய வெடிபொருள்கள் அழிப்பு



கடந்த 2016 ஆம் ஆண்டு தொடக்கம் 2018 ஜூன் மாதம் வரையான காலப் பகுதியில் கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களில் சுமார் 5 ஆயிரத்து 442 அபாயகரமான வெடிபொருள்களை அழித்துள்ளோம் என்று ஸார்ப் நிறுவன முகாமையாளர் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி மாவட்டத்தில் பளைப் பகுதியில் ஜப்பான் நாட்டு நிதியுதவியுடன் இயங்கி வரும் ஸார்ப் மனிதாபிமானக் கண்ணிவெடியகற்றும் அரச சார்பற்ற நிறுவனமானது கடந்த 2016 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் தொடக்கம் 2018 ஜூன் வரையான காலப் பகுதியில் முல்லைத்தீவு மாவட்டத்தில் ஒட்டுசுட்டான் பிரதேச செயலகத்தின் அம்பகாமம் மற்றும் தச்சடம்பன் பகுதியிலும் கிளிநொச்சி மாவட்டத்தில் பச்சிலைப்பள்ளி பிரதேச செயலகத்தின் கீழ் உள்ள முகமாலையிலும் 5 இலட்சத்து 32 ஆயிரத்து 391 சதுரமீற்றர் பரப்பளவிலான காணிகளிலிருந்து 5,442 அபாயகரமான வெடிபொருள்களை அகற்றி அழித்துள்ளோம் என்று அந்த நிறுவனத்தின் முகாமையாளர் பிரபாத் நாரம்பனவ மேலும் தெரிவித்துள்ளார்.

# மத்தள விமான நிலையம் தொடர்பில் மனித உரிமைகள் மையம் அறிக்கை




கொழும்பு, ஜூலை 20

மத்தள விமான நிலையத்தை இந்தியாவுக்கு விற்பனை செய்வது தொடர்பான ஒப்பந்தத்தில் வெளிப்படைத் தன்மை பேணப்பட வேண்டும்.

இது எமது நாட்டு அரசியல்வாதிகளினதும், அரச நிர்வாகிகளினதும் பொறுப்பாகும். என இலங்கை மனித உரிமைகள் மற்றும் ஆராய்ச்சி மையம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக அம் மையத்தினால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையிலேயே மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு -

அம்பாந்தோட்டைத் துறைமுகம் தொடர்பான ஒப்பந்தம் தொடர்பாக வெளிப்படைத்தன்மை பேணப்படவில்லை. அரசியல்வாதிகள் மற்றும் அதிகாரிகளின் தேவைகளுக்கு ஏற்ப இவ்வாறான விடயங்களில் ஒப்பந்தம் மேற்கொள்ளப்படுவதற்கு இடமளிக்க முடியாது.

இது ஊழல் மோசடிகளுக்கு வழிவகுக்கும். அவ்வாறு ஊழல் மோசடிகள் ஏற்படாதிருக்க வேண்டுமாயின் மத்தள விமான நிலையம் தொடர்பான ஒப்பந்தத்தில் வெளிப்படைத் தன்மை பேணப்பட வேண்டும்.

2013 மார்ச் மாதம் இவ் விமான நிலைய சேவைகள் ஆரம்பிக்கப்பட்டன. இதன் மூலம் 2013 ஆம் ஆண்டு 48 மில்லியன் வருமானம் கிடைக்கப்பெற்றுள்ளது. எனினும் இவ் வருடத்தில் அதற்காக செலவிடப்பட்டுள்ள தொகை 2,828 மில்லியன்களாகும்.

இதே போன்று 2014 ஆம் ஆண்டு 3, 235 மில்லியன் செலவிடப்பட்டிருந்தாலும் அவ் வருடத்தில் 136 மில்லியன் வருமானமே கிடைத்துள்ளது. 2015 இல் 72 மில்லியன், 2016 இல் 49 மில்லியன், 2017 இல் 78 மில்லியன் மற்றும் இவ்வருடம் மே மாதம் வரை 14 மில்லியன் வருமானம் கிடைக்கப்பெற்றுள்ளது. இதன்படி குறித்த வருடங்களில் சுமார் 3, 898 மில்லியன் நஷ்டமே ஏற்பட்டுள்ளது.

இவ்வாறு இலாபத்தை விடவும் அதிகமாக நஷ்டத்தை எதிர்நோக்கியுள்ள இவ் விமான நிலையத்தை தற்போது இந்தியாவுக்கு விற்பனை செய்வதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

எனவே இதற்காக பெறப்பட்ட கடன் மற்றும் வட்டி என்பவற்றை அரசாங்கம் எவ்வாறு மீளச் செலுத்தும் என்பதும், இந்தியாவுடனான ஒப்பந்தம் எவ்வாறானது என்பதும் அனைவருக்கும் தெளிவுபடுத்த பட வேண்டும் என்பதற்காகவே இந்த கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

# தீபிகாவுக்கு பாதுகாப்பு வழங்குமாறு பொலிஸ்மா அதிபருக்கு பிரதமர் ஆலோசனை

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் தலைவர் பேராசிரியர் தீபிகா உடுகமவுக்கு அச்சுறுத்தல் விடுக்கும் வகையில் தெரிவிக்கப்படும் கருத்துக்கள் தொடர்பில், பிரதமர் அலுவலகம் கண்டனம் தெரிவித்துள்ளது.

அதேவேளை, இந்த விடயம் குறித்து விசாரணைகளை மேற்கொள்ளுமாறு பொலிஸ்மா அதிபருக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது என்றும் பிரதமர் அலுவலகம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மரண தண்டனை நாட்டில் நிறைவேற்றப்படுவதற்கு எதிர்ப்புத் தெரிவித்து அவர் வெளியிட்ட கருத்தே இதற்குக் காரணம் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இவ்வாறான நிலையில், மனித உரிமைகள் ஆணைக்குழுவின் தலைவர் அடங்கலாக ஏனைய ஆணையாளர்களுக்கு பாதுகாப்பை உறுதிப்படுத்துமாறு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது என்றும் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு -

இலங்கை அரசமைப்பின் கொள்கைகளுக்கமைய அமைக்கப்படும் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு, சுயாதீனமான செயற்படும் ஓர் நிறுவனமாகும்.

மனித உரிமைகள் ஆணைக்குழுவின் தலைவர் இவ்வாறு பகிரங்கமாக அச்சுறுத்தலுக்கு உள்ளாகி இருக்கிறார் என பிரதமர் அலுவலகம் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# டிப்பர் விபத்தில் மூதாட்டி பலி!

## தப்பியோடிய சாரதியை மடக்கி பிடித்த மக்கள்

மட்டக்களப்பு, ஜூலை 20

மட்டக்களப்பு - பதுளை வீதியை அண்டியுள்ள மரப்பாலம் எனும் இடத்தில் கட்டுப்பாட்டை இழந்து அதி வேகமாகச் சென்ற டிப்பர் வாகனமொன்று மூதாட்டி மீது மோதியதில் அந்த மூதாட்டி அந்த இடத்திலேயே உயிரிழந்து விட்டார் என கரடியனாறு பொலிஸார் தெரிவித்தனர்.

விபத்தில் உயிரிழந்தவர் மரப்பாலததைச் சேர்ந்த 72 வயதான துரைச்சாமி தானி எனும் வயோதிபப் பெண் ஆவார்.

உயிரிழந்தவரின் உடல் உடற் கூறாய்வு பரிசோதனைக்காக கரடியனாறு பிரதேச வைத்தியாசலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இதேவேளை விபத்தை ஏற்படுத்திய டிப்பர் வாகனச் சாரதி தப்பியோடிய போது பொது மக்களால் துரத்திப் பிடிக்கப்பட்டு பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை கரடியனாறு பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# அணு ஆயுதங்களை அழிப்பதற்கு வடகொரியாவுக்கு காலக்கெடு இல்லை!

## அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் ‘பல்டி’

வடகொரியா அணு ஆயுதங்களை அழிப்பதற்கு கால வரையறை எதுவும் நிர்ணயிக்கப்படவில்லை என அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

வடகொரிய ஜனாதிபதி கிம் ஜாங் உன்னும் ட்ரம்பும் கடந்த மாதம் 12 ஆம் திகதி சிங்கப்பூரில் சந்தித்துப் பேசினர். அப்போது, அணு ஆயுதங்களை அழிக்க வடகொரியாவும் அந்த நாட்டுக்கு பாதுகாப்பு அளிக்க அமெரிக்காவும் ஒப்புக் கொண்டன. இதுதொடர்பாகஒருஒப்பந்தம்கையெழுத்தானது. இந்த சந்திப்புக்குப் பிறகு, அணு ஆயுதங்களை அழிக்கும் நடவடிக்கை உடனடியாக தொடங்கும் என்று ட்ரம்ப் கூறியிருந்தார்.



இந்நிலையில் இரு நாடுகளுக்கிடையே அணு ஆயுத அழிப்பு தொடர்பான பேச்சுவார்த்தை தொடங்கி உள்ளதாகக் கூறப்படுகிறது. இதனிடையே, இந்த விவகாரத்தில் அமெரிக்கா கூலிப்படைத் தலைவனைப்போல செயல்படுவதாக வடகொரியா கடந்த வாரம் குற்றம்சாட்டியது. மேலும் உயர்நிலை பேச்சின்போது அமெரிக்காவின் நிபந்தனைகள் பிரச்சினைக்குரியதாக உள்ளதாகவும் கூறியிருந்தது.

இந்தநிலையில் ட்ரம்ப் நேற்றுமுன்தினம் இது தொடர்பாக கூறும்போது – வடகொரியாவுடனான பேச்சுவார்த்தை சுமுகமாக நடைபெற்று வருகிறது. அணு ஆயுதங்களை அழிக்க காலவரையறை எதுவும் நிர்ணயிக்கப்படவில்லை. வேக உச்சவரம்பு இல்லை. இந்த விவகாரத்தில் அவசரப்படத் தேவையில்லை.

வடகொரியா மீதான பொருளாதார தடைகள் தொடர்கின்றன. அங்கு புதிதாக ஆயுத சோதனை எதுவும் நடைபெறவில்லை. இரு நாடுகளுக்கிடையிலான உறவு நன்றாக இருப்பதாக நினைக்கிறேன். அடுத்து என்ன நடக்கிறது என்று பொறுத்திருந்து பார்ப்போம் என்றும் அவர் கூறியுள்ளார்.

# சைப்ரஸில் அகதிகள் சென்ற படகு விபத்து; 19 பேர் சாவு!



சைப்ரஸ் கடற்பகுதியில் அகதிகள் சென்ற படகு கடலில் கவிழ்ந்து விபத்துக்குள்ளானதில் 19 பேர் பலியாகியுள்ளனர் என தகவல் வெளியாகியுள்ளது.

ஈராக், சிரியா, லிபியா உள்ளிட்ட நாடுகளில் நிலவும் உள்நாட்டு அரசியல் குழப்பம் காரணமாக, ஆயிரக்கணக்கான மக்கள் ஆபத்தான படகு பயணத்தின் மூலம் அகதிகளாக மேற்கத்திய நாடுகளில் தஞ்சம் அடைவது தொடர்கதையாக உள்ளது.

இவ்வாறான பயணத்தின் போது அதிகமான பயணிகளை ஏற்றி செல்லும் காரணத்தினால் பல நேரங்களில் நடுக் கடலில் படகு விபத்துகள் ஏற்படுகின்றன.

இந்தநிலையில், சைப்ரஸ் நாட்டின் வடக்கு கடற்பகுதியில் சுமார் 150 பேருடன் பயணித்த படகு மூழ்கியதில் 19 பேர் பலியாகியுள்ளனர். 103 பேர் பத்திரமாக மீட்கப்பட்டுள்ளனர். காணாமற்போன 25 பேரை தேடும் பணிகள் தீவிரமாக நடைபெற்று வருகிறது.

உயிரிழந்தவர்களின் உடல்கள் துருக்கியின் மெர்சின் நகருக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளன என்று தகவல் வெளியாகியுள்ளது. எனினும், விபத்தில் சிக்கிய அகதிகள் எந்த நாட்டைச் சேர்ந்தவர்கள் என்பது பற்றிய விவரங்கள் வெளியாகவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

# உகண்டா நாடாளுமன்றில் 25 ஆம் திகதி மோடி உரை!



கம்பாலா, ஜூலை 20

உத்தியோகபூர்வ விஜயமாக அடுத்த வாரம் உகண்டா செல்லும் பிரதமர் நரேந்திர மோடி எதிர்வரும் 25 ஆம் திகதி அந்தநாட்டின் நாடாளுமன்றத்தில் சிறப்புரையாற்றுகிறார்.

பிரிக்ஸ் உச்சி மாநாட்டில் கலந்து கொள்வதற்காக தென்னாபிரிக்கா செல்லும் பிரதமர் நரேந்திர மோடி, கிழக்கு ஆபிரிக்க நாடுகளில் ஒன்றான உகண்டா நாட்டுக்கு எதிர்வரும் 24 ஆம் திகதி செல்கிறார். எண்டபேி நகரில் உள்ள அரசு விருந்தினர் மாளிகையில் மோடிக்கு உகண்டா ஜனாதிபதி யோவேரி முசெவேனி விருந்து அளிக்கிறார்.

அத்துடன், எதிர்வரும் 25 ஆம் திகதி பிரதமர் மோடி உகண்டா நாடாளுமன்றத்தில் சிறப்புரையாற்றுவார் என துணை சபாநாயகர் ஜேக்கப் ஒவ்லன்யா குறிப்பிட்டுள்ளார்.

உகண்டா மட்டுமின்றி ருவாண்டா நாட்டிலும் பிரதமர் மோடி சுற்றுப்பயணம் செய்யவுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

# துருக்கியில் நேற்று முதல் அவசரகால நிலை நீக்கம்

துருக்கியில் கடந்த இரண்டு வருட காலமாக அமுலில் இருந்த அவசர காலநிலைமை நேற்று முதல் நீக்கப்பட்டுள்ளது.

2016 ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட ஆட்சிக் கவிழ்ப்பு முயற்சியைத் தொடர்ந்து துருக்கியில் அவசரகாலநிலைமை பிரகடனப்படுத்தப்பட்டது. அவசரகால நிலைமை பிரகடனப்படுத்தப்பட்ட பின்னர் ஆயிரக்கணக்கானோர் கைதுசெய்யப்பட்டதோடு பதவியிலிருந்தும் நீக்கப்பட்டனர்.

இந்தநிலையில் துருக்கியின் ஜனாதிபதியாகதையீப் எர்டோகன் மீண்டும் தெரிவு செய்யப்பட்ட பின்னர் அவசரகால நிலையை நீக்குவதாக வாக்குறுதியளித்திருந்தார். அதனை அவர் நேற்று நிறைவேற்றியுள்ளார்.

துருக்கியில் ஆட்சிக் கவிழ்ப்பு முயற்சி முன்னெடுக்கப்பட்ட சந்தர்ப்பத்தில் ஏற்பட்ட துப்பாக்கிச்சூடு மற்றும் கலவரத்தில் சிக்கி சுமார் 250 இற்கும் அதிகமானோர் உயிரிழந்தமை குறிப்பிடத்தக்கது. (க)

# மலேசிய பிரதமருக்கு கொலை மிரட்டல் விடுத்தவர் கைது!

தீவிரவாதிகளுடன்தொடர்புடைய ஏழு பேரை கைதுசெய்துள்ளதாக தெரிவித்துள்ள மலேசிய காவல் துறையினர் இவர்களில் நாட்டின் மன்னருக்கும் பிரதமருக்கும் மரண அச்சுறுத்தல் விடுத்த நபர் ஒருவரும் உள்ளார் எனவும் தெரிவித்துள்ளனர்.

ஜூலை 12 முதல் 17 வரையிலான காலப்பகுதியில் ஏழுபேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என காவல்துறையினர் தெரிவித்துள்ளனர். இவர்களில் நான்கு மலேசிய பிரஜைகளும் மூன்று இந்தோனேசிய பிரஜைகளும் உள்ளனர் எனவும் அவர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

மலேசிய மன்னர், பிரதமர் மற்றும் மத விவகாரங்களுக்கான அமைச்சர் ஆகியோருக்கு சமூக ஊடகங்கள்மூலம் மரணதண்டனை விடுத்த 34 வயது நபர் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார் என குறிப்பிட்டுள்ள அதிகாரிகள் மலேசிய தலைவர்கள் இஸ்லாமிய கொள்கைகளை பின்பற்றவில்லை என்ற அடிப்படையிலேயே இந்த நபர் மிரட்டல்களை விடுத்துள்ளார் எனவும் தெரிவித்துள்ளனர்.

முஸ்லிம் பண்டிகைக்கு பின்னர் மலேசியா பிலிப்பைன்ஸ் இந்தோனேசியா ஆகிய நாடுகளில் குண்டு தாக்குதலை மேற்கொள்ளப்போவதாக எச்சரித்த 42 வயது நபர் ஒருவரும் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

# பாகிஸ்தானில் நவாஸ் ஷெரீப் கட்சி ஆட்சியைப் பிடித்தால் பிரதமர் யார்?

## அவரது தம்பி என்கிறார் முன்னாள் பிரதமர் அப்பாசி

பாகிஸ்தானில் நவாஸ் ஷெரீபின் கட்சி வெற்றி பெற்றால் அடுத்த பிரதமர் யார்? என்ற கேள்விக்கு முன்னாள் பிரதமர் அப்பாசி நவாஸ் ஷெரீப் பின் தம்பி ஷாபாஸ் ஷெரீப் என பதில் தெரிவித்துள்ளார்.

342 இடங்களை கொண்ட பாகிஸ்தான் நாடாளுமன்றத்துக்கு எதிர் வரும் 25 ஆம் திகதி தேர்தல் நடக்கிறது. இதுவரை இல்லாத அளவுக்கு தேர்தலுக்கு முந்தைய வன்முறை சம்பவங்கள் அங்கு நடந்து வருகின்றன. 172 இடங்களில் வெற்றி பெறுகிற கட்சி, தனிப்பெரும்பான்மை பலத்துடன் ஆட்சிக்கு வரும்.

தற்போது நவாஸ் ஷெரீபின் பாகிஸ்தான் முஸ்லிம் லீக் (நவாஸ்), இம்ரான்கானின் பாகிஸ்தான் தெஹ்ரிக் இ இன்சாப், பிலாவல் பூட்டோவின் பாகிஸ்தான் மக்கள் கட்சி ஆகிய 3 கட்சிகள் இடையேதான் பலத்த போட்டி நிலவுகிறது.

கருத்துக்கணிப்புகளில் நவாஸ் ஷெரீப் கட்சி முந்துகிறது.

இந்த நிலையில் நவாஸ் ஷெரீப், ‘பனாமா கேட்’ ஊழலில் பதவி இழந்தபோது பிரதமர் பதவிக்கு வந்த அப்பாசியிடம், ‘தி டான்’ நாளேடு தரப்பில் சிறப்பு பேட்டி கண்டனர். அப்போது பாகிஸ்தானில் நவாஸ் ஷெரீப் பின் பாகிஸ்தான் முஸ்லிம் லீக் (நவாஸ்) கட்சி வெற்றி பெற்றால் பிரதமர் யார்? என்ற கேள்வி எழுப்பப்பட்டது.

அதற்கு அவர், ஷாபாஸ் ஷெரீப் தான் (இவர் நவாஸ் ஷெரீபின் தம்பி) அடுத்த பிரதமர். இருப்பினும் தேர்தல் முடிவுக்கு பின்னர் பிரதமர் யார் என்கிற விடயத்தில் ஒருமித்த கருத்து ஏற்படுத்தி இறுதி முடிவு எடுப்போம் என பதில் அளித்தார்.

தொடர்ந்து அவர் கூறும் போது– நவாஸ் ஷெரீப், மரியம், கேப்டன் சப்தார் ஆகியோருக்கு எதிரானவழக்கில் இதுவரை இல்லாத வகையில் ஒருதலைப்பட்சமாக வழக்கு விசாரணை நடைபெற்றது என்றும் அவர் சாடினார்.

முன்னாள் உள்துறை அமைச்சர் சவுத்ரி நிசாருக்கு போட்டியிட வாய்ப்பு அளிக்காதது பற்றிய கேள்விக்கு அப்பாசி பதில் அளிக்கையில், அவர் டிக்கெட் கேட்டு விண்ணப்பிக்கவில்லை. ஒவ்வொருவரும், ஏன் நவாஸ் ஷெரீப், ஷாபாஸ் ஷெரீப், மரியம் நவாஸ் உள்ளிட்டவர்களே டிக்கெட் கேட்டு விண்ணப்பித்தனர் என்று கூறினார்.

# ஐ.நாவின் இலக்குகளை எட்ட இந்திய அரசு உறுதி

## மத்திய அமைச்சர் ஹர்தீப் சிங் தகவல்

ஐ.நாவின் நீடித்த வளர்ச்சி இலக்குகளின் வெற்றி என்பது இந்தியாவின் கையில் உள்ளது. இந்த இலக்குகளை எட்ட பிரதமர் மோடி தலைமையிலான இந்திய அரசு உறுதியுடன் உள்ளது என மத்திய அமைச்சர் ஹர்தீப் சிங் பூரி தெரிவித்துள்ளார்.

அமெரிக்காவின் நியூயோர்க் நகரில் உள்ள ஐ.நா. தலைமையகத்தில், அரசியல் அமைப்பின் உயர்நிலைகூட்டம் நடை பெற்றது. நீடித்த வளர்ச்சி இலக்குகளின் செயல்பாடுகள் குறித்து இந்தக் கூட்டத் தில் மறுஆய்வு செய்யப்பட்டது. இந்தக் கூட்டத்தில் இந்தியா சார்பில் மத்திய நகரப்புற மேம்பாட்டுத்துறை இணையமைச்சர் ஹர்தீப் சிங் பூரி பங்கேற்றார்.

இதன்போது, ஐ.நா.சபையின் நீடித்த வளர்ச்சி இலக்குகளின் வெற்றி என்பது இந்தியாவின் கையில் உள்ளது. இந்த இலக்குகளை எட்ட பிரதமர் மோடி தலை மையிலான இந்திய அரசு உறுதியுடன் உள்ளது என மத்திய அமைச்சர் ஹர்தீப் சிங் பூரி தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து பி.டி.ஐ செய்தி நிறுவனத்துக்கு அவர் அளித்த பேட்டியில் கூறும்போது பத்தாயிரமாவது ஆண்டு வளர்ச்சி இலக்குகள் (எம்.டி.ஜி.) வெற்றி பெற்றன. சீன அரசு கோடிக் கணக்கான மக்களை வறுமையிலிருந்து மீட்டதே இந்த வெற்றிக்கு மிக முக்கிய பங்களிப்பாக அமைந்தது.

இதுபோல, ஐ.நா.சபையின் நீடித்த வளர்ச்சி இலக்குகளின் (எஸ்.டி.ஜி) வெற்றி என்பது இந்தியாவின் கையில் உள்ளது. இந்த இலக்குகளை எட்ட பிரதமர் மோடி தலைமையிலான இந்திய அரசு உறுதியுடன் உள்ளது. அதே நேரம் இந்த இலக்குகள் இந்தியாவுக்காக மட்டும் நிர்ணயிக்கப்படவில்லை.

உலக நாடுகள் முழுமைக்கும் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இதில் இந்தியா வெற்றி பெறும். சர்வதேச அளவிலான வெற்றிக்கு இது முக்கிய பங்களிப்பாக இருக்கும். ஏனெனில், இந்தியாவின் வெற்றி என்பது சுமார் 125 கோடி மக்களின் வாழ்க்கையில் தாக்கத்தை ஏற்படுத்தும்.

இந்தியா சுதந்திரம் பெற்றபோது 17 சதவீத மக்கள் நகர்ப்புறங்களில் வசித்தனர். இது இப்போது 30 சதவீதமாக அதிகரித்துள்ளது. இது 2030 இல் 40 சதவீதமாக அதிகரிக்கும். பிரதமரின் அனைவருக்குமான வீட்டுத் திட்டத்தின் கீழ் நகர்ப்புறங்களில் வசிக்கும் 1.1 கோடி பேருக்கு அடுத்த ஆண்டுக்குள் வீடு கட்டிக் கொடுக்க அரசு திட்டமிட்டுள்ளது என்றும் அவர் கூறியுள்ளார்.

# அரசியல் காழ்ப்புணர்ச்சியால் அ.தி.மு.கழக அரசு மீது பழி

## எதிர்க்கட்சியினரைச் சாடுகிறார் தமிழக முதல்வர்

அரசியல் காழ்ப்புணர்ச்சி காரணமாக அ.தி.மு.க. அரசு மீது எதிர்க்கட்சியினர் பழி சுமத்துகின்றனர் என தமிழக முதல்வர் கே.பழனிசாமி கூறியுள்ளார்.

கோவை விமானநிலையத்தில் செய்தியாளர்களிடம் அவர் மேலும் தெரிவிக்கையில் –

தி.மு.க. செயல் தலைவர் ஸ்டாலின் லண்டனுக்கு கிளம்பியபோது மழை தொடங்கியது. அவர் மீண்டும் தமிழகத்துக்கு வந்தவுடன் மழை நின்றுவிட்டது. சென்னையில் மாற்றுத்திறனாளி சிறுமியை பாலியல் பலாத்காரம் செய்தவர்களுக்கு கடும் தண்டனை பெற்றுத்தர நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

தமிழகத்தில் உள்ள அணைகளில் இருந்து, தேவையான பகுதிகளுக்கு பாசன நீரைத் திறந்து விடுமாறு பொதுப் பணித் துறையினருக்கு உத்தரவிடப்பட்டுள்ளது.

முட்டையில் முறைகேடு இல்லை. முட்டை கொள்முதலில் எந்த தவறும் நடக்கவில்லை. கடந்த 2013 ஆம் ஆண்டு முதல் இதுவரை ரூ.2031 கோடிக்கு டெண்டர் விடப்பட்டு, முட்டை கொள்முதல் செய்யப்பட்டுள்ளது. ஆனால் ரூ.5 ஆயிரம் கோடிக்கு ஊழல் நடந்துள்ளது எனக் கதை கட்டுகிறார்கள்.

இது எப்படி சாத்தியம்? பல மாநிலங்களைக் காட்டிலும் தமிழகத்தில் குறைந்த விலைக்கு, தரமான முட்டை கொள்முதல் செய்யப் பட்டு, மாணவர்களுக்கு வழங்கப்படுகிறது. தேசிய முட்டை ஒருங்கிணைப்புக் குழு முட்டை விலையை நிர்ணயிக்கிறது. எனவே, முட்டை கொள்முதலில் எந்த முறைகேடும் நடக்கவில்லை.

அரசியல் ஆதாயத்துக்காக பொய்ப் பிரச்சாரம் செய்கின்றனர். அ.தி.மு.க. உடையும் என சிலர் கருதுகின்றனர். அவர்களது எண்ணம் பலிக்காது என்றும் முதல்வர் கூறியுள்ளார்.

## 3 ஆண்டு காலப் பகுதியில் 1 லட்சத்து 10 ஆயிரம் வன்புணர்வு வழக்குகள்

2014 – 2016 ஆண்டுகளில் மட்டும் இந்தியாவில் 1 லட்சத்து 10 ஆயிரத்து 333 பாலியல் வன்புணர்வு வழக்குகள் பதிவாகியுள்ளன எனதெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்திய பெண்களுக்கு எதிரான வன்புணர்வு சம்பவங்கள் அதிகரித்து வரும் நிலையில், அவ்வாறான குற்றங்களில் ஈடுபடுபவர்களுக்கான தண்டனைகளையும் கடுமையாக்க வேண்டும் என்பன போன்ற வாதங்கள் பல்வேறு தரப்பினராலும் முன்வைக்கப்படுகிறது.

இந்நிலையில், நாடாளுமன்ற மேலவையில் பெண்களுக்கு எதிரான பாலியல் குற்ற சம்பவங்கள் தொடர்பான எழுத்துபூர்வ கேள்விக்கு பதிலளித்த மத்தியஅமைச்சர் கிரெண் ரிஜிஜு, 2014 முதல் 2016 வரையிலான காலகட்டத்தில் 1 லட்சத்து 10 ஆயிரத்து 333 வன்புணர்வு வழக்குகள் நாடுமுழுவதும் பதிவாகி உள்ளன எனத் தெரிவித்தார்.

அவற்றில் 2016 ஆம் ஆண்டில் 38 ஆயிரத்து 947 வழக்குகளும், 2015 ஆம் ஆண்டில் 34 ஆயிரத்து 651 வழக்குகளும் மற்றும் 2014ம் ஆண்டில் 36 ஆயிரத்து 735 வழக்குகளும் பதிவாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## இந்தியா – கானா இடையே இரண்டு ஒப்பந்தங்கள்!

இந்தியா மற்றும் கானா நாடுகள் இடையிலான உறவை வலுப்படுத்துவது தொடர்பாக இரண்டு ஒப்பந்தங்கள் கையெழுத்தாகியுள்ளன.

நான்கு நாட்கள் உத்தியோகபூர்வ விஜயமாக கானா நாட்டின் வெளியுறவுத்துறை அமைச்சர் ஷெர்லி போச்வே இந்தியா சென்றுள்ளார்.

மத்திய அமைச்சர் சுஷ்மா சுவராஜை சந்தித்து பேசிய ஷெர்லி போச்வே, இருநாடுகளுக்கு இடையே வளர்ச்சியில் ஒத்துழைப்பு, வர்த்தகம் மற்றும் முதலீடு குறித்து ஆலோசனை நடத்தினார்.

ஆலோசனைக்கு பிறகு இந்தியா மற்றும் கானா இடையிலான உறவினை வலுப்படுத்துவது தொடர்பான இரண்டு ஒப்பந்தங்கள் கையெழுத்தாகின.

இதுகுறித்து டுவிட்டரில் பதிவிட்டுள்ள வெளியுறவுத்துறை செய்தித்தொடர்பாளர் ராவிஷ் குமார், இரண்டு நாடுகளுக்கும் இடையே கலாசார பரிமாற்றம் மற்றும் ஒத்துழைப்பை வலுப்படுத்துவது தொடர்பான இரண்டு ஒப்பந்தங்கள் கையெழுத்தாகின என அவர் தெரிவித்துள்ளார்.

# ஈரானுடனான உறவில் மூன்றாவது நாட்டின் தலையீடு இல்லை: இந்தியா திட்டவட்டம்

ஈரான் நாட்டுடனான உறவில் மூன்றாவது நாட்டின் தலையீடு இல்லை என இந்தியா திட்டவட்டமாக கூறியுள்ளது.

ஈரானுடனான அணுசக்தி ஒப்பந்தத்தை முறித்துக்கொண்ட அமெரிக்கா, அந்த நாட்டில் இருந்து கச்சா எண்ணெய் இறக்குமதி செய்வதை நவம்பர் மாதம் 4 ஆம் திகதிக்குப் பிறகு, அனைத்து நாடுகளும் நிறுத்திக் கொள்ள வேண்டும் என்றும், அப்படி நிறுத்தாத நாடுகள் மீது பொருளாதார தடைகள் விதிக்கப்படும் என்றும் எச்சரிக்கை விடுத்துள்ளது.

ஈரானில் இருந்து இந்தியா அதிக அளவு கச்சா எண்ணெய் இறக்குமதி செய்து வருகிறது. ஈரானிலுள்ள



சபஹார் துறைமுகத்தை மேம்படுத்தும் பணியிலும் இந்தியா ஈடுபட்டுள்ளது.

எனவே, அமெரிக்காவின் எச்சரிக்கையை மீறி, ஈரானுடன் இந்தியா தொடர்ந்து பொருளாதார உறவுகளை தொடருமா? என்று கேள்வியெழுந்துள்ளது. இதுகுறித்து மக்களவையில் கேள்வியெழுப்பப்பட்டது.

இதற்கு பதிலளித்த வெளியுறவுத் துறை இணையமைச்சர் வி.கே. சிங் –

ஈரானுடனான உறவுகள் என்பது இந்தியாவின் சொந்த நிலைப்பாடு. இதில் 3ஆவது நாட்டின் தலையீடு இல்லை. இந்த விவகாரத்தில் நமது நாட்டின் நலன்களைக் காக்கத் தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் அரசு எடுக்கும்.

ஈரானுடனான அணுசக்தி ஒப்பந்தத்தில் இருந்து அமெரிக்கா விலகியதால் நேரிடும் பாதிப்புகள் உள்ளிட்டவற்றை இந்தியா உன்னிப்பாக கவனித்து வருகிறது என்றும் அவர் கூறியுள்ளார்.

# எடப்பாடி பழனிசாமி பதவி விலகவேண்டும்

## மு.க.ஸ்டாலின் வலியுறுத்தல்

தமிழகத்தில் முதலமைச்சருக்கு நெருக்கமானவர்கள் வீடுகள் மற்றும் அலுவலகங்களில் வருமான வரி சோதனை நடந்து வருகிறது. எனவே எடப்பாடி பழனிசாமி பதவியில் இருந்து விலக வேண்டும் என்று மு.க.ஸ்டாலின் கூறியுள்ளார்.

தி.மு.க செயல் தலைவரும், சட்டசபை எதிர்க்கட்சி தலைவருமான மு.க.ஸ்டாலின் நேற்று லண்டனில் இருந்து விமானம்மூலம் சென்னை திரும்பினார். சென்னை விமான நிலையத்தில் அவர் நிருபர்களுக்கு பேட்டி அளித்தார். அப்போது நிருபர்களிடம் தெரிவிக்கையில் –

முதலமைச்சராக இருக்கக்கூடிய எடப்பாடி பழனிசாமியின் சம்பந்தி மற்றும் அவருடைய 'பார்ட்னர்' ஆகியோருடைய வீடுகளிலும், அலுவலகங்களிலும் வருமான வரித்துறை சோதனை நடத்திய நேரத்தில் ரூ.180 கோடி ரொக்கமாகவும், 100 கிலோ தங்கமாகவும் பறிமுதல் செய்யப்பட்டிருக்கின்றன என ஊடகங்களில், பத்திரிகைகளில் தலைப்புச் செய்திகளாகவே வெளிவந்திருக்கின்றன.

பொதுப்பணித்துறை அமைச்சராகவும், முதலமைச்சராகவும் இருக்கக்கூடியவர் எடப்பாடி பழனிசாமி. இதுவரை முதலமைச்சருடைய உறவினர்களுக்கு இப்படி ஒரு 'டெண்டர்' விட்டதாக வரலாறு கிடையாது. இதுகுறித்து வெளிப்படையாகவே செய்திகள் வந்துகொண்டிருக்கும் நிலையில், எடப்பாடி பழனிசாமி இதுவரையில் வாய் திறக்காமல் அமைதியாக மௌனமாக இருந்து வருகிறார்.

மௌனம் சம்மதத்துக்கு அறிகுறி. ஆகவே, இதற்கு அவர் முழு பொறுப்பை ஏற்றுக்கொண்டு, விசாரணை முழு அளவில் சுதந்திரமாக நடைபெற வேண்டுமென்று சொன்னால் உடனடியாக எடப்பாடி பழனிசாமி தன்னுடைய முதலமைச்சர் பதவியிலிருந்து ராஜினாமா செய்வது தான் சாலப் பொருத்தமாக இருக்க முடியும்.

அதுமட்டுமல்ல, இந்தப் பிரச்சினையை பொறுத்தவரையில் லஞ்ச ஒழிப்புத்துறை மூலமாக விசாரணை நடத்தினால் தான் உண்மை வெளிவரும் என்று நான் நம்புகிறேன். ஏற்கனவே, இந்த ஆட்சியிலே தொடர்ந்து வருமான வரித்துறையினர் சோதனைகளை நடத்தி உள்ளனர்.

உதாரணமாக ராமமோகனராவ், அமைச்சர் விஜயபாஸ்கர், மணல் மாபியா சேகர் ரெட்டி போன்றவர்களுடைய இல்லங்களிலும், அலுவலகங்களிலும் சோதனை நடத்தப்பட்டிருக்கின்றன. அவை எல்லாம் என்ன ஆனது? என்பது இன்னும் கேள்விக்குறியாகவே உள்ளது.

அதுபோல இதுவும், நீர்த்துப் போவதற்குள் உடனடியாக லஞ்ச ஒழிப்புத்துறையிடம் ஒப்படைக்கப்பட்டு முழுமையான முறையான விசாரணை நடத்தப்பட வேண்டும் என்றும் அவர் கூறியுள்ளார்.

## முதல்வரிடமிருந்து...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நேற்றுமுன்தினம்மாலையில் கொழும்பில் ஊடகவியலாளர்களிடம் பேசிய போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் அங்கு மேலும் கூறிய வவை வருமாறு:-

இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் பதின்மூன்றாவது திருத்தச்சட்டத்தின் 154E என்றபகுதியிலே மாகாணசபை அமைச்சர்கள்நியமனம்தொடர்பில் குறிப்பிடப்பட்டுள்ளது. அதில் விளக்கமாகவும் கூறப்பட்டுள்ளது. அமைச்சர்களைநியமனம் செய்வது, தீர்மானிப்பது, பெயரிடுவது ஆளுநர் வசம் என்றுள்ளது. ஆயினும் மாகாண முதலமைச்சரின்ஆலோசனையின் பேரிலேயே அவை செய்யப்பட வேண்டும் என்று சொல்லப்பட்டுகின்றது.

முதலமைச்சர் விக்கினேஸ்வரன் தனது அமைச்சர்கள் மீது ஊழல் குற்றச்சாட்டுக்களை விசாரணை செய்வதற்காக ஒரு குழுவை அமைத்திருந்தார். அந்த குழுவை அமைத்தவர் அவரே. அவர் பரிந்துரைத்த அமைச்சர்கள்மீதேவிசாரணை செய்யவே அந்த குழுவையும் அமைத்தார்.

அந்தக் குழு விசாரணையின் முடிவில் சில அமைச்சர்கள்மீது குற்றங்களைக் கண்டுபிடித்து நிரூபித்திருந்தது. ஆயினும் நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்துள்ள டெனிஸ்வரனை அந்த குழு விசாரணையில் நிரபராதி என விடுதலை செய்திருந்தது.

ஆனால் இந்த அமைச்சர்களை இல்லாமல் செய்து புதிய அமைச்சர்களைநியமிக்குமாறு முதலமைச்சர் எனக்குப் பரிந்துரைத்தார். அதற்கு அமைய அவரின் ஆலோசனையை பெற்று சட்டத்திற்கு அமைவாக புதிய அமைச்சர்களை நியமித்தேன்.

இந்தச் செயற்பாட்டிற்கு எதிராக டெனிஸ்வரன் நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்தார். நீதிமன்றம் அவருக்கு இடைக்காலத் தீர்ப்பு வழங்கியிருக்கின்றது. அதில், அவர் அமைச்சுப் பொறுப்புக்களை தொடர்வதற்கு இடமளிக்க வேண்டும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

இது தொடர்பில், நீதிமன்ற உத்தரவுக்கு அமைய செய்ய வேண்டியவை சம்பந்தமாக உரிய விடயங்களைப் பரிந்துரைக்குமாறு எழுத்து மூலம் ஆளுநர் என்ற வகையில் முதலமைச்சரிடம் கோரிக்கை விடுத்திருந்தேன்.

ஆனால் இதுவரைப் பதில் வரவில்லை. எனது கடிதங்கள் நேரடியாகவும் தொலைநகல் மற்றும் அதிவேக தபால் மூலமாகவும் முதலமைச்சருக்கு அனுப்பி வைக்கப்பட்டன.

எனவே, நீதிமன்றத் தீர்ப்பின் காரணமாக, அதன் அடிப்படையில் பிரதம செயலாளருக்கு நான் ஓர் ஆலோசனை வழங்கியுள்ளேன். மறு அறிவித்தல் என்னால் வழங்கப்படும்வரை அமைச்சரவைக் கூட்டத்தைக் கூட்டவேண்டாம் என்று அதில் கூறியுள்ளேன்.ஆனால்மாகாண சபையைக் கூட்டவேண்டாம் என்றுஒருபோதும்நான்எங்கும் சொல்லவில்லை. - எனத் தெரிவித்தார்.

## பொன்னாலையில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விட்டு வெளியேறியுள்ளனர்.

22 வருடங்களாக அந்த அன்னதான மடத்தை ஆக்கிரமித்து வைத்திருந்த அவர்கள் நேற்று அங்கிருந்து வெளியேறினர். அன்னதான மடத்திற்கு சொந்தமானவர்கள் தொடர்ந்து விடுத்துவந்த வேண்டுகோளை அடுத்தே கடற்படையினர் வெளியேறினர்.

தமிழீழ விடுதலைப் புலிகளிடம் இருந்து கடந்த 1996 ஆம் ஆண்டு அரச படைகள் யாழ். குடாநாட்டைக் கைப்பற்றிய போது, பொன்னாலையும் இராணுவத்தினரின் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டது.

ஒருசில மாதங்களின்பின்னர் பொன்னாலை முற்றுமுழுதாகக் கடற்படையினரின் பொறுப்பில் ஒப்படைக்கப்பட்டது.

அன்று தொடக்கம் பொன்னாலை முதல் கீரிமலை வரையான கரையோரப் பிரதேசம் பொதுமக்களின் நடமாட்டம் அற்ற சூனியப் பிரதேசம் ஆக்கப்பட்டு கடற்படையினர் மட்டுமே ஆதிக்கம் செய்தனர்.

பொன்னாலையில் மக்களை மீள்குடியேற்ற அனுமதிக்குமாறு மக்கள் தொடர் போராட்டங்களை நடத்தியபோதிலும் அரசு இதற்கு அனுமதி வழங்கவில்லை. பொன்னாலைபெரும் கடற்படை முகாமாக மாற்றப்பட்டிருந்தது.

பொன்னாலை வரதராஜப் பெருமாள் ஆலயச் சூழலில் இருந்த கட்டடங்கள், மூன்று அன்னதான மடங்கள், தனியாரின் வீடுகள் போன்ற அனைத்திலும் கடற்படையினர் தங்கியிருந்தனர். சில கட்டடங்களில் பெண் கடற்படையினரும் தங்கியிருந்தனர்.

கடந்த 2009 ஆம் ஆண்டு யுத்தம் முடிவுக்கு கொண்டுவரப்பட்ட போதிலும் 2012 டிசம்பர் மாதமே பொன்னாலையில் மக்கள் மீள்குடியமர அனுமதிக்கப்பட்டனர்.

அப்போது ஏனைய கட்டடங்களில் இருந்த கடற்படையினர் வெளியேறிய போதிலும், இரு அன்னதானமடங்களில்மட்டும் கடற்படை தங்கியிருந்தது. சில ஆண்டுகளின் பின்னர் மற்றைய அன்னதான மடத்தில் இருந்தும் கடற்படை வெளியேறியது.

நேற்று, மூன்றாவது அன்னதான மடத்தையும் விட்டு அவர்கள் வெளியேறிச் சென்றுள்ளனர். கடற்படையின்பெரும்முகாமாக இருந்த பொன்னாலை வரதராஜப் பெருமாள் ஆலயச் சுற்றாடல் நேற்றுடன் படையினரின் எந்தக் காவலரணும் இல்லாத இடமாக மாறியிருக்கின்றது.

தற்போது, பொன்னாலைச் சந்தியிலும் பொன்னாலை குடிதண்ணீர் விநியோகத் திட்டவளாகத்திலும் இரு இடங்களில் கடற்படையினர் நிரந்தரக் காவலரண்களை அமைத்துத் தங்கியிருக்கின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. (உ)

## ரூ.8 ஆயிரம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இராஜாங்க அமைச்சர் நிரோஷன்பெரேராதெரிவித்துள்ளார்.

காணி, போக்குவரத்து, விவசாயம், உயர்கல்வி, மின்சக்தி, துறைகளில் அபிவிருத்திகளை மேற்கொள்வதற்கு இந்தக் கொடையை பயன்படுத்த முன்மொழியப்பட்டுள்ளது.

அமைச்சரவையின் அனுமதி பெறப்பட்ட பின்னர், முன்மொழியப்பட்டுள்ள அபிவிருத் தித் திட்டங்கள் தொடர்பான அமெரிக்காவின் கூட்டுத் திட்டப் பணியகத்துடன் இலங்கைப் பிரதமர் செயலகம், இறுதிக் கட்டப் பேச்சுக்களை நடத்தும் என்றும் அவர் தெரிவித்தார்.

## ஒத்திவைப்பு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கொண்டு வரப்பட்ட பிரேரணை, கோரம் இன்மையால் இடை நடுவில் இன்றைய தினத்துக்கு ஒத்திவைக்கப்பட் டது.

இந்தப் பிரேரணை நேற்று வரவிருந்த சமயத்தில் மஹிந்த ராஜபக்ஷ நாடாளுமன்றக் கூட்டத்தொடரைத்தவிர்க்கும் வகையில் சிங்கப்பூர் சென்றிருந்தார்.

நேற்று அவர் சபையில் இருக்கவில்லை. நேற்று மதியம் இந்தப்பிரேரணைஐ.தே.க. தரப்பினால் முன்வைக்கப்பட்டது.

ஆனாலும் அதன் மீதான உரைகள் ஆரம்பிக்கப்பட்டு முன்னெடுக்கப்பட்டபோது சபையில் கோரமின்மை சுட்டிக்காட்டப்பட்டது. இதையடுத்து ஒத்திவைப்பு வேளைப் பிரேரணை மீதான விவாதத்தை இன்றைய தினத்துக்கு ஒத்திவைத்து, சபை நடவடிக்கைகள் நேற்று மாலை முடிவுறுத்தப்பட்டன என நாடாளுமன்றச் செய்திகள் தெரிவித்தன. (உ)

## ஆயுதக் குழு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பெரும் சேதத்தை ஏற்படுத்தியது. பின்னர்பெற்றோல் குண்டுகளை வீசி வீட்டில் இருந்த பொருள்களுக்குத் தீயிட்டு எரித்தது.

மூன்று மோட்டார் சைக்கிள்களில் முகத்தைச் சீலையால் மறைத்துக்கட்டியபடிவந்த அட்டகாசக் கும்பல் ஒன்றே, இரண்டொரு நிமிடங்களில் இந்த அதிரடித்தாக்குதலை நடத்திவிட்டு வந்த வேகத்தில் ஓடித் தப்பியது.

வீட்டில் இருந்த வயோதிபத் தம்பதியருக்கு அக்குழு ஊறு ஏதும் ஏற்படுத்தவில்லை எனக் கூறப்பட்டது.

## கூட்டு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

செவ்வியில், ஜனாதிபதித் தேர்தலில் எதிரணியின் வேட்பாளர் தொடர்பாகஎழுப்பப்பட்ட கேள்விகளுக்கே அவர் இந்தப் பதிலை அளித்திருக்கிறார்.

ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர் தொடர்பாக மஹிந்த ராஜபக்ஷ அவசரப்பட்டு முடிவெடுப்பார் என்று நான் நினைக்கவில்லை. தேர்தலுக்கு இன்னும் 450 நாட்கள் வரை உள்ளன.

இந்தளவுக்கு முன்கூட்டியே வேட்பாளர் பற்றி நாம் முடிவு செய்ய வேண்டிய அவசியமில்லை என்று நினைக்கிறேன்.

முன்னர், பொதுமக்கள் மற்றும் அமைப்புகளுடன் அதிகம் கலந்துரையாடியே முடிவு எடுக்கப்பட்டது.

ஜனாதிபதி வேட்பாளர் தொடர்பாக, முடிவெடுக்க பல கட்சிகள், அமைப்புகளுடன் கலந்துரையாடும் முறையான நடைமுறைகளைப் பின்பற்ற வேண்டியுள்ளது.

நடைமுறைகளின்படி, மஹிந்த ராஜபக்ஷ இதனை சரியான நேரத்தில் மேற்கொள்வார். - என்றார் பஸில்

கேள்வி: வேட்பாளராக உங்களின் பெயர், கோட்டாபய ராஜபக்ஷ மற்றும் சமல் ராஜபக்ஷவின் பெயர்களும் அடிபடுகின்றனவே. உங்களுக்கு ஜனாதிபதி கனவு இருக்கிறதா?

பதில்: எனனிடம் அத்தகைய கனவுஇல்லை.பலரும்பல்வேறு கருத்துக்களை வெளியிடுகிறார்கள். அது அவர்களின் சுதந்திரம். தகுதியான பலர் இருக்கிறார்கள் என்பதையும் இது காட்டுகிறது.

நீங்கள் குறிப்பிட்ட பெயர்களைத் தவிர வேறு பல பெயர்களும் உலாவுகின்றன. அவர்களில் ராஜபக்ஷ குடும்பத்தைச் சேராதவர்களும் உள்ளனர்.

கேள்வி - ராஜபக்ஷ குடும்பத்துக்கு வெளியில் உள்ளவர்கள் யார்?

பதில்: அதனை நான் வெளிப்படையாகக்கூறவிரும்பவில்லை. ஜனாதிபதி வேட்பாளர்கள் குறித்து பேசுவதை நிறுத்திக் கொள்கிறேன்.அதுபற்றிமஹிந்த ராஜபக்ஷவே முடிவு செய்வார்.

அனைவருடனும் கலந்துரையாடி இறுதியான முடிவை எடுக்கும்எடுக்கும்உரிமைஅவருக்கு வழங்கப்பட்டுள்ளது.

கேள்வி: ஜனாதிபதி வேட்பாளருக்கான தகைமைகள் குறித்த உங்களின் கருத்து என்ன?

பதில்: மீண்டும் சொல்கிறேன், அதனை மஹிந்தராஜபக்ஷவே கவனித்துக் கொள்வார்.

## சட்டமா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தலைமையகமான சிறிகொத்தவில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில், ஊடகவியலாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்கு பதிலளித்த போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

தாம் வகித்துவந்த இராஜாங்க அமைச்சுப் பதவியை விஜயகலா இராஜினாமா செய்திருந்த நிலையில், அவரது நாடாளுமன்ற உறுப்புரிமையும் நீக்கப்பட வேண்டுமென எதிர்த்தரப்பினர் கோரி வருகின்றனர். எனினும், அவ்வாறு தகுதி நீக்குவதற்கு சட்டத்தில் இடமில்லையென எரான் சுட்டிக்காட்டினார்.

மேலும், விஜயகலாவின் கருத்து தொடர்பான சகல விடயங்களும் சட்டமா அதிபருக்கு வழங்கப்பட்டுள்ளன எனவும், இன்னும் ஓரிரு நாட்களில சபாநாயகர் கரு ஜயசூரியவிடம் முழுமையான அறிக்கை சமர்ப்பிக்கப்படும்என்றும்எரான்விக்ரமரத்ன மேலும் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் வன்முறைகள் அதிகரித்துச் செல்வதை சுட்டிக்காட்டி, விடுதலைப்புலிகளின் அவசியம் தொடர்பான கருத்தொன்றை இம்மாத முற்பகுதியில் யாழில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் விஜயகலா தெரிவித்திருந்தார். இது பாரிய சர்ச்சைகளை ஏற்படுத்தியிருந்த நிலையில், விஜயகலா தமது இராஜாங்க அமைச்சுப் பதவியை இராஜினாமா செய்தமை குறிப்பிடத்தக்கது.

## புதனிரவு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தைக் காட்டியே இவர் பழிவாங்கப்பட்டுள்ளார் என்று கூறப்பட்டது.

சந்தேகநபரான ஆசிரியர் வன்னிப்பகுதியில்நீண்டகாலம் பணியாற்றி அங்குள்ள மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்குப் பங்காற்றியவர். பொருளியல் ஆசிரியரான இவர் ஒழுக்கமுடையவர். நிரவாக ரீதியான பழிவாங்கலுக்குள்ளான இவரைப் பிணையில் விடுவிக்க வேண்டும் என்று சட்டத்தரணி வீரகத்திப்பிள்ளை கௌதமன் மன்றில்விண்ணப்பம்செய்தார்.

வழக்கைத் தாக்கல் செய்த யாழ்ப்பாணம் பொலிஸாரும் சந்தேகநபருக்கு பிணை வழங்குவதற்கு ஆட்சேபனை தெரிவிக்கவில்லை.

இரு தரப்பு விண்ணப்பங்களையும் ஆராய்ந்த யாழ்ப்பாணம் நீதிமன்ற நீதிவான் சின்னத்துரை சதீஸ்தரன், சந்தேகநபரை ஆள் பிணையில் விடுவித்து உத்தரவிட்டார்.

யாழ்ப்பாணம் நகரப்பகுதிக் கல்லூரி ஒன்றின் ஆசிரியர் ஒருவர், அந்தப் பாடசாலையில் தரம் 7இல் கல்வி பயிலும் மாணவிகள் இருவரை பாலியல் ரீதியாகத் துன்புறுத்தினார் என யாழ்ப்பாண மாவட்ட சிறுவர் பாதுகாப்பு பிரிவினரால் யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் நேற்றுமுன்தினம் முறைப்பாடு செய்யப்பட்டது.

அது தொடர்பில் விசாரணைகளை முன்னெடுத்த யாழ்ப்பாணம் பொலிஸார் குற்றஞ்சாட்டப்பட்ட ஆசிரியரை நேற்று முன்தினம் இரவு கைது செய்தனர்.

ஆசிரியர் விசாரணைகளின் பின்னர் யாழ்ப்பாணம் நீதிமன்றில் நேற்று அவர் முற்படுத்தப்பட்டார்.

இதன்போதே அவருக்கு பிணை வழங்கப்பட்டது.

## சுதந்திரபுரத்தில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

போதே கிணற்றுக்குள் அபாயகரமானவெடிபொருள்கள் இருப்பது கண்டறியப்பட்டது.

இதனைத் தொடர்ந்து சுதந்திரபுரம் மத்திய பகுதியில் நிலைகொண்டிருந்த கடற்படையினருக்குத் தகவல் வழங்கப்பட்டது. வடக்குக் கடற்படை உயரதிகாரியர் அட்மிரல் விக்ரம்சிங்க தலைமையில் நேற்றுமுன்தினம் அந்தப் பகுதிக்குச் சென்ற கடற்படையின் விசேட அணியினரும்பொலிஸாரும் அகழ்வு பணியில் ஈடுபட்டனர்.

அப்போது விடுதலைப் புலிகளின் தயாரிப்பில் உருவாகிய பசீலன் 2000 ரக ஆட்லறி ஷெல் - இரண்டு உள்ளிட்ட இராணுவ வெடிபொருள்கள் சில மீட்கப்பட்டன. இந்த அகழ்வு பணி நேற்று பிற்பகல் தற்காலிகமாக இடை நிறுத்தப்பட்ட பின்னர் நேற்றும் தொடர்ந்து இடம்பெற்றது எனப் புதுக்குடியிருப்பு பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த அகழ்வுப்பணி நீதிமன்றத்தின் அனுமதியுடன் நீதிமன்றப் பதிவாளர் உள்ளிட்ட அதிகாரிகள் முன்னிலையில் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது

இயந்திரவலுபோதாமையால் நேற்றும் இந்த அகழ்வுப் பணி நிறுத்தப்பட்டு இன்று மீண்டும் இடம்பெறவுள்ளது எனவும் தெரிவிக்கப்பட்டது.

## ஐ.தே.க...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இடம்பெற்ற வன்முறைகள் தன்னைப் பாதிக்கக் கூடியதாக அதிருப்தியடைய வைத்தன. அவைதான் விடுதலைப் புலிகள் தொடர்பில் நான் பேசுவதற்கு காரணமாக இருந்தன என்று தனது எழுத்துமூல சமர்ப்பணத்தில் நாடாளுமன்ற உறுப்பினர் விஜயகலா மகேஸ்வரன் சுட்டிக்காட்டியுள்ளார் என அறிய வந்தது.

யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில்கடந்த 2ஆம்திகதி இடம்பெற்ற அரச நிகழ்வில் உரையாற்றிய முன்னாள் இராஜாங்க அமைச்சர் விஜயகலா மகேஸ்வரன், தமிழீழ விடுதலைப் புலிகளின் கை ஓங்க வேண்டும் என்று தெரிவித்தார்.

இதனையடுத்து தென்னிலங்கையிலும் நாடாளுமன்றிலும் எழுந்த சர்ச்சையை அடுத்து அவர்தனது இராஜாங்கஅமைச்சுப் பதவியைத் துறந்தார்.

அத்துடன், நாடாளுமன்ற உறுப்பினர் தெரிவித்த கருத்து அரசமைப்பை மீறுகின்றதா என்று ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிக்க சட்ட மா அதிபருக்கு சபாநாயகர்அறிவுறுத்தல்வழங்கியுள்ளார்.

மேலும் ஐக்கிய தேசிய கட்சியின்கொள்கைக்கு மாறாக விஜயகலா மகேஸ்வரன் நடந்து கொண்டார் எனத் தெரிவித்து ஒழுக்காற்றுநடவடிக்கைக்குழுவை அந்தக் கட்சி நியமித்தது.

கட்சியின்பொதுச்செயலாளர் அகிலவிராஜ்காரியவசம், தலதா அத்துக்கொறளை மற்றும் ரஞ்சித் மத்தும பண்டார ஆகியோர் அந்தக் குழுவில் இடம் பெற்றுள்ளனர்.

இந்தக் குழுவுக்கே நாடாளுமன்ற உறுப்பினர் விஜயகலா மகேஸ்வரன் தனது விளக்கத்தை முன்வைத்துள்ளார்.

இதேவேளை, விஜயகலா மகேஸ்வரன் தெரிவித்த கருத்துத் தொடர்பில் 20 பேரின் வாக்குமூலம்பெறப்பட்டுசட்டமா அதிபருக்குஅனுப்பிவைக்கப்பட்டுள்ளதாக குற்றப் புலனாய்வுத் திணைக்களம் தெரிவித்துள்ளது.



# ஒரு நாள் துடுப்பாட்டத் தரவரிசை; கோஹ்லி தொடர்ந்து முதலிடத்தில்

ஒருநாள் கிரிக்கெட் போட்டி துடுப்பாட்டத் தரவரிசையில் இந்திய அணியின் தலைவர் விராட்கோஹ்லி முதலிடத்தில் நீடிக்கிறார்.

ஒருநாள் கிரிக்கெட் போட்டி அணிகள் மற்றும் வீரர்களின் தரவரிசைப் பட்டியலை சர்வதேச கிரிக்கெட் சபை (ஐ.சி.சி.) நேற்றுமுன்தினம் வெளியிட்டது. இந்தியாவுக்கு எதிரான ஒருநாள் போட்டி தொடரை வென்ற இங்கிலாந்து அணி (127 புள்ளிகள்) முதலிடத்தில் நீடிக்கிறது. இந்திய அணி (121 புள்ளிகள்) 2ஆவது இடத்தில் தொடருகிறது. தென்னாபிரிக்கா (113 புள்ளிகள்) 3ஆவது இடமும், நியூசிலாந்து (112 புள்ளிகள்) 4ஆவது இடமும், பாகிஸ்தான் (103 புள்ளிகள்) 5ஆவது இட மும், ஆஸ்திரேலியா (100 புள்ளிகள்) 6ஆவது இடமும், வங்காளதேசம் (93 புள்ளிகள்) 7ஆவது இடமும் வகிக்கின்றன.

துடுப்பாட்டத் தரவரிசையில் இந்திய அணியின் தலைவர் விராட்கோஹ்லி (911 புள்ளிகள்) முதலிடத்தில் நீடிக்கிறார். இந்தியாவுக்கு எதிரான போட்டி தொடரில் 2 சதங்கள் விளாசிய இங்கிலாந்து வீரர் ஜோரூட் (818 புள்ளிகள்) 4 இடம் முன்னேறி முதல் முறையாக 2ஆவது இடத்தை பிடித்துள்ளார். பாபர் அசாம் (பாகிஸ்தான்), ரோகித் சர்மா (இந்தியா), டேவிட் வோர்னர் (ஆஸ்திரேலியா), ரோஸ் டெய்லர் (நியூசிலாந்து) ஆகியோர் ஓர் இடம் சரிந்து முறையே 3 முதல் 6 இடங்களைப் பெற்றுள்ளனர். இந்திய வீரர் ஷிகர் தவான் 10ஆவது இடத்தைப் பிடித்துள்ளார்.

பந்து வீச்சாளர் தரவரிசையில் இந்திய வேகப்பந்து வீச்சாளர் ஜஸ் பிரித் பும்ரா (775 புள்ளிகள்) முதலிடத்தில் நீடிக்கிறார். ஆப்கானிஸ்தான் வீரர் ரஷித்கான் (763 புள்ளிகள்) 2ஆவது இடமும், பாகிஸ்தான் வீரர் ஹசன் அலி (750 புள்ளிகள்) 3 ஆவது இடமும், நியூசிலாந்து வீரர் டிரென்ட் பவுல்ட் (699 புள்ளிகள்) 4ஆவது இடமும், ஆஸ்திரேலிய வீரர் ஹேசில்வுட் (696 புள்ளிகள்) 5ஆவது இடமும் வகிக்கின்றனர். இந்திய வீரர்கள் குல்தீப் யாதவ் (684 புள்ளிகள்) 6ஆவது இடத்தையும், யுஸ்வேந்திர சாஹல் (666 புள்ளிகள்) 10ஆவது இடத்தையும் பிடித்துள்ளனர். ஆல் – ரவுண்டர் தரவரிசையில் வங்காள தேச வீரர் கிப் அல்– ஹசன் (360 புள்ளிகள்) முதலிடத்தில் நீடிக்கிறார்.

## ஒருநாள் ஆட்டங்களிலிருந்தும் ஓய்வுக்கு டோனி தயார்?



இங்கிலாந்துக்கு எதிரான ஒருநாள் தொடரில் தோல்வி அடைந்த அந்த கடைசி ஆட்டத்தில் – ஆட்டம் முடிந்ததும் மத்தியஸ்தரிடம் தேடிச் சென்று டோனி பந்தை வாங்கி சென்றமையால் அவர் ஒருநாள் போட்டியில் இருந்து ஓய்வு பெறப்போகிறாரோ என்ற கேள்வி எழுந்துள்ளது.

இங்கிலாந்துக்கு எதிரான ஒருநாள் கிரிக்கெட் போட்டி தொடரில் இந்திய அணியின் விக்கெட் கீப்பரும், முன்னாள் அணித் தலைவருமான டோனி 2ஆவது ஆட்டத்தில் 59 பந்துகளில் 37ஓட்டங்களும், கடைசி ஆட்டத்தில் 66 பந்துகளில் 42 ஓட்டங்களும் எடுத்தார். டோனியின் மிக நிதானமான ஆட்டம் விமர்சனத்துக்கு உள்ளானது.

லீட்ஸில் செவ்வாய்க்கிழமை நடந்த இங்கிலாந்துக்கு எதிரான கடைசி ஒரு நாள் போட்டியில் இந்திய அணி தோல்வி அடைந்து தொடரையும் இழந்தது. தோல்வி கண்டு வீரர்கள் அனைவரும் பெவிலியன் திரும்பியபோது டோனி, நடுவரிடம் இருந்து ஒரு பந்தைக் கேட்டு வாங்கினார். இந்த வீடியோ சமூக வலைதளங்களில் வைரலாக பரவி வருகிறது. பொதுவாக போட்டி தொடரை வென்றாலோ அல்லது சிறப்பாக பந்து வீசினாலோ வீரர்கள் ‘ஸ்டம்ப்’ அல்லது பந்தை நினைவாக எடுத்துச் செல்வார்கள்.

தோல்வி அடைந்த ஆட்டத்தில் டோனி பந்தை வாங்கிச் சென்றதால் அவர் ஒரு நாள் போட்டியில் இருந்து ஓய்வு பெறப் போகிறாரோ என்ற கேள்வி எழும்பி இருக்கிறது. 37 வயதான டோனி 2014 ஆம் ஆண்டில் டெஸ்ட் போட்டியில் இருந்து விடைபெற்றார். ஒருநாள் மற்றும் 20 ஓவர் போட்டியில் மட்டும் விளையாடி வருகிறார்.



## உலகக் கிண்ண சம்பளம், போனஸை தொண்டு நிறுவனத்துக்கு அன்பளித்த மப்பே

பிரான்ஸ் அணியின் இளம் உதைப்பந்தாட்ட வீரரான மப்பே தனது உலகக் கிண்ண சம்பளம் மற்றும் போனஸை தொண்டு நிறுவனத்திற்கு நன்கொடையாக வழங்கியுள்ளார்.

உலகக் கிண்ண உதைபந்து தொடர் ரஷ்யாவில் கடந்த மாதம் 14ஆம் திகதி வரை – கடந்த ஞாயிற்றுக்கிழமை வரை நடைபெற்றது. இதில் பிரான்ஸ் அணி சம்பியன் பட்டம் வென்றது.

இந்த அணியில் 19 வயதே ஆன கிலியான் மப்பே இடம் பிடித்திருந்தார். இவர் அபாரமான ஆட்டத்தை வெளிப்படுத்தி ரசிகர்களின் நன்மதிப்பைப் பெற்றார்.

உலகக் கிண்ணத் தொடர் தொடங்குவதற்கு முன் உலகக் கிண்ணத் தொடரில் கிடைக்கும் சம்பளம் மற்றும் போனஸை மாற்றுத் திறனாளி குழந்தைகளுக்கு விளையாட்டுதிறனை பயிற்சிக்கும்தொண்டு நிறுவனத்திற்கு வழங்குவார் என அறிவித்தார். அதன்படி மப்பே ஒரு போட்டிக்கு தலா 29 ஆயிரம் டொலர் சம்பளமாகப் பெற்றார்.

இதன்மூலம் 7 போட்டிகளில் விளையாடி இரண்டு லட்சத்து 3 ஆயிரம் டொலர் சம்பளமாக பெற்றார். உலகக் கிண்ணத்தை வென்றதால் போனஸாக மூன்று லட்சத்து 50 ஆயிரம் டொலர் கிடைத்தது. இரண்டையும் சேர்த்து கிடைத்த 5 லட்சத்து 53 ஆயிரம் டொலரை (இலங்கைப் பணத்தில் சுமார் 9 கோடி ரூபாவைத் தற்போது நன்கொடையாக வழங்கியுள்ளார்.

## ரொனால்டோவை விற்றமை மிகப் பெரும் வரலாற்றுத் தவறு

### ரியல் மாட்ரிட் முன்னாள் தலைவர் விசனம்



ரியல் மாட்ரிட் கிறிஸ்டியானோ ரொனால்டோவை யுவான்டஸ் அணிக்கு விற்றமை வரலாற்றுப் பிழை என்று முன்னாள் தலைவர் கவலை தெரிவித்துள்ளார்.

போர்த்துக்கல் கால்பந்து அணித் தலைவரான கிறிஸ்டியானோ ரொனால்டோ உலகின் தலைசிறந்த வீரராக திகழ்ந்து வருகிறார். இவர் ரியல் மாட்ரிட் அணிக்காக கடந்த 2009ஆம் ஆண் டில் இருந்து 2018 வரை விளையாடினார். தற்போது யுவான்டஸ் அணிக்கு சென்றுள்ளார். பத்துக் கோடி பவுண்டுக்கு இடமாற்றம் ஆகியுள்ளார்.

யுவான்டஸ் அணி அவரை மிகவும் மகிழ்ச்சியாக வரவேற்றுள்ளது. ஆனால், ரியல் மாட்ரிட் அணி ரசிகர்களுக்கு இது சற்று வருத்தத்தைக் கொடுத்துள்ளது.

இந்நிலையில், முன்னாள் ரியல் மாட்ரிட் அணியின் தலை வரான ரமோன் கால்டெரோன், ரியல் மாட்ரிட் அணி மிகப்பெரிய தவறு செய்துள்ளது. அத்துடன் வரலாற்றுப் பிழை செய்துள்ளது என்று தெரிவித்துள்ளார்.

காலைக்கதிர் Kalaikkathir



# சர்வதேசப் பெண்கள் மாநாடு யாழில் நாளையும் மறுதினமும்

## பிரதமரின் பாரியார் தொடக்கி வைக்கிறார்

'யுத்தத்தின் பின்னரான சூழலில் பெண்களின் தலைமைத்துவம் மற்றும் வலுவூட்டல்' என்ற தலைப்பிலான சர்வதேச பெண்கள் மகாநாடு எதிர்வரும் 21-22 திகதிகளில் யாழ்ப்பாண பொது நூலகத்தில் காலை 9.30 மணிக்கு ஆரம்பமாகி தொடர்ந்து இரண்டுதினங்கள் நடைபெறுகிறது. இந்தநிகழ்வின் பெண்கள் தொடர்பான ஆய்வுகள் சமர்ப்பிக்கப்பட்டு விவாதிக்கப்படுவதோடு எதிர்காலத்தில் பெண்கள் தொடர்பான அபிவிருத்தித் திட்டங்கள் மற்றும் கொள்கை வகுப்பிற்கான முன்மொழிவுகளும் முன்வைக்கப்படவுள்ளன.

யாழ் மாவட்ட அரச சார்பற்ற நிறுனங்களின் இணையம் இந்த ஆய்வு மகாநாட்டை ஒழுங்கு செய்து நடத்துகிறது. முப்பதிற்கும் மேற்பட்ட வெளிநாட்டவர்கள் பல்வேறு நாடுகளிலுமிருந்து வருகைதந்து தமது ஆய்வுக் கட்டுரைகளைச் சமர்ப்பிக்கிறார்கள்.

ஆய்வு மகாநாட்டின் ஆய்வுத் தொடக்கவுரையை பிரதம மந்திரியின் பாரியார் பேராசிரியர் மைத்திரி விக்கிரமசிங்க நிகழ்த்தவுள்ளார். தொடக்க நிகழ்வில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் பேராசிரியர் ரட்ணம் விக்னேஸ்வரன் பிரதமவிருந்தினராகக் கலந்து சிறப்பிக்கவுள்ளார். நிகழ்வில் யாழ் மாவட்ட அரசாங்க அதிபர் விசேட விருந்தினராகவும். தமிழ்நாட்டின் எத்திராஜ் பல்கலைக் கழகத்தின் பேராசிரியர் ஆர்.மல்லிகா சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொள்கிறார்.

ஆய்வு மகாநாட்டின் இறுதிநாள் சான்றிதழ் வழங்கும் வைபவத்தில் வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வீ.விக்னேஸ்வரன் பிரதமவிருந்தினராகக் கலந்து சிறப்பிக்கிறார். கிழக்கு பல்கலைக்கழகத்தைச் சார்ந்த கலாநிதி சாந்தி கேசவன், மாற்றுத்தினாளி பெண்கள் அமைப்பைச் சார்ந்த வெற்றிச்செல்வி மற்றும் தமிழ்நாட்டின் திறந்த பல்கலைக்கழகத்தின் பேராசிரியர் அனந்தகிருஷ்ணன் செந்தில்வேல் ஆகியோர் சிறப்புவிருந்தினர்களாகக் கலந்து சிறப்பிக்கிறார்கள். உலகெங்கிலும் தமிழர் தொன்மை சார் ஆய்வுகளை மேற்கொள்ளும் தமிழ்நாட்டைச் சேர்ந்த சிவ பாலசுப்பிரமணியம் (ஒரிசா பாலு) சிறப்புரை நிகழ்த்தவுள்ளார்.

ஆய்வு மகாநாட்டில் எட்டுத் தலைப்புக்களில் அறுபது ஆய்வுகள் சமர்ப்பிக்கப்படுகின்றன. உள்நாட்டையும், வெளிநாடுகளையும் சேர்ந்த 83 ஆய்வாளர்கள் இதில் பங்குகொள்கிறார்கள்.



பால்நிலை சமத்துவம், பெண்களின் பொருளாதாரம் மற்றும் வலுவூட்டல், பெண்களின் உளசமூக மேம்பாடு, சமூக்கட்டமைப்பு மற்றும் பாதுகாப்பு, பெண்களும் ஊடகமும், கட்டிளமைப்பருவத்தினரும் மாறிவரும் சூழலும் என்ற தலைப்புக்களில் ஆய்வுகள் சமர்ப்பிக்கப்படவுள்ளன. மகாநாட்டில் பங்கு கொள்ளவிரும்புபவர்கள் 021 2223668 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டு பதிவுகளை மேற்கொள்ளலாம் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

# மணிவண்ணனின் உரை தொடர்பில் நடவடிக்கை எடுக்குமாறு வலிறுத்தல்

## பொலிஸ்மா அதிபருக்கு தேர்தல் ஆணையம் கடிதம்

தேர்தல்கள் ஆணைக் குழுவின் உறுப்பினர் இரட்னஜீவன் எச் கூலை அச்சுறுத்தும் வகையில் யாழ்ப்பாணம் செய்திப் பத்திரிகை ஒன்றின் ஊடாக முன்னெடுக்கப்பட்ட நடவடிக்கை தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்டு அறிக்கை சமர்ப்பிக்குமாறு பொலிஸ் மா அதிபர் பூஜித ஜயசுந்தரவுக்கு தேர்தல்கள் ஆணைக் குழுவின் தலைவர் மஹிந்த தேசப்பிரிய அறிவுறுத்தியுள்ளார்.

தேர்தலுக்குப் பொறுப்பான மூத்த பிரதிப் பொலிஸ் மா அதிபர் சீ.டீ. விக்ரமரட்ண ஊடாக இந்த அறிவுறுத்தல் கடிதம் கடந்த 26ஆம் திகதி பொலிஸ் அதிபருக்கு தேர்தல்கள் ஆணைக் குழுவின் தலைவரால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

அந்தக் கடித்தத்தின் தமிழாக்கம் தற்போது ஊடகங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் யாழ் மேயர் வேட்பாளர் மணிவண்ணனின் உரை ஒன்றைப் பிரசுரித்தமைக்காகவே அந்தப் பத்திரிகைக்கு எதிராகக் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

ஆணைக்குழுவின் தலைவரால் பொலிஸ்மா அதிபருக்கு எழுதப்பட்டுள்ள கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

மேற்படி செய்திப் பத்திரிகை ஊடாக கடந்த ஜனவரி 18ஆம் திகதி தேர்தல்கள் ஆணைக் குழுவின் உறுப்பினர் பேராசிரியர் இரட்ஜீவன் எச் கூலை இலக்காக வைத்து அச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் யாழ்ப்பாணம் பொலிஸ் அத்தியட்சகரிடம் கடந்த ஜனவரி 19ஆம் திகதி அவர் முறைப்பாடு செய்தார். எனினும் பொலிஸ் அத்தியட்சகர் அதனை தேர்தல் முறைப்பாடு எனக் கருதி சட்ட மா அதிபரின் ஆலோசனைக்கு அனுப்பி வைத்துள்ளார். 2 வாரத்துக்குள் சட்டமா அதிபரின் ஆலோசனையைப் பெற்று நடவடிக்கை எடுக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்ட போதும் அது இடம்பெறவில்லை.

இது தொடர்பில் கொழும்பு குற்றப் புலனாய்வுத் திணைக்களத்துக்கு வந்து முறைப்பாடு வழங்குமாறு கோரப்பட்ட போதும் அவரிடம் அந்த முறைப்பாடு பெற்றுக் கொள்ளப்படவில்லை.

இந்த அச்சுறுத்தல் தொடர்பில் காணொலி சாட்சிகள் உள்ள போதும் புறச் சாட்சிகள் உள்ள போதும் அவற்றை முறையாகப் பதவிடாமல் யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றுக்கு அறிக்கையிட்டுள்ளமையை மிக கவலையுடன் சுட்டிக்காட்ட வேண்டியுள்ளது.

மேற்படி செய்திப் பத்திரிகை ஊடாக அறிக்கையிட்ட வி.மணிவண்ணனின் அச்சுறுத்தல் தொடர்பாக கடந்த ஜனவரி 18ஆம் திகதி உங்களுக்கு கடிதம் மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது.

பத்திரிகை ஊடாக வெளியிடப்பட்ட உரிய அச்சுறுத்தல் பற்றிய வாய்மொழிப் பதிவு ஏதும் அந்தப் பத்திரிகையின் ஆசிரியர் அல்லது செய்தியாளரிடம் குறித்துக் கொள்ளப்பட்டதாகத் தெரியவில்லை.

பத்திரிகை ஊடாக அச்சுறுத்தல் வெளிப்படுத்தப்பட்டமையால் முறைப்பாட்டாளருக்கு மிகப் பாரதூரமான வகையில் உயிருக்கு அச்சுறுத்தல் உணரப்பட்டமையால் 2018.02.10ஆம் திகதி தேர்தல் நடைபெற்ற தினம் வரை முறைப்பாட்டாளர் யாழ்ப்பாணப் பிரதேசத்தில் சட்ட ரீதியான கடமையிலிருந்து அகன்று வேறு பிரதேசங்களி நாள்களைக் கழித்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பாக குற்றப் புலனாய்வுத் திணைக்களம் உரிய விசாரணைகளை முன்னெடுப்பதாகத் தெரிவிக்கப்பட்ட போதும் அதன் முன்னேற்றம் தொடர்பில் எந்த தகவலும் எமக்குத் தெரிவிக்கப்படவில்லை.

இலங்கை அரசமைப்பின் 103 ஆம் உறுப்புரிமைக்கு அமைய நிறுவப்பட்ட தேர்தல்கள் ஆணைக்குழு தேர்தலை சுதந்திரமாகவும் நீதியாகவும் நடத்தும் கடப்பாடுடையதாக விளங்குகின்றது.

ஆணைக்குழுவின் உறுப்பினர்கள், பணியாட்குழுவினர் தேர்தலை சுதந்திரமாகவும் நீதியாகவும் அச்சமும் ஐயமுமின்றியும் தமது பணியை வழங்குவதற்கு சந்தர்ப்பம் இல்லையெனில் அது ஒரு பாரதூரமான விடயம் என்பதை நான் சொல்லித் தெரிய வேண்டியதில்லை.

இந்த முறைப்பாடு தொடர்பில் உரிய எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் திருப்தியடையும்வகையில் இல்லை. எனவே இது தொடர்பில் உங்களின் தனிப்பட்ட அக்கறையைச் செலுத்தி விசாரணைகள் மற்றும் நீதிமன்ற நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என விநயமாக எதிர்பார்க்கின்றேன். - என்றுள்ளது.

## சிவசிதம்பரம் பிறந்தநாள் நினைவு இன்று யாழில்



உடுப்பிட்டிச் சிங்கம், நல்லூர் சிவா, சிம்மக் குரலோன் என எல்லாம் அன்போடு அழைக்கப்பட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் முன்னாள் பிரதிச் சபாநாயகருமான அமரர் மு. சிவசிதம்பரத்தின் 95ஆவது பிறந்த நாள் நினைவு இன்று மாலை 5.00 மணியளவில் தமிழர் விடுதலைக் கூட்டணியின் யாழ் நாச்சிமார் கோவிலடி தலைமைக் காரியாலத்தில் நடைபெற உள்ளது.

# பத்தமேனி பத்ரகாளியம்பாள் சித்திரத் தேர் வெள்ளோட்டம்









யாழ். அச்சுவேலி பத்தமேனி வடபத்திரகாளியம்பாள் ஆலயத்திற்கெனப் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட புதிய சித்திரத் தேர் வெள்ளோட்ட விழா நேற்று வியாழக்கிழமை சிறப்பாக இடம் பெற்றது.

நேற்று முற்பகல் வடபத்திரகாளியம்பாளுக்கு விசேட பூசை வழிபாடுகள் இடம்பெற்றமையைத் தொடர்ந்து வெள்ளோட்ட விழாக் கிரியைகள் ஆரம்பமாகின. கிரியைகளைத் தொடர்ந்து அடியவர்களின் அரோகராக் கோஷம் முழங்க ஆண் அடியவர்கள் ஒருபுறமும், பெண் அடியவர்கள் மறுபுறமும் வடம் தொட்டிழுக்கப் புதிய சித்திரத் தேர் ஆலய வீதியில் பவனி வந்தது.

சித்திரத்தேர் வெள்ளோட்டம் நிறைவுபெற்றதைத் தொடர்ந்து சித்திரத் தேரை நிர்மாணித்த ஆச்சாரியார்கள் ஆலய நிர்வாக சபையினரால் விசேடமாகக் கௌரவிக்கப்பட்டனர்.

பலவருடங்கள் பழமை வாய்ந்த இவ்வாலயத்தில் கடந்த - 2016 ஆம் ஆண்டு முதல் வருடாந்த மஹோற்சவம் சிறப்பாக இடம்பெற்று வருகிறது. இந்த நிலையில் பத்தமேனி கிராமத்தைச் சேர்ந்த உள்நாட்டு மற்றும் புலம்பெயர் அடியவர்களின் சுமார் 50 லட்சம் ரூபாவுக்கு மேற்பட்ட நிதிப் பங்களிப்பில் இவ்வாலயத்துக்கான புதிய சித்திரத் தேர் நிர்மாணிக்கப்பட்டுள்ளது.

அச்சுவேலி பத்தமேனியைச் சேர்ந்த சிற்பாசாரியார் சரவணமுத்து ஜெயராஜ் தலைமையிலான சிற்பாசாரியார்களால் கடந்த ஒரு வருடத்துக்கு முன்னர் இவ்வாலயத்தின் புதிய சித்திரத் தேர் நிர்மாணத் திருப்பணிகள் ஆரம்பிக்கப்பட்டிருந்தன. புதிய சித்திரத் தேர் பல்வேறு கலையம்சங்களும் பொருந்திய வகையில் அழகுறக் காட்சி தருகின்றமையும் குறிப்பிடத்தக்கது

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள சிவராம் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 672B கே.கே.எஸ் வீதியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 20.07.2018 இல் அச்சிடப்பட்டு வெளியிடப்பெற்றது.